# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 18 கார்த்திகை 28ஆம் நாள் வியாழக்கிழமை 14 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## மருத்துவக் கற்கைக்கான குறைந்த தகுதி முடிவானது

கொழும்பு, டிசெ. 14
மருத்துவக் கற்கைகளுக்கு ஆகக் குறைந்த தகைமைகளை உள்ளடக்கி மருத்துவ சபை சட்டவரைவை தயாரித்துள்ளது. இதனை வெளியிடுவது தொடர்பில் இலங்கை மருத்துவ சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் ஆகிய தரப்புகளுக்கு இடையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.
கற்கை நெறிகளுக்காக பல்கலைக் கழகத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடவிதானங்களில் ஆகக் குறைந்தது 'சி' தரச் சித்திகள் இரண்டையும்

>> 25

## பாலியல் ரீதியில் தவறுகள் செய்யும் ஆசிரியர்களுக்கு ஆண்மை நீக்கம்


### வேண்டும் என்று மாகாண சபையில் நேற்று வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 14
பாலியல் தவறு செய்யும் ஆசிரியர்களுக்கு ஆண்மை நீக்கம் செய்யவேண்டும் என்று சபையில் நேற்றுக் கொந்தளித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம். விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் இத்தகைய ஆசிரியர்களுக்கு உடனடியாகவே சாவுத் தண்டனை வழங்கப்பட்டுவிடும் என்று சக உறுப்பினர் புவனேஸ்வரனும் அதனை ஆமோதித்தார்.
வடக்கு மாகாண சபையின் வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று இடம்பெற்ற போது, மாணவ, மாணவிகளைக் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்துவது குறித்துப் பேசப்பட்டது. அதன்போதே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
உறுப்பினர் புவனேஸ்வரன் இது தொடர்பில் கருத்துரைக்கையில் தெரிவித்த

>> 25

# கூட்டமைப்பின் வெற்றியை யாராலும் அசைக்க முடியாது

## சம்பந்தன் இறுமாப்பு



கொழும்பு, டிசெம்பர். 14
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தரமான - பொருத்தமான வேட்பாளர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறக்கும். கூட்டமைப்பின் வெற்றியை எவராலும் அசைக்க முடியாது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
"கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் தற்போது வேட்பாளர் தெரிவில் ஈடுபட்டுள்ளன. வேட்பாளர்கள் தெரிவில் இளையோருக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம் வேட்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவராலும் அசைக்கமுடியாது. கூட்டமைப்பின் வெற்றி உறுதி" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## சாவகச்சேரியில் 4 கட்சிகள் வேட்புமனு

யாழ்ப்பாணம், டிசெ. 14
சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் போட்டியிட 9 அரசியல் கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. அவற்றில் 4 கட்சிகள் இதுவரை வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. வேட்புமனுத் தாக்கலுக்கான இறுதி நாளான இன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணம்

>> 25

முச்சந்தி முரளி



நல்ல யோசனைதான் இதுவும் பிரேரணை மாதிரி போகாட்டி நல்லம்

## 40 சதவீத நிதி ஒதுக்கப்பட்டும் கல்வியில் வளர்ச்சி உண்டா?

### எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சபையில் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 14
வடக்கு மாகாண சபையின் மொத்த நிதியில் 40 வீதமான நிதி கல்விக்கு ஒதுக்கப்படுகின்றபோதும் எமது மாகாணத்தின் கல்வி நிலையில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளோமா?
இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.
கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் வடக்கு மாகாண சபையின் அடுத்தாண்டு வரவு -

>> 25

## சிமெந்துக் கூட்டுத்தாபன காணியில் காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி

கொழும்பு, டிசெ. 14
சிமெந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 50 ஏக்கர் காணியைப் பெற்று காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நடவடிக்கைக்காக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
துறைமுக மற்றும் கப்பல்துறை விவகார அமைச்சர் மகிந்த சமரசிங்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை யோசனைக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைப்பு செய்வதற்கான முன்மொழி

>> 25

## யாழ். தேர்தல் பணிமனைக்கு 4 மாடிகளில் புதிய கட்டடம்

கொழும்பு, டிசெ. 14
யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் பணிமனைக்கு தனியான கட்டடம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைகளைக் கவனத்திற்கொண்டு, யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் காரியா

>> 25

## இரு இடங்களைத் தவிர மு.கா, ஐ.தே.கவுடன் சேர்ந்தே போட்டி

கொழும்பு, டிசெ. 14
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஓரிரு இடங்களைத் தவிர ஏனைய அனைத்து இடங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.
இதன்படி யானைச் சின்னத்தில் போட்டியிட நேற்று இறுதி முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.
காரைதீவு மற்றும் மண்முனைப்பற்று பிர

>> 25

## கல்வி மீதான விவாதத்தில் இறுதிவரையிலும் 15 பேர் மட்டுமே!

யாழ்ப்பாணம், டிசெ. 14
வடக்கின் மிகமுக்கிய விடயமான கல்வி பற்றிய விவாதம் சபையில் நேற்று இடம்பெற்ற போது, இறுதிவரை 15

>> 25

## அரச நிர்வாக கட்டமைப்பில் விரைவில் மாற்றம் வரும்

கொழும்பு, டிசெ. 14
மகிந்த பக்கமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் வளைத்துப் போடுவதற்குரிய செயற்பாட்டில் தீவிரமாக இறங்கியுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரச நிர்வாகக் கட்டமைப்பிலும் அதிரடி மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளார்.
சட்டம் மற்றும் ஒழுங்கு, ஊடகத்துறை, நீதி ஆகிய அமைச்சுக்களின் செயலர் பதவிகளில் விரைவில் மாற்றம் வரவுள்ளது. சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலர், மீன்

>> 25

## ஜெருசலேம் தலைநகர் என்பதை ஏற்கமாட்டோம்

### இலங்கை அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14
இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் மாற்றப்படுவதை இலங்கை ஏற்றுக் கொள்ளாது என்று கொழும்பு அறிவித்துள்ளது. இலங்கையின் தூதரகம் தொடர்ந்தும் டெல் அவிவ் நகரிலேயே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமைச்சரவை முடிவு

>> 25

## இலங்கை ஒரு பௌத்த நாடானாலும் ஏனைய மதங்களுக்கும் இடமுண்டு

### கிறிஸ்மஸ் நிகழ்வில் ரணில் உரை

கொழும்பு, டிசெ. 14
தைப்பொங்கலை இந்துக்கள் மாத்திரம் கொண்டாடுவதில்லை. மூவின மக்களும் கொண்டுகின்றனர். ரம்ழான் பண்டிகையின் போது புரியாணி சாப்பிடாத எவரும் இல்லை. பௌத்த நாடாக இருந்தாலும் ஏனைய மதத்தவர்களுக்கும் அவர்களது காரியங்களைச் செய்ய இடமளிக்கவேண்டும். இன மத ஐக்கியத்தைக் கொண்டு நாம் உலக சாதனை படைக்க வேண்டும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நத்தார் பண்டிகையை முன்னிட்டு 2016ஆம் ஆண்டு காலி முகத்திடலில் துறைமுக அதிகார சபை ஊழியர்கள் நிர்மாணித்த நத்தார் மரம்



கின்னஸ் சாதனை படைத்தமைக்கான சான்றிதழ் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம்

>> 25



# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,டிசெ.14

இலவசக் கல்விக்கான போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிறைவைக்கப்பட்ட பல்கலைக் கழக செயற்பாட்டாளர்களான ஜினரத்ன தேரர் மற்றும் சனத் பண்டார ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யக்கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பல்கலைக்கழக விடுதிப் பகுதியிலிருந்து சுலோகங்கள் மற்றும் பதாகைகளுடன் முதன்மை வீதிக்கு வந்த மாணவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

“எமது மாணவர் சங்கப்பிரதிநிதிகள் சுயநலத்துக்காக அன்றி மாணவர்களது உரிமைகள் மற்றும் நலன்களுக்காகவே போராடினார்கள். அவர்கள் கோடிக்கணக்கான ரூபா சொத்துக்களைக் கொள்ளையிடவில்லை. 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் தமது சொத்து விவரங்களை வெளியிட முடியாது ஒழித்திருக்கவுமில்லை.

முன்னாள் அரசதலைவரின் செயலாளர்கள் கூட பல கோடி ரூபா கொள்ளையிட்டு தற்போது பிணையில் வெளிவந்து சாதாரணமாக நடமாடக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்களது உரிமைகளுக்காக போராடிய எமது தலைவர்களை தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பது எந்தவகையில் நியாயமானது” என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (ற-ரி5)

## திறந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவோம்

### தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

கடந்த காலப் படிப்பினையைக் கொண்டு, இலங்கையை மீண்டும் வெற்றிகரமான திறந்த பொருளாதாரத்தையுடைய நாடாகக் கொண்டு வருவோம் இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம், நெதர்லாந்து, ஜேர்மன் தூதுவராலயம் மற்றும் பிரித்தானிய கவுன்சில் இணைந்து ஏற்பாடு செய்திருந்த “நேரடி பாரம்பரியம்” நிகழ்வு, கொழும்பு கிரேன்ட் ஹொட்டலில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தூபாராம ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், இலங்கையில் கட்டடம் தொடர்பான வரலாறு ஆரம்பமாகின்றது. அன்றிலிருந்து ரஜரட்டவை மையப்படுத்தி எமது நாட்டில் நவீன நாகரீகம் தோற்றம் பெற்றது.

தம்பதெனி யுகத்திலிருந்து பிரித்தானியா யுகம் வரை அமைக்கப்பட்ட பல கட்டடங்கள் பல இலங்கையின் தெற்கின் பல பிரதேசங்களில் உள்ளன.

இவை அனைத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஆசியாவுக்கு நவீன வியாபார முறையை அறிமுகப்படுத்தியது இலங்கையாகும். 1960ஆம் ஆண்டுகள் வரை இலங்கை ஆசியாவின் பிரதான நாடாக கருதப்பட்டது. அந்தக் காலத்தில் அமைக்கப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் நல்ல நிலையில் உள்ளதால் நாம் அவற்றையும் பாதுகாக்கவேண்டும்.

தற்காலத்திலும் பெறுமதியான சகல கட்டடங்களையும் பாதுகாப்பதற்கும், அதன்மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் கடந்த காலத்தைப் பாதுகாத்து, அந்த கடந்த காலத்தைப் படிப்பினையாகக் கொண்டு, வர்த்தகத்துக்கு பயப்படாத மக்களாகவும், இலங்கையை மீண்டும் வெற்றிகரமான திறந்த பொருளாதாரத்தையுடைய நாடாகவும் கொண்டுவருவதற்கு செயற்படுவோம் - என்றார். (ரி-2)

## ஆயுள்வேத தொற்றா நோய் மருத்துவமனை பணிப்பாளராக மருத்துவர் கே.எல்.எம்.நக்பர்

அம்பாறை,டிசெ.14

அம்பாறை, நிந்தவூர் அரச ஆயுள்வேத தொற்றா நோய் ஆராய்ச்சி மருத்துவமனையின் பணிப்பாளராக மருத்துவர் கே.எல்.எம்.நக்பர் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த மூன்றரை வருடங்களாக மருத்துவ அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த இவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது.

இந்த நிகழ்வில் சுகாதார, சுதேச போசணை பிரதி அமைச்சர் பைசால் காசிமின் பிரத்தியேகச் செயலாளர் எம்.ரீ.எம்.சப்றாஸ், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற-ரி5)



## ஆசிரிய கலாசாலைகளின் பாடத்திட்டம் மாற்றப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

தேசிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் பாடத்திட்டங்கள் நவீன விடயங்களை உள்ளடக்கி மாற்றியமைக்கப்படும். நிர்வாக அதிகார நடவடிக்கைகளை மையப்படுத்தி அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று தேசிய ஆசிரிய பயிற்சி கலாசாலைகளுக்கு 20 கப் ரக வாகனத்தை வழங்குவது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உலகின் நவீன மற்றும் அதிக தொழில் துறைகளைப் பெறக்கூடிய கற்கைகளை உள்ளடக்கியதான பாடத்திட்டங்கள் உள்வாங்கப்படவுள்ளன. மாறிவரும் சமூக மற்றும் பௌதீக அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படும்.

தற்போது பல தேசிய கல்லூரிகளின் அடிப்படை வசதிகளில் பற்றாக்குறை நிலவுகின்றது .அவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய கல்லூரிகளில் கல்விபயிலும் மாணவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. நிர்வாக நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 20 தேசிய கல்லூரிகளுக்கு கப் ரக வாகனம் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-31)

## விளக்கமறியலில் உள்ள தஸநாயக்கவுக்கு பதவி!

கொழும்பு, டிசெ.14

ஐந்து மாணவர் உட்பட 11 பேர் கடத்தப்பட்டமை தொடர்பாக வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க கடற்படையின் சிறப்புப் பயிற்சி நெறி ஒன்றுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நேற்றும், நேற்றுமுன்தினமும் நடந்த விசேட செயலமர்வு ஒன்றுக்காகவே அவரது பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. அவர் விளக்கமறியலில் இருந்த நிலையில் அதில் பங்கேற்கவில்லை என அறிய முடிகின்றது. சிறையில் உள்ள ஒருவரை எவ்வாறு பரிந்துரை செய்ய முடியும் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

டிசம்பர் 11ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் கோட்டை பராக்கிரம கடற்படை நிலையத்தின் பொறுப்பாளராக தஸநாயக்கவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. விளக்கமறியலில் உள்ள அவருக்கு புதிய பதவி வழங்குவது சிக்கலுக்கு உரியது எனப் பாதுகாப்புத்துறை அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் கடற்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்படும் போது முதலில் அவர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்படுவார். அவருக்கு சம்பளத்தில் அரைவாசியே கொடுக்கப்படும். கடற்படையினரால் அடிப்படை விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்படும். இதில் எந்த நடைமுறையும் தஸநாயக்க விடயத்தில் பின்பற்றப்படவில்லை என கடற்படை தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

கொமாண்டர் தஸநாயக்க தற்போது விசேட கடமைகள் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பராக்கிரம என அழைக்கப்படும் கோட்டையில் உள்ள கடற்படை அலுவலகத்திலேயே 2008ஆம் ஆண்டு கடத்தப்பட்டனர் என்று கூறப்படும் மாணவர்கள் முதலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அத்தகைய இடத்தில் விசேட கடமைக்காக அவர் நியமிக்கப்பட்டால் தஸநாயக்கவுக்கு பிணைக் கிடைக்குமிடத்து விசாரணைகளைப் பாதிக்கும் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-31)

## நத்தார் மரக் கின்னஸ் சான்றிதழ் ரணிலிடம்

கொழும்பு, டிசெ.14

நத்தார் பண்டிகையை முன்னிட்டு 2016ஆம் ஆண்டில் காலி முகத்திடலில் அமைக்கப்பட்ட நத்தார் மரம் கின்னஸ் சாதனை படைத்தமைக்கான சான்றிதழை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு நேற்று மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது. நிகழ்வில் பெற்றோலியத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இலங்கை துறைமுக அதிகார சபை அதிகாரிகள் மற்றும் நத்தார் மரத்தை அமைத்தவர்களும் கலந்துகொண்டனர். நத்தார் மரத்துக்கான கின்னஸ் சாதனை சான்றிதழை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார். நத்தார் மரம் அமைக்க உதவிகள் வழங்கியோருக்கு விசேட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நத்தார் மரம் அமைக்க ஆரம்பித்தபோது அதற்கு நாட்டில் பல எதிர்ப்புகளும் தடைகளும் கிளம்பியிருந்தன. (ற-31)

## தென்மராட்சியில் விபத்து ஒருவர் காயம்

தென்மராட்சி டிசெ. 14

தென்மராட்சிப் பகுதியிலிருந்து பளைக்கு கதியால் ஏற்றிச் சென்ற லான்ட் மாஸ்டரும் டிப்பர் வாகனமும் மோதியதில் லான்ட் மாஸ்டர் சாரதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முகமாலைப் பகுதியில் முதன்மைச் சாலையில் இடம்பெற்றது.

லான்ட் மாஸ்டர் வாகனம் விபத்துக்குள்ளாகி காணிக்குள் புகுந்தது.

காயமடைந்த சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5.9)

### மாணவர் உட்படப் 11 பேர் கடத்தல்

# பயன்படுத்திய வான் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை கிடைத்தது

## நீதிமன்றுக்கு அறிவித்தது குற்றப்புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, டிசெ.14

தெகிவளையில் 2008 ஆம் ஆண்டு ஐந்து மாணவர்கள் உட்படப் 11பேரைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெள்ளை நிற வாகனம் தொடர்பில் அரச இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை கிடைத்துள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்றுக் கோட்டை நீதிவானுக்கு அறிவித்தது.

கடற்படையின் கீழ் பதிவு செய்யப்பட்டு 2008 மே மாதம் முதல் 2010 ஒக்ரோபர் மாதம் வரை பயன்படுத்தப்பட்டுள்ள இந்த வாகனம் தொடர்பில் பல கடற்படை வீரர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டி இருக்கின்றது என்றும் குற்றப் புலனயவுப் பிரிவு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளிலேயே இந்த விடயம் தெரியவந்தது என்று மேலதிக விசாரணை அறிக்கை ஊடாக குற்றப் புலனயவுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவின் அறிவுறுத்தலுக்கு அமைய அந்தப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் சுனில் நீதிவானுக்கு அறிவித்தார்.

கடற்படையினரிடம் விசாரணைக்காக கோரிய மிக முக்கிய ஆவணங்களில் அரைவாசி ஆவணங்களே கிடைத்துள்ளன. அவற்றை மையப்படுத்தி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அவர் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008 ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று கோட்டை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இந்த விவகாரத்தில் தேடப்பட்டு வரும் கடற்படையின் லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆராச்சியைக் கைது செய்ய பகிரங்க பிடியாணை நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் கடற்படை தளபதி, வசந்த கரண்ணகொட தனது பாதுகப்பு உத்தியோகத்தராக இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளிலேயே இந்த கடத்தல் விவகாரம் அம்பலத்துக்கு வந்திருந்தது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்னவின் ஆலோசனைக்கு அமைய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாக ஹமுல்லவின் வழிகாட்டலின் கீழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சானி அபேசேகரவின் நேரடிக் கட்டுப்பாட்டில் புலனாய்வு பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஸாந்த டி சில்வா தலைமையில் முன்னெடுக்கப்படும் இருவேறு விசாரணைகளில் கடத்தல்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெகிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு இந்த கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. தெகிவளையில் 2008 ஆம் ஆண்டு 09.17 அன்று பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர். இதனைவிட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா கஜன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட அனைவரும் திருகோணமலை கடற்படை தளத்தில் உள்ள இரகசிய வதை முகாமான கன்சைட் எனும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தனர். இந்த விடயம் சர்வதேச அளவில் அவதானிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில், சிறப்பு புலனயவுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்த லெப்டினன் கொமான்டர் சம்பத் முனசிங்க, கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன் கொமாண்டர் தரத்தை உடைய தற்போது கொமான்டராக பதவி உயர்த்தப்பட்டுள்ள சுமித் ரணசிங்க, கடற்படை சிப்பாய் லக்ஷ்மன் உதயகுமார, நலின் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ , கித்சிரி மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கெ.பி. தஸநாயக்க ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சம்பத் முனசிங்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனையோர் தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளனர்.

நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. அது வரை சந்தேக நபர்களில் 2 முதல் 6 வரையிலானோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

(ற-31)

# தவறவிட்ட பணத்தை உரியவரிடம் ஒப்படைத்தார் பொலிஸ் உத்தியோகத்தர்

தெல்லிப்பளை,டிசெ.14

வீதியில் கிடந்த பணத்தை எடுத்து உரிமையாளரிடம் கையளித்தார் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர்.

இச் சம்பவம் தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்றது.

பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீழ்ந்து கிடந்த 10 ஆயிரம் ரூபா பணம் அடங்கிய பையை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கண்டெடுத்து பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தார். பணத்துடன் பணப்பையை தொலைத்த நபர், முறைப்பாடு பதிவு செய்வதற்காக, நேற்று தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்துக்கு வந்திருந்தபோது, பணப்பை அவரிடம் கையளிக்கப்பட்டது.

பணத்தைப் பறிக்கும் பல்வேறு கும்பல்கள் மத்தியில், வீதியில் கிடந்த பணத்தை எடுத்து அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்த பொலிஸ் உத்தியோகத்தரை பொலிஸ் உயர் அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். (ரி2)

# சைட்டம் கல்லூரியில் கற்ற மாணவருக்கு நீதிவேண்டும்

## கல்லூரி மாணவர்களின் பெற்றோர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.14

மாலபே சைட்டம் கல்லூரியை மூடி எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளனர். தற்போது அவசியமானது சைட்டம் கல்லூரிக்கான தீர்வு அல்ல. எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான தீர்வே. மாலபே வைத்திய கல்லூரி மாணவர்களை உடனடியாக கொத்தலாவல மருத்துவர் கல்லூரியில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மாலபே சைட்டம் கல்லூரி மாணவர்களின் பெற்றோர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

சைட்டம் கல்லூரி மருத்துவ பீட மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. சைட்டம் கல்லூரியால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டங்கள் உலகில் எந்தவொரு நாட்டிலும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்தக் கல்லூரியில் கற்ற மாணவர்கள் தற்போது தமது எதிர்காலம் குறித்த அச்சத்தோடும் மனரீதியான ஓர் அழுத்தத்துக்கும் உள்ளாகியுள்ளனர். அண்மையில் அமைச்சரவைக் குழு கூட்டத்தில் விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு சைட்டம் கல்லூரி மாணவர்களுக்கென வேறு ஒரு கல்லூரி அமைக்கப்பெற்று கல்வி நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு காலம் கடத்தும் நடவடிக்கையே. அதை விடுத்து 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொத்தலாவல கல்லூரியில் அவர்களை இணைத்து உடனடியாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ற-31)

ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்......

பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிவரக் கோவையை (அலைபேசி இலக்கத்துடன்) தபாலிலோ, வைபர் மூலமோ, உதயன் முகநூல் பக்க தனித் தகவல் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

077 316 5555

UthayanPrint

uthayanprint@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:
15.12.2017

## எல்லை நிர்ணயத்துக்கு எதிரான மனு:

## அவகாசம் கேட்கிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, டிசெ. 14

அம்பகமுவ பிரதேச சபையை மூன்றாகப் பிரித்த எல்லை நிர்ணயம் மற்றும் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசிதழ் அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை முன்வைக்க மேலும் கால அவகாசம் வேண்டும் என்று பிரதி சொலிசிற்றர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார்.

இதனையடுத்து மனு மீதான விசாரணைகளை நாளை 15ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் வெளியிடப்பட்ட அரசிதழை இல்லாமல் செய்யக் கோரி அடிப்படை உரிமை மீறல் மனு. முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் விதானகமகே நந்தராஜாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மனுவில் 8பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர்.

மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன முன்னிலையாகி கால அவகாசம் கோரிய நிலையில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக அம்பகமுவ பிரதேச சபை அம்பகமுவ, மஸ்கெலிய, நோர்வூட் என்று மூன்று பகுதியாகவும், நுவரெலிய பிரதேச சபை நுவரெலிய, கொட்டகல, அகரபதனை என்று மூன்று பிரிவாகவும் பிரிக்கப்பட்டு கடந்த நவம்பர் மாதம் 2 ஆம் திகதி அரசிதழ் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.31)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் இரண்டு அறைகள் ( AC/Non AC ) இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு நாள் .மாத வாடகைக்குண்டு.

**தொடர்பு :-077 837 8597**

**வீடு ,காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி.வட்டக்கச்சியில் சிவிக்ஸ் சென்ரர் பகுதியில் 3 1/4 ஏக்கர் காணி தென்னை. சிறியவீடு. கிணறு என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. கல்லூரி. வைத்தியசாலைக்கு பக்கமாக அமைந்துள்ளது.

**தொடர்பு :-075 082 4530**

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

Hero Pleasure சிவப்பு, முதற்பதிவு - 2015 BBT தொடரிலக்கம், தனிப் பாவனை 18000km விலை 140 000/-

**075 082 4530**

(விழலானவிசாரணைகள் ஏற்கப்படமாட்டாது)

**கண்ணீர் அஞ்சலி**



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **செல்வி. இராசா காயத்திரி** அவர்களின் அன்புத் தாயார்.

**அமரர் இராசா அன்னபூரணம்**

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள், சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை

01. தலைவர் பெறுகைக்குழுநல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைகீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்
02. தேசியபோட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/2016 (1)ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு. மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 .இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 – 021-300-2508) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2017.12.14 ஆம் திகதியிலிருந்து 2017.12.27 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரிக்கு 2017.12.28 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. 1-13 வரை கோரப்பட்ட வேலைகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்விசமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 49 நாள்களும், 14-21 வரையான வேலைகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் இறுதி திகதியிலிருந்து 63 நாள்கள் ஆகும்.
09. கேள்விபிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விவரம் | அண்ணளவானமதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) ( Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | கோண்டாவில் முத்தட்டுமடம் 2ஆம் வீதி குறுக்கு வீதி, கோண்டாவில் மேற்கு பாடசாலை வீதி குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு | 1.67 | 2,000.00 | C9/C8 | 16,800.00 | 02மாதம் |
| 02. | கோண்டாவில் நாராயணன் வீதி, நாராயணன் கிளை ஒழுங்கை புனரமைப்பு | 0.68 | 2,000.00 | C9/C8 | 6,900.00 | 02மாதம் |
| 03 | இராமலிங்கம் வீதி 1ஆம் குறுக்கு ஒழுங்கை, இராமலிங்கம் வீதி குறுக்கு ஒழுங்கை ஆடியபாதம் வலதுபக்கம் 1ஆம் ஒழுங்கை, கேணியடி முன் ஒழுங்கை புனரமைப்பு | 1.26 | 2,000.00 | C9/C8 | 12,700.00 | 02மாதம் |
| 04. | கொக்குவில் பூநாறி வீதி வாய்க்கால் கரை ஒழுங்கை, காந்திஜி வீதி இகல்திட்டி குறுக்கு வீதி (கள்ளப்புறா) புனரமைப்பு | 1.64 | 2,000.00 | C9/C8 | 16,500.00 | 02மாதம் |
| 05 | கல்வியங்காடு பருத்தித்துறை வீதி கிளை ஒழுங்கை, கலைமகள் வீதி 1ஆம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு | 1.95 | 2,000.00 | C9/C8 | 19,600.00 | 02மாதம் |
| 06 | கொக்குவில் கலட்டி முந்தல் குறுக்கு வீதி, செம்பாட்டு வீதி கிளை, ஒழுங்கை, கல்லூரி வீதி கிளை ஒழுங்கை புனரமைப்பு | 1.19 | 2,000.00 | C9/C8 | 12,000.00 | 02மாதம் |
| 07 | கோண்டாவில் பொன்னம்பலம் வீதி, செல்வநாயகம் வீதி கிளை ஒழுங்கை புனரமைப்பு | 1.03 | 2,000.00 | C9/C8 | 10,400.00 | 02மாதம் |
| 08 | புலாலி வீதி 169, 171 கிளை ஒழுங்கைகள் பலாலி வீதி 50/6 கிளை ஒழுங்கை புனரமைப்பு | 1.49 | 2,000.00 | C9/C8 | 15,000.00 | 02மாதம் |
| 09 | திருநெல்வேலி கலாசாலை வடக்கு வீதி புனரமைப்பு, | 0.78 | 2,000.00 | C9/C8 | 7,900.00 | 02மாதம் |
| 10 | திருநெல்வேலி இந்துமயானம் புனரமைப்பு | 0.86 | 2,000.00 | C9/C8 | 8,700.00 | 02மாதம் |
| 11 | கொக்குவில் முதலி கோவில் வீதி கிளை, ஒழுங்கை புனரமைப்பு | 1.20 | 2,000.00 | C9/C8 | 12,100.00 | 02மாதம் |
| 12 | கோண்டாவில் இராமகிருஸ்ணா பாடசாலை வீதி புனரமைப்பு | 0.77 | 2,000.00 | C9/C8 | 7,800.00 | 02மாதம் |
| 13 | கோண்டாவில் ஆயுர்வேத வைத்திய நிலையத்திற்கு எல்லை மதில் அமைத்தல், விளையாட்டு மைதானம் சுற்றுமதில் | 1.79 | 2,000.00 | C9/C8 | 18,000.00 | 02மாதம் |
| 14 | பிரதேச சபை தலைமை அலுவலக அலுவலர்களுக்கான வாகனத் தரிப்பிடம் அமைத்தல், பொதுமக்கள் காத்திருப்பு பகுதி விரிவாக்க்ல் உள்ளக பௌதிக வசதிகளை மேப்படுத்தல் | 3.03 | 2,000.00 | C8 | 30,500.00 | 02மாதம் |
| 15 | பிரதேச சபை தலைமை அலுவலக கலாசார மண்டபமேடைஅமைத்தல் | 2.52 | 2,000.00 | C8 | 25,300.00 | 02மாதம் |
| 16 | நல்லூர் உப அலுவலகம் புனரமைப்பு | 3.59 | 2,000.00 | C8 | 36,000.00 | 02மாதம் |
| 17 | திருநெல்வேலி முருகன் வீதி கிளை ஒழுங்கை புனரமைப்பு | 2.77 | 2,000.00 | C8 | 28,000.00 | 02மாதம் |
| 18 | தாளையடி வீதி திருநெல்வேலி வீதி புனரமைப்பு | 2.64 | 2,000.00 | C8 | 27,000.00 | 02மாதம் |
| 19 | கொக்குவில் பொதுநூலக புனரமைப்பு மற்றும் சுற்றுமதில் அமைத்தல் | 2.20 | 2,000.00 | C8 | 22,100.00 | 02மாதம் |
| 20 | அரியாலைசித்துப்பாத்தி இந்து மயான சுற்றுமதில் அமைத்தல் | 2.17 | 2,000.00 | C8 | 22,000.00 | 02மாதம் |
| 21 | திருநெல்வேலி சந்தை திருத்தமும் வர்ணம் பூசுதலும், யாழ் வரவேற்பு வளைவுக்கு வர்ணம் பூசுதலும் | 2.05 | 2,000.00 | C8 | 21,000.00 | 02மாதம் |

குறிப்பு:- பந்தி 2 இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இல்லாத விடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2017.12.22 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2017.12.14

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.14
சிந்தனைக்கூடத்தின் 'புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள்' பற்றிய கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.
நல்லூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் (நல்லூர் கோவில் முன்பாக) நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணி வரை இடம்பெறும் கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்ட பிரதித்தேர்தல் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன் கருத்துரை வழங்கவுள்ளார்.
புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள், வேட்பாளருக்கான விதிமுறைகள், பெண்வேட்பாளருக்கான புதிய நடைமுறைகள், வாக்காளர்களுக்கான வழிகாட்டல்கள் போன்ற விடயங்களை அடக்கிய கருத்துரைகள் இடம்பெறும் எனவும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் இரா.சிவசந்திரன் தெரிவித்துள்ளார். மேலதிக தொடர்புக்கு 077 7266075, 011457 8037 ஆகிய அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
(எ)

## ஹேமலதா ஆயுள்வேத மருத்துவமனை மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.14
யாழ்ப்பாணம் நவாலி ஹேமலதா ஆயுள்வேத மருத்துவமனை கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
மாகாண சுதேசிய வைத்திய திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் சியாமா துரைரட்ணத்தின் அனுமதியின் பேரில் நவாலி தெற்கு ஹேமலதா ஞாபகார்த்த இலவச ஆயுள்வேத மருத்துவமனை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
வழமைபோல் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய இருநாள்களிலும் சேவை முழுமையாக இடம்பெறும் எனவும் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலதிகமாக ஒருநாள் ஒதுக்கி வழங்கப்படும் எனவும் மாகாண ஆணையாளர் தெரிவித்தார்.
(எ-50)

# மணல் அகழ்வு தடுக்கப்படவேயில்லை பொலிஸ் உடந்தையா என்று சந்தேகம்?

### மருதங்கேணி மக்கள் கூட்டத்தில் காரசாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
மருதங்கேணியில் மணல் அகழ்வதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கியபோதும், சட்டவிரோதமாக இரவில் வாள்கள், கத்திகள் கொட்டன்களுடன் சிலர் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்.
இதனால் மாலை நேரத்துக்குப் பின்னர் வீட்டைவிட்டு வெளியேறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குப் பொலிஸாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பொலிஸாரும் உடந்தையா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.
குடத்தனை கிழக்கிலுள்ள பொதுமண்டபம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதேச மக்கள் இவ்வாறு சந்தேகம் எழுப்பினர். மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் கூட்டத்தில் கலந்துகொண்டார். பருத்தித்துறைப் பொலிஸாருக்கு குறித்த கூட்டத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்டபோதும் பொறுப்பதிகாரி சமுகமளிக்கவில்லை. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே அதில் கலந்து கொண்டார். 80க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அதில் கலந்துகொண்டனர்.
அதில் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்ததாவது:
மணல் ஏற்ற அனுமதி இருக்கும்போதும் ஒரு சிலர் சட்டவிரோதமாக மண் அகழ்கின்றனர். பிரதேச செயலகத்தினரின் தேவைக்கென ஒதுக்கீடு செய்திருந்த 36 லோட் மணலில் 20 லோட் மணல் திருடப்பட்டுள்ளது. இரவில் சட்டவிரோத மணல் அகழ்வு இன்னும் தொடர்கிறது. பொலிஸார் கண்டுகொள்வதில்லை. ஒரு சில பொலிஸின் அனுமதியுடனும் மண் அகழ்வு நடைபெறுகின்றது என்றும், அந்த நேரங்களில் குறித்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று பொலிஸ் உயர்மட்டங்களால் அறிவுறுத்தப்படுகின்றது.
குடத்தனை பருத்தித்துறை வீதியில் பாதுகாப்பு இல்லை. குடத்தனையில் மண் அகழ்வு தொடர்பில் காங்கேசன்துறை சிறப்புப் பொலிஸ் பிரிவுக்கு அறிவித்தால் நடவடிக்கைக்கு வருவதில்லை.
போக வேண்டாம் என்று பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்துகின்றனர் என அறிந்தோம்.
குடத்தனை பருத்தித்துறை வீதி 6ஆம் கட்டையில் தற்காலிக பொலிஸ் அரண் இருந்தது. அது தற்போது இல்லை. அதில் பொலிஸ் அரசன் அமைக்க வேண்டும். இந்தப் பிரச்சினை அனைத்துக்கும் காரணம் பருத்தித்துறை பொலிஸின் அசமந்த போக்குத்தான் - என்றனர்.
இது தொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில், முறையிட்டும் தாமதத்துக்கான காரணம் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதாமையே. வாகனமும் போதாது. இது தொடர்பாக மேலதிகாரிக்கு அறிவிக்கிறேன் என்றார்.
இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மருதங்கேணி பிரதேச செயலர், சட்டவிரோத மண் அகழ்வை மேற்கொள்பவர்கள் தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (எ-4-26)

# தமிழ் மக்களின் குரலாக ஒலித்தவர் பரமநாதன்

### அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இரங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 14
எமது மக்கள் கையறு நிலையில் இருந்த காலகட்டத்தில் மக்கள் குரலாக ஓங்கி ஒலித்தவர் அமரர் எஸ்.பரமநாதன். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.
இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தேவநாயகம் தேவானந் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று மக்கள் பணி செய்தவர் இவர்.
தனது ஓய்வுக்காலத்திலும் ஓயாது உழைத்தவர். தமது பக்கபலமான ஒரு தோழனை, சக பணியாளனை இழந்த துயரில் சமூகப்பணியாளர்கள் பலரும் உள்ளார்கள். அவர்களோடு நாமும் துயருகிறோம்.
தாமும், தமது குடும்பமும் என்று சிவனே என்று கிடக்கின்ற இன்றைய எமது சூழலில் அமரர் பரமநாதன் மகத்தானவர், போற்றப்படவேண்டியவர்.
அவரது ஆங்கிலப்புலமையும், பன்முக அறிவும் அவரை ஒரு தலைசிறந்த மக்கள் குரலாளனாக உயர்த்தியிருந்தது எல்லோருக்கும் தெரியும்.
தனது காணியும், வீடும் கொல்லன்கலட்டியில் உயர்பாதுகாப்பு வலையத்துக்குள் அகப்பட்டு சிதைந்து போவதையும், வலி.வடக்கு முழுமையும் ஆக்கிரமிக்கப்பட்டு அழிந்து போவதையும் தாங்காது துடித்தவர். அதனை விடுவிப்பதற்காக அவர் நடத்திய போராட்டங்கள் எண்ணிலடங்காதவை. அவர் நிலவிடுவிப்புக்காக எழுதிய கடிதங்கள் ஒவ்வொன்றும் எமது வரலாற்றைக் கூறும் ஆவணங்கள். அவை பேணப்பட வேண்டும்.
உரத்து உணர்ச்சி தளும்ப அரசுடனும், பன்னாட்டு சமூகத்துடனும் குறிப்பாக இராணுவத்தினருடனும் அவர் நடத்திய விவாதங்களும், சண்டைகளும், அவரது கணீரென்ற குரலும் இன்றும் எங்கள் மனங்களில் நிழலாடுகின்றன. அவரது கனவுகள் நனவாக பொது அமைப்புக்களும், மேலும் பலரும் ஒன்றிணைந்து போராடுவதுதான் அவரின் சமூகப்பணிக்கு நாம் செய்யும் பணியாக அமையும் - என்றுள்ளது.
பலாலி வீதி உரும்பிராயில் கடந்த கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இவர் உயிரிழந்தார். சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவர் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு மயக்கமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இவர் சிகிச்சை பயனளிக்காது மறுநாள் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

### வித்தியா கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற

# குற்றவாளிகளின் வழக்கேடு உயர் நீதிமன்றில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 குற்றவாளிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவுக்கு அமைவாக, தீர்ப்பாயத்தால் நடத்தப்பட்ட மூல வழக்கேடுகள் மற்றும் அதன் பிரதிகள் உயர் நீதிமன்றில் நேற்றுக் கையளிக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மற்றும் உத்தியோகத்தர்கள் நேரில் சென்று வழக்கு ஆவணங்களை உயர் நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் சட்டத்தரணி கிரிஷானி டி கோத்தகொடயிடம் நேற்றுக் கையளித்தனர்.
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்.
இந்தப் படுகொலை வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) விசாரணைகளை மேற்கொண்டது.
விசாரணைகளின் நிறைவில் கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதி 9 எதிரிகளில் 7 பேர் கொலைக் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. கூட்டுவன்புணர்வு மற்றும் சதித்திட்டம் தீட்டியமை ஆகிய குற்றங்களுக்கு 7 குற்றவாளிகளுக்கும் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. 2 பேர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். (4,37)

# ஆசிரியைக்கு இடமாற்றம் வழங்க மேல்நீதிமன்று இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 14
ஆசிரியை ஒருவருக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று இடைக்காலத்தடை விதித்தது. பணிப்பாளர் உள்ளிட்ட எதிர்மனுதாரர்களை மேல் நீதிமன்றில் முற்படுமாறும் மன்று பணித்துள்ளது.
மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இன்று கட்டளையிட்டார்.
எதிர் மனுதாரர்களான வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஆகியோருக்கு இந்தக் கட்டளையை உடனடியான அனுப்பிவைக்குமாறும் அவர்கள் மூவரையும் வரும் ஜனவரி 10ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை அனுப்பிவைக்குமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.
யாழ்ப்பாண வலயத்திலுள்ள பாடசாலையில் 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாணவிகள் இருவரைக் கொடுமைப்படுத்தினார் என்று ஆசிரியர் ஒரு மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. குற்றச்சாட்டை அந்தப் பாடசாலையின் ஆசிரியை ஒருவர் முன்வைத்திருந்தார்.
இந்த விடயம் அதிபர், ஆசிரியர்களால் மூடிமறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும் பாடசாலை மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதால், குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் கைது செய்யப்பட்டார். விடயத்தை மூடிமறைத்த குற்றச்சாட்டில் அதிபர் மற்றும் ஆசிரியர் சிலர் தடுத்துவைக்கப்பட்டு நீதிமன்றால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.
மாணவிகள் இருவர் கொடுமைப்படுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் ஆசிரியை சாட்சியம் வழங்கியிருந்தார்.
இந்த நிலையில் சங்கீத ஆசிரியை மீது கல்வித் திணைக்களத்தால் ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அவரை எதிர்வரும் ஜனவரியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலமாக ஆசிரியருக்கு அறிவித்துள்ளார். "முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்ற பரிந்துரைக்கு அமைவாக 01.01.2018 இலிருந்து செயற்படும் படியாக கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றீர்கள். தங்களுடைய சேவைக்காலத்தில் மீண்டும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுகின்றது" என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆசிரியை சட்டதரணி குமாரவடிவேல் குருபரன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (4)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 1200 |
| நண்டு | 400 | 400 | 500 | 500 |
| கணவாய் | 700 | 500 | 900 | 1000 |
| பாரை | 450 | 500 | 700 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | 300 |
| சீலா | 400 | 400 | 500 | 600 |
| விளை | 400 | 400 | 500 | 700 |
| முரல் | 300 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 250 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | 500 |
| ஓரா | 300 | 300 | 500 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 220 | 400 | – |
| சூடை | 100 | 120 | 160 | 200 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 250 | 300 |
| கொய் | 100 | 80 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 450 | 500 |
| வாளை | 100 | 200 | 400 | 400 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 80 | 80 |
| கத்தரி | 100 | 110 | 120 | 100 | 110 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 50 | 50 |
| பயிற்றை | 160 | 320 | 250 | 180 | 180 |
| பாகல் | 240 | 310 | 300 | 250 | 360 |
| க.கிழங்கு | 60 | 80 | 50 | 70 | 60 |
| பெ.வெங்காயம் | 160 | 200 | 140 | 150 | 120 |
| சி.வெங்காயம் | 400 | 400 | 300 | 280 | 180 |
| பூசணி | 60 | 80 | 50 | 70 | 80 |
| தக்காளி | 120 | 120 | 120 | 100 | 110 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 70 | 70 |
| கீரை | 100 | 60 | 50 | 30 | 80 |
| பொன்னாங்கானி | 50 | 60 | 40 | 40 | 30 |
| ப.மிளகாய் | 300 | 300 | 400 | 400 | 360 |
| புடோல் | 100 | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 140 | 160 | 130 | 160 | 140 |
| வெண்டி | - | 160 | 160 | 120 | 120 |
| போஞ்சி | 260 | 200 | 240 | 180 | 180 |
| லீக்ஸ் | 280 | 240 | 220 | 150 | 220 |
| தேங்காய் | 90 | 90 | 100 | 90 | 80 |
| உ.கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 70 |
| தேசிக்காய் | 60 | 100 | 70 | 50 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 320 | 300 | 300 | 300 | 340 |
| கரட் | 200 | 200 | 100 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 320 | 400 | 160 | 300 |

# நீர்வேலி வாழைத்தோட்டம் ஒன்றில் 25க்கும் மேற்பட்ட வாழைக்குலைகள் திருட்டு

யாழ்ப்பாணம்.டிசெ.14
நீர்வேலி தெற்குப் பகுதியில் உள்ள வாழைத்தோட்டம் ஒன்றில் 25க்கும் மேற்பட்ட வாழைக்குலைகள் திருடப்பட்டுள் ளன. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
வாகனத்தில் வந்த திருடர்கள் குறித்த தோட்டத்துக்குள் நுழைந்து அங்கிருந்த 25க்கும் மேற்பட்ட கதலி வாழைக் குலைகளை களவாடிச் சென்றுள்ளனர்.
களவாடப்பட்ட வாழைக்குலைகளின் பெறுமதி 30ஆயிரம் ரூபாவுக்கு மேல் என செய்கையாளர்கள் தெரிவித்தனர். இந்தத் தோட்டத்தில் கடந்த இரண்டு மாதத்துக்கு முன்னரும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர். விவசாயிகளால் பயிரிடப்படும் விளை பொருள்களையும் திருடர்கள் விட்டுவைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப் படுகிறது. (எ-17)

## ‘அழகிய குடும்பம்’ நிகழ்வு யாழில்

யாழ்ப்பாணம், டிசெ.14
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை நிகழ்த்தும் கலைப் படைப்பாளிகளின் குடும்பங்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியான ‘அழகிய குடும்பம்’ எனும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பா ணப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமுதாய மருத்துவத்துறை மருத்துவர் திருமகள் சிவசங்கர், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் உளவளத்துணையாளர் நா.நவராஜ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.(எ.23)

## நெற்பயிர்களில்மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
சண்டிலிப்பாய் கமநல சேவைப் பிரிவுக்கு உட்பட்ட நெற்பயிர்களை மடிச்சுக்கட்டி நோய் வெகுவாகப் பாதித்து வருகின்றது.
இதனால் கடும் வெள்ளப் பெருக்கால் அழிவடைந்து மீதமாக இருந்த பயிர்களும் மடிச்சுக்கட்டி நோயால் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.
குறிப்பாக கட்டுடை, நவாலி, பிரான்பற்று, ஆனைக்கோட்டை, வழுக்கையாற்றுவெளி, சங்குவேலி, பண்டத்தரிப்பு, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடும்மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக 67வீதமான நெற்பயிர் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-50)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கிளிநொச்சி மாவட்டத்தில் இலவசமாக நடத்தப்படவுள்ள கற்கை நெறிகளைப் பயில விரும்பும் விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
நீர்க்குழாய் பொருத்துனர், கணிய அளவையியல், கைத்தொழிற்சாலை மின் இணைப்பு, குளிரூட்டலும் வாயுசீராக்கலும், அலுமினியம் பொருத்துனர், விவசாய உபகரணம் திருத்துனர், தையல், சிறுவர் பராமரிப்புக் கற்கைநெறி போன்ற கற்கைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு 0777790171, 0774469816 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (எ)

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இடம்பெறவுள்ளது.
சத்தியசாயி பாபாவின் தேசிய கல்விச் சேவை நடத்தும் மனித விழுமியங்கள் தொடர்பான இந்த இருநாள் செயலமர்வு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமையும், நாளைமறுதினம் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளரால், செயலமர்வில் ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவர் கலந்து கொள்ள ஏற்பாடு மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## நடமாடும் சேவை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.14
யாழ்ப்பாணம் மாநகர சபையால் நடத்தப்படும் நடமாடும் சேவை பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை இடம் பெறவுள்ளது.
இதில் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி 2018ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல், கட்டட உப பிரிவிடல் விண்ணப்பப் படிவங்கள் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ-23)

## யூரோவில் மண்டபத்தில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 14
"அமைதிக்கான வர்த்தகம் மற்றும் அமெரிக்க மற்றும் சீன அனுபவத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்" என்ற விடயம் பற்றிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30க்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.
யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம், வடபிராந்திய இலங்கை பொறியியலாளர் நிறுவகம் என்பன இணைந்து இதனை நடத்துகின்றன.
கருத்தரங்கின் வளவாளராக பேராசிரியர் பெட்ரிக் மெண்டிஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிறஞ்சன் கேட்டுள்ளார். (4)

## இது புதுசு

ஆண்களுக்கான காலணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



## இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவியாக சிறிகாந்தலட்சுமி



யாழ்ப்பாணம், டிசெ.14

இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகர் சிறிகாந்தலட்சுமி அருளானந்தம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 'நுலக விழிப்புணர்வு நிறுவகம் என்ற நூலகவியல்சார் நிறுவனத்தை ஆரம்பித்து அதன் மூலம் மாணவர்கள், உட்படப் பலதரப்பட்ட வாசகர்கள் பயன்பெறும் வகையில் சேவையினை செய்து வருவதுடன் நாட்டின் நூலக வளர்ச்சிக்கும் உறுதுணையாகவுள்ளார்.

இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் 'நூலகமும் தகவல் விஞ்ஞானமும்' என்ற டிப்ளோமா கற்கை நெறியைத் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்கள் ஆங்கில மொழியில் உள்ள நூல்களையே கற்க வேண்டிய நிலை காணப்பட்டது. இதனால் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உணர்ந்து அறிந்து தமிழ் மொழி மூலமான பல நூலகவியல்சார் நூல்களை எழுதியுள்ளார். (எ-23)

கிரவல் கற்கள் கொண்டு அமைக்கும்

# வீட்டுத்திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

உழவனூர் தம்பிராசாபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிச. 13

கிளிநொச்சியில், கிரவல் கற்களைக் கொண்டு அமைக்கும் வீட்டுத் திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என உழவனூர் தம்பிராசாபுரம் மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே தம்பிராசாபுரம் கிராமம். இங்கு போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்குத் நிரந்தர வீடுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் கட்டடங்களுக்குச் சிமெந்துக் கல்லுக்குப் பதிலாக சிமெந்து கலக்கப்பட்ட கல் பயன்படுத்த வேண்டும் என மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கல்லானது மணல் போடப்பட்டு அரிவதற்குப் பதிலாக கிரவல் போட்டு அரியப்படுகின்றது.



உழவனூர் தம்பிராசபுரம் கிராமத்தில் 325 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் தற்போது 182 குடும்பங்களுக்கு தற்போது குறித்த வீடுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் இது தொடர்பாக தொடர்ச்சியாக மக்களுக்கு அறிவுறுத்தல்களை அரச சார்பற்ற நிறுவனம் வழங்கி வருகின்றது எனவும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில், பொதுவாக சிமெந்து மணல் கொண்டு அரியப்பட்ட கற்களிலேயே வீடுகள் அமைக்கப்படுவது வழக்கம். அவ்வாறே ஏனைய இடங்களில் வழங்கப்பட்டும் வருகின்றன. ஆனால் எமக்கு மட்டும் ஏன் கிரவல் கலந்த கற்களை கொண்ட வீடுகளை அமைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. நாங்கள் இந்த வீட்டை பெற்றுக்கொள்ள பின்னடிப்பதற்கு, குறித்த கற்கள் நீண்ட காலங்களுக்கு பாவிக்ககூடியதாக இருக்குமோ என்ற ஒரு அச்சமே காரணமாக உள்ளது.

ஆகவே வீட்டுத்திட்டம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். மிக நீண்ட நாள்களாக தற்காலிக கொட்டைகைகளில் வசித்து வருகின்றோம். மழைக் காலங்களில் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே எமக்கான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்றனர்.

இது தொடர்பாக கண்டாவளைப் பிரதேச செயலாளரிடம் கேட்டபோது, இது ஐரோப்பிய யூனியனுடைய திட்டம். இந்த வீடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் எவையும்கிடைக்கவில்லை. கிடைத்தால் அவை தொடர்பில் பரிசீலனை செய்யப்படும்- என்றார். (எ-6)

## சதம் போட்டோருக்கு 5,000ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 14

நாட்டில் வாழும் 100 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் பெறும் முதியவர்களுக்கு தேசிய செயலகத்தால் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. ஆகவே 100 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் இருப்பின் அவர்களது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வயதை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அரசால் வழங்கப்படும் உதவி விவரம் போன்றவை உள்ளிட்ட விவரங்களை அவரவர் பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைகள் அலகுகளில் பதிவு செய்யமாறும் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கப்புலி அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 7ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கமைய கொடுப்பனவு கடந்த 1ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் அறிவித்துள்ளார். (எ-9)

## இராஜதந்திர நகர்வின் ஊடாக விடுதலையை வென்றெடுப்பதே தமிழ் அரசுக் கட்சியின் இலக்கு

இவ்வாறு கூறினார் வட. மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன்

யாழ்ப்பாணம்,டிசெ.14

தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் 2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனித்ததை அடுத்து தற்போது தொடர்வது இராஜதந்திர நகர்வு. அதன் ஊடாக தமிழ் இனத்தின் விடுதலையை வென்றெடுப்பதே தமிழ் அரசுக் கட்சியின் இலக்கு. இந்த நகர்வில் ஏற்படக்கூடிய இடர்பாடுகள், தாமதங்களைத் தவிர்க்கும் வகையிலேயே உள்ளூராட்சித் தேர்தலில் பெருமளவிலான விட்டுக்கொடுப்புடன் கட்சி செயற்படுகின்றது.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் 4ஆம் வட்டார தமிழ் அரசுக் கட்சிக் கிளையின் ஆரம்பித்து வைப்புக் கூட்டம் அச்சுவேலி தெற்கு சிவசக்தி சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதிக் கிளையின் தலைவர் எஸ்.திருநாவுக்கசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் 30 வருடங்கள் தொடர்ந்து நடைபெற்ற அகிம்சை வழிச் செயற்பாடுகள் வெற்றியளிக்காத நிலையில் ஆயுதப்போராட்டம் 30 வருடம் நடைபெற்றது. தற்போது நடைபெறும் இராஜதந்திர நகர்வின் பின்புலத்தில் பன்னாடுகளும் உதவி வருகின்றன. இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது.

பதவிக்காக தமிழ் இனத்தின் விடுதலையை கைவிட்டு விட்டார்கள் என்ற அவப்பெயர் ஏற்படக்கூடாது என்பதற்காகவே தமிழ் அரசுக் கட்சி அளவுக்கதிகமான விட்டுக்கொடுப்புடன் ரெலோ மற்றும் புளொட் அமைப்புக்களை அணைத்துச் செல்கின்றது.

இந்த விட்டுக்கொடுப்பு நிலை கட்சித் தொண்டர் மட்டத்தில் எதிர்பாராத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தலைவர்களின் சொல்லை கட்சித் தொண்டர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். பதவிக்காக இலட்சியத்தில் இருந்து தவறமாட்டோம்.

இளைஞர்கள் தமிழ் அரசுக் கட்சியில் இணைய வேண்டும். இளம் தலைமுறையினர் பொறுப்புக்களை ஏற்க முன்வரவேண்டும்.

தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரை கொள்கையில் இருந்து மாறுபடாமல் நடந்துவந்துள்ளது.

தற்போதைய இராச தந்திர நகர்வின் வெளிப்பாடாகவே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது. இது தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும்பான்மை இனத்தவருக்கு நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பாதுகாப்பான நிலை உண்டு. ஆகவே அவர்களுக்கு புதிய அரசமைப்புத் தேவையில்லை. இதனை கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் குழப்பத்துக்கு உள்ளாகாமல் இருக்கவேண்டும்- என்றார். (எ-11)

# மயிலிட்டித் துறைமுகம் விரைவில் சீரமைக்கப்படும்

தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.14

வடக்கு மாகாணத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை மீள்சீரமைப்பதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திட்ட மிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவையில் அதற்கான முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

முன்மொழிவில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள மயிலிட்டித் துறைமுகம் பெரிய மீன்பிடித் துறைமுகமாக இருந்தது. பருவமழை போன்ற கடுமையான சூழ்நிலைகளிலும் பயன்படுகின்றதொரு சிறப்பு வாய்ந்தது. அதனால் போருக்கு முன்னர் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீன் பிடித்துறையில் மிகப்பெரிய பங்கை அது வழங்கியிருந்தது.

போர்க் காலப் பகுதியில் துறைமுகத்தை இராணுவம் ஆக்கிரமித்தமையால் மீன்பிடி சார் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. போர் நிறைவடைந்ததன் பின்னர் வடக்கு மாகாணத்தில் சுமூகமான நிலையின் வெளிப்பாடாக மீனவர் துறைமுகம் மற்றும் அதனுடன் சேர்ந்த 54 ஏக்கர் நிலம் ஆகியன 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் விடுவிக்கப்பட்டன. போர்ச் சூழலின் போது இடம்பெயர்ந்த மக்கள் தற்போது, மீண்டும் குறித்த பிரதேசத்துக்கு திரும்பியுள்ளனர்-என்றார். இதன்போது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சர், மயிலிட்டித்துறைமுகத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். அத்து டன் இதற்கான அனுமதியையும் அமைச்சர் சபை வழங்கியுள்ளது. (எ-ரி)

# தண்ணீரை வைத்து அரசியல் செய்து மக்களை ஏமாற்றாதீர்கள்;

## உறுப்பினர் ஆனோல்ட் காட்டம்

யாழ்ப்பாணம், டிச.14
இரணைமடுத் தண்ணீர் யாழ்ப்பாணத்துக்கு வருமா? வராதா? என்று திடமான முடிவை எடுங்கள். அதை விடுத்து தண்ணீரை வைத்து அரசியல் செய்து மக்களை ஏமாற்றாதீர்கள் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் காட்டமாக தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றும் இடம்பெற்றது. மாகாண விவசாய அமைச்சு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுத் திட்டம் தொடர்பில் மாகாண சபையில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கதைத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் இன்று வரை திடமான முடிவு எட்டப்படவில்லை.

இரணைமடுக் குளத்தில் முன்பு இருந்த நீர் மட்டத்திலும் பார்க்க அதிக நீரைப் பேணக்கூடிய வகையில் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. எனவே நீரை வழங்குவீர்களா அல்லது வழங்கமாட்டீர்களா என்பதை வெளிப்படையாகக் கூறிவிடுங்கள். மீன்பிடிவிடயத்தில் மீன்கள் பெருகும் நாள்களில் மீன்பிடிக்குத் தடையை விதித்து அந்தக் காலப்பகுதியில் கடல்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குங்கள். அவர்களுக்கான உதவித் திட்டங்களையும் முறையாக நடைமுறைப்படுத்துங்கள். என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள வெளிச்ச வீடுகளை முதலில் திருத்தியமையுங்கள். வெளிச்ச வீடுகள் இல்லாததன் காரணமாக எமது கடல்தொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வெளிச்ச வீடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியும் என நினைக்கின்றேன் என்றார்.

"இலங்கையில் 80 வீத நீர் கடலுக்கே செல்கின்றது. ஆனால் பலர் விளக்கமில்லாமல் இரணைமடுத் திட்டம் தொடர்பாக தெளிவற்ற விளக்கங்களை கொடுப்பதாலேயே அங்குள்ள மக்கள் இந்தத் திட்டத்தை எதிர்க்கின்றனர்" என்றார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன். (எ-8)

மாகாண சபையில் இடம்பெறுவது குடும்ப சண்டையே அதற்காக

# உறுப்பினர்களை உதாசீனம் செய்வதை நிறுத்த வேண்டும்

## அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச.14
மாகாண சபை உறுப்பினர்கள் கூறுகின்ற ஆலோசனைகளை அரச அதிகாரிகள் கேட்கவேண்டும். நாம் சபையில் போடுகின்ற சண்டை குடும்பச் சண்டையே அதற்காக அதிகாரிகள் உறுப்பினர்களின் கருத்துக்களை உதாசீனம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டத்தின் அமைச்சுக்கள் மீதான விவாதம் நேற்றையதினம் மாகாண சபையில் இடம்பெற்றது. இந்த அமர்வின் ஆரம்பத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபையில் நாம் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். எமது உறுப்பினர்கள் மக்களிடம் நேரடியாகச்சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து தீர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் உறுப்பினர்கள் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கும் போதோ அல்லது அறிவுறுத்தல்களை வழங்கும்போது அதிகாரிகள் அதனை உதாசீனம் செய்வது ஏற்கக் கூடியது அல்ல.

நாம் போடுகின்ற சண்டைக்காக உறுப்பினர்களை அதிகாரிகள் புறம் தள்ளுவதை ஏற்கமுடியாது. அதிகாரிகளிடம் மாகாண சபை உறுப்பினர்கள் ஏதாவது கூறினால் அதனை அரசியல் தலையீடு எனக் காரணம் இன்றி குறைகூறாதீர்கள். அதிகாரிகள் சபை உறுப்பினர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அதிகாரிகளும் உறுப்பினர்களும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் - என்றார். (எ-8)

# நன்னீரைக் கடலில் கலக்கவிட்டு கடல்நீரை நன்னீராக்குவது சிறப்பல்ல

## மாகாண விவசாய அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 14
நன்நீரைக் கடலில் கலக்க விட்டு, கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவது சிறப்பானதல்ல. முதலில் கடலில் கலக்கும் நன்னீரைச் சேமித்துக் குடி தண்ணீருக்கு பயன்படுத்தும் திட்டங்களை முன்னெடுங்கள் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சு மீதான நேற்றைய விவாதத்தில் இறுதியாக உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதில் வழங்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் பெருமளவிலான நன்னீர் கடலில் கலக்கின்றது. அதைத் தடுத்து சேமித்து குடி தண்ணீராக்க முடியும். நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு குன்றுகளை தூர்வார வேண்டும். கடல் நீரை நன்னீராக்குவதில் எனக்கு ஆர்வம் இல்லை.

வடக்கு மாகாணத்தில் வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனாலும் பல விவசாய நிலங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இது தொடர்பிலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மக்கள் பால் உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர் இல்லை. இதனால் பால் உற்பத்தி குறைவடைந்து வருகின்றது. சில இடங்களில் பசு மாடுகளில் பாலைக் கறந்து விற்றுவிட்டு பதிலாக அங்கர் பால் பவுடர் வாங்கிச் செல்கின்றனர். இதுவே வடக்கின் நிலை. பால் உற்பத்தி மற்றும் பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்று வவுனியாவில் உள்ளது. எனினும் அது முறையற்ற விதத்தில் இயங்கி வருகின்றது. இது தொடர்பில் கூட்டுறவு அமைச்சு விசாரணை செய்ய வேண்டும்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வறுமை கூடிய மாகாணமாக வட மாகாணம் உள்ளது. மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களை மேம்படுத்தக்கூடிய துறைகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகள் எமது அமைச்சின் நிர்வாகப் பரப்பினுள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தத் துறைகளினூடாக பொருளாதார ரீதியாக நன்மை கிடைக்கக்கூடிய திட்டங்களை முன்னெடுத்து நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களை உருவாக்க முடியும். இதன் மூலம் உள்நாட்டு சந்தை வாய்ப்பு வசதி ஏற்படுவதோடு வெளிநாடுகளுக்கு எமது உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும் சூழ்நிலை ஏற்படும். 2018ஆம் ஆண்டுக்குரிய மாகாண குறித்துதொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையாக ரூபா 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் மேலும் பல நன்னீர் மீன்பிடி தொடர்பான செயல்திட்டங்களை வட மாகாணத்தில் அமுல்படுத்த முடியுமென எதிர்பார்க்கின்றேன். - என்றார். (எ-8)

தென்னிந்தியாவில் இருந்து வரும்

# தவில், நாதஸ்வரக் கலைஞர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14
தென்னிந்தியாவில் இருந்து வரும் தவில் நாதஸ்வரக் கலைஞர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 112ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்போது முதலமைச்சர் வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெற்றது. அதில்கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தை மாதம் முதல் ஆவணி மாதம் வரையில் ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அந்தக் காலங்களின் போது தென்னிந்தியாவைச் சேர்ந்த தவில் மற்றும் நாதஸ்வரக் கலைஞர்களை குடாநாட்டில் உள்ள சிலர் சுற்றுலா விசாவில் யாழ்ப்பாணம் அழைத்து வருகின்றார்கள். அவர்களை வீடுகளில் தங்க வைத்து அவர்களை ஆலய திருவிழாக்களில் சேவகத்துக்கு அழைத்து செல்கின்றனர். இதனால் உள்நாட்டில் உள்ள தவில் மற்றும் நாதஸ்வர கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

தென்னிந்தியாவில் இருந்து கலைஞர்களை அழைத்து வருவதாயின் உரிய விசா நடைமுறைகளைப் பயன்படுத்தி அழைத்து வர வேண்டும். அவ்வாறு இல்லாமல் சுற்றுலா விசாவில் அழைத்து வருபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சுற்றுலா விசாவில் வருகை தந்து ஆடை வியாபாரத்தில் ஈடுபடும் தென்னிந்திய வியாபாரி களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அதேபோன்று இவ்வாறான கலைஞர்களுக்கும் அவர்களை அழைத்து வருபவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (எ-8)

# வடக்கு விவசாயிகள் நட்டம் காரணமாக தற்கொலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது

## வட. மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிச.14
வடக்கு மாகாணத்தில் விவசாயத்தில் ஏற்படுகின்ற நட்டம் காரணமாக மனவிரக்தியில் தவறான முடிவெடுத்து தற்கொலை செய்யும் நிலை விவசாயிகள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகளின் நலனைப் பேண நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மாகாண அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் விவசாய அமைச்சு விடயத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பல சந்தர்ப்பங்களில் விவசாயிகள் நஷ்டம் அடைகின்றனர். அவ்வாறான வேளையில் உரிய நஷ்ட ஈடுகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் கடனாளியாகின்றனர். உதாரணமாக, யாழ்ப்பாணம் அல்வாயைச் சேர்ந்த விவசாயி ஒருவர் விவசாயச் செய்கையில் பலமுறை நட்டமடைந்ததால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனக்கு தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார். இவ்வாறான நிலையைத் தடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தெரிவித்ததாவது:

வடக்கில் அண்மைக்காலமாக தேங்காய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் எமது மாகாணத்தில் உள்ள தேங்காய் மாகாணத்துக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதே. இதற்குத் தடை விதிக்க வேண்டும்.

மேலும்மாகாணத்தில்புரோயிலர் இறைச்சி கோழிகள் தற்போது தாராளமாக கிடைக்கின்றன.

இந்த இறைச்சியை உண்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் பலருக்கும் பலவித நோய்கள் ஏற்படுகின்றன.

மாகாண அமைச்சின் ஊடாக கொள்ளைப் புறக் கோழிகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் அது மக்கள் மத்தியில் எந்தளவுக்கு சென்றடைந்துள்ளது. என்று தெரியவில்லை-என்றார். (எ-8)

# ராணுவ அதிகாரியின் இறுதிச் சடங்கில் முல்லைத்தீவு தமிழ் மக்கள் பங்கேற்பு



கொழும்பு, டிசெ. 14
முல்லைத்தீவில் விபத்தில் உயிரிழந்த இராணுவ அதிகாரியின் இறுதிச் சடங்கில் முல்லைத்தீவுத் தமிழ் மக்கள் பங்கேற்றுள்ளனர் என்று சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் படைமுகாமில் பணியாற்றிய லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். ஜே.குமார (வயது-47) என்பவர் கடந்த 8ஆம் திகதி முல்லைத்தீவில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்திருந்தார்.

இறுதிச் சடங்கு அவரது சொந்த ஊரான கண்டி நாவலப்பிட்டியவில் இடம்பெற்றது. முல்லைத்தீவிலிருந்து வந்த தமிழ் மக்களும், இறுதிச் சடங்கில் பங்கேற்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை மத்திய மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவக்க வழங்கினார். இறுதிச் சடங்கில் பங்கேற்ற தமிழ் மக்களை, கண்டித் தலதா மாளிகைக்கும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். (5.33)

## சிலுவைப் போருக்கு வழி வகுக்கிறார் ட்ரம்ப்!

அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, டிசெ. 14
அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப், சிலுவைப் போருக்கு வழி வகுத்தார் என்று, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளின் பகுப்பாய்வு தொடர்பில், தனது சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

'இஸ்ரேலின் தலைநகரமாக ஜெருசேலத்தை ஏற்றுக்கொள்வதாகவும், அமெரிக்காவின் தூதரகத்தை ஜெருசலேத்தில் அமைக்கவும் ட்ரம்ப் தீர்மானித்தார். அவர் கடந்த அரச தலைவர் தேர்தலில் கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே, ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக ஏற்றுக்கொள்ளப் பட்டது. எனினும், இதற்குக் கத்தோலிக்கர்களின் பிரதானியான பாப்பாண்டவர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். யூதர்களின் கைகளுக்கு ஜெருசலேத்தின் ஆட்சி அதிகாரம் சென்றால் கத்தோலிக்கர்களின் பிரச்சினையை எதிர்கொள்வர் என்பதே பாப்பாண்டவரின் எண்ணம். இந்த விடயத்தால் பல குழப்ப நிலைகள் உருவாகியுள்ளன. ஒரு பக்கம் இஸ்லாம் நாடுகள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இது சிலுவைப் போருக்கே வழிவகுக்கும்' என்றும் குறிப்பிட்டார். (5)

## தீவிரவாதிகளின் எண்ணங்கள் இன்றும் உயிர்ப்புடனேயே

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14
நாட்டைப் பிரிப்பதற்காகப் போராடிய தீவிரவாதிகள் போரின் மூலமாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட எண்ணங்கள் முற்றாகத் தோற்கடிக்கப்படவில்லை. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனங்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகளும் , நெருக்கடிகளும் கடந்த சில தசாப்தங்களாக எமது நாட்டில் காணப்பட்டது. இருப்பினும் விகாரை, பள்ளிவாசல் மற்றும் கோவில்களின் சமயத் தலைவர்களிடையே அத்தகைய பிரச்சினைகள் ஏற்படவில்லை.

தவறான பாதையில் பயணிக்கும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்குச் சமயப் போதனைகளும், கோட்பாடுகளுமே ஏதுவாக அமைகின்றது.

நாட்டில் மீண்டும் போர் ஏற்படாத வகையில் நாட்டில் நல்லிணக்கத்தையும் , சகவாழ்வையும் கட்டியெழுப்புவதற்கு அரசால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிணைவது அனைவரினதும் பொறுப்பாகும்.

நாடளாவிய ரீதியில் இந்தச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குச் சகலரும் ஒன்றிணைய வேண்டியது அவசியம். மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் சமய சகவாழ்வுக் குழுக்களை நியமித்து சகல மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (5.31)

## போர்க்காயங்களை ஆற்றுவதற்கு காலம் தேவை!

### மங்கள சமரவீர



போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுப் படுத்துவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படும் என்று அரசு தெரிவித்தது.

போர் நிறைவடைந்த போதிலும் அதனால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு பல ஆண்டுகள் தேவைப்படும் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். பால்நிலைச் சமத்துவத்துவமின்மையை அகற்றுதல், மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல், சமத்துவமான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும் என்று தெரிவித்தார். அரசால் மட்டும் இந்தச் சவால்களை வெற்றிகொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டார். (5)

### நெஸ்பி பிரபுவுக்கு

## இரகசியமாக நன்றிக் கடிதம் அனுப்பினார் மைத்திரிபால

கொழும்பு, டிசெ. 14
இலங்கையில் போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என்று பிரிட்டன் பிரபுக்கள் சபையில் உரையாற்றிய நெஸ்பி பிரபுவுக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இரகசியமாக நன்றிக் கடிதம் அனுப்பினார் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இறுதிப் போரில் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டது போல 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்படவில்லை என்றும், இறுதிப் போரில் 7 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் வரையானவர்களே கொல்லப்பட்டனர் என்றும், அவர்களில் கால்வாசிப்பேர் சாதாரண உடையில் இருந்த புலிகள் என்றும் கடந்த ஒக்ரோபர் மாதம் பிரிட்டன் பிரபுக்கள் சபையில் உரையாற்றிய போது, நெஸ்பி பிரபு கூறினார்.

இந்த நிலையில், அரசுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்ட நெஸ்பி பிரபுவுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார் என்றும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் அழுத்தங்களால் அந்தக் கடிதம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடிதம் எழுதியுள்ளார். இது பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இந்தக் கடிதம் பற்றி இலங்கையிலோ, பிரிட்டனிலோ யாருக்கும் தெரியாது.

அரச தலைவரின் கடிதம், அயலுறவுத்துறைச் செயலரின் கடிதம் ஒன்றுடன் இணைத்து வழங்கப் பட்டது.

அயலுறவுத்துறைச் செயலரின் இணைப்புக் கடிதத்தில், அரச தலைவர் மைத்திரிபாலவின் கடிதத்தின் உள்ளடக்கம் இலங்கை அல்லது பிரிட்டன் ஊடகங்களுக்குப் பகிரப்படக் கூடாது என்று கூறப்பட்டது.

ஏன் இந்த இரகசியம்? அரச தலைவர் தனது கருத்தை வெளிப்படுத்துவதற்கு அச்சம் கொண்டிருந்தால் அது தமிழ்ப் பிரிவினைவாதிகள் குறித்த அச்சமாகவே இருக்கும். இந்த இரகசியம் குறித்து அரச தலைவர் மைத்திரிபால அறிந்திருந்தாரா?, என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (5)



## மைத்திரியைச் சந்தித்தார் இந்திய வான்படைத் தளபதி

கொழும்பு, டிசெ. 14
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வான்படைத் தளபதி எயார் சீவ் மார்சல் பிரேந்தர் சிங் டனோ, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நான்கு நாள்கள் பயணமாகக் கடந்த 10ஆம் திகதி இலங்கை வந்த இந்திய வான்படைத் தளபதி எயார் சீவ் மார்சல் பிரேந்தர் சிங் டனோ, தலைமை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்திய வான்படைத் தளபதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் அவரது வதிவிடத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் வான்படைத் தளபதி எயார் மார்சல் கபில ஜயம்பதி மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோரும் கலந்து கொண்டனர். (5)

## பலமிழக்கும் மகிந்த அணி!

### மைத்திரி பக்கம் தாவத் தயாராகும் மகிந்த அணியின் மற்றொரு உறுப்பினர்

கொழும்பு, டிசெ. 14
மகிந்த ராஜபக்ச ஆதரவு கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் தாவவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரே, மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் திரும்பவுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. விரைவில் அவர் அரச தலைவர் மைத்திரியைச் சந்தித்து ஆதரவு தெரிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறியானி விஜேவிக்கிரம மற்றும் வீரகுமார திசநாயக்க ஆகியோர் அரச தலைவர் மைத்திரியின் தரப்புக்குப் பாய்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



## தமிழக அருங்காட்சியகத்தில் புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல்

கொழும்பு, டிசெ. 14
தமிழ்நாட்டுப் பொலிஸாரின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கி பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்து வருவதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

கோயம்புத்தூரில் தமிழ்நாட்டுப் பொலிஸாரின் அருங்காட்சியகம் அமைக்கப் பட்டுள்ளது.

இங்கு தமிழ்நாடு பொலிஸினதும், இந்திய இராணுவத்தினதும் பயன்பாட்டில் இருந்த ஆயுதங்கள், தளபாடங்களும், பழங்காலப் போர்க் கருவிகள் உள்ளிட்டவையும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானுக்கு எதிராகக் கார்கில் போரின்போது இந்திய இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட டாங்கி ஒன்றும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டது.

இங்கு கரையோரக் காவல் படையின் படகுகளும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி ஒன்றும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்காகத் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, இந்த நீர்மூழ்கி தமிழ்நாட்டுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சிறிய நீர்மூழ்கி, பார்வையாளர்களைப் பெரிதும் கவர்வதாக ஏஎன்ஐ செய்தி வெளியிட்டது. (5)

# மோசடி வழக்கிலிருந்து ரங்கே பண்டார விடுதலை

## கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவிப்பு

அதி சொகுசு வாகனத்தை உரிமையாக்கித் தருவதாக உறுதியளித்து 54 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக க் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கேபண்டாரவை அனைத்துக் குற்றச் சாட்டுக்களில் இருந்தும் கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்தது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெய்யந்துடுவ இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிச் சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்கவின் அறிவித்தலுக்கு அமைவாகவே வழக்கை நேற்றுமுன்தினம் நிறைவுக்குக் கொண்டுவந்து நீதிபதி, இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கேபண்டாரவை விடுவித்தார். பாலித்த ரங்கேபண்டாரவுக்கு எதிரான மோசடிச் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டுத் தரப்பினர், விடயத்தை ச் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டுள்ளதாகச் சத்தியக் கடதாசி ஊடாகச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறியத் தந்துள்ளனர்.

இவ்வழக்குத் தொடர்பிலான குற்றப் பத்திரிகையை மீளப் பெற அனுமதிக்க வேண்டும் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க மன்றைக் கோரினார். இதற்கு அனுமதியளித்த நீதிபதி ஹெய்யந்துடுவ, வழக்கை நிறைவுறுத்திப் பிரதிவாதியான இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டாரவை முழுமையாக விடுதலை செய்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினம் ஒன்றில் மாதிவெலப் பகுதியில் வைத்து அதி சொகுசு வாகனம் ஒன்றை 5 வருடங்களுக்கு உரிமையாக்கித் தருவதாக வாக்குறுதியளித்து 54 இலட்சம் ரூபா பணத்தை ரத்நாயக்க என்பவரிடம் இருந்து பெற்று, வாக்குறுதியின் பிரகாரம் வாகனத்தை உரிமையாக்காது நம்பிக்கை மோசடி செய்ததாக ரங்கே பண்டாரவுக்குஎதிராகச்சட்டமாஅதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.31)

---


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 14.11.2017 செவ்வாய்க் கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

**செல்லையா இராசேந்திரம் (பத்தர்)**



தோற்றம் 14.07.1934 மறைவு 14.11.2017

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் மற்றும் உதவிகள் அளித்தவர் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

142/ 33, பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான **திருமதி யோகராணி விஜேந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்

**பத்மநாதன் பரமேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ வண்ணை நாவலர் ம.வி



## மரண அறிவித்தல்



**திருமதி இராஜேஸ்வரி மகாதேவா**

கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி மகாதேவா 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதிகளின் செல்வப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பவளம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மகாதேவாவின் மனைவியும் நிஷானந்தி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தாயும் பிறேமகுமார், சீந்தா ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி, நாகேஸ்வரி, சொர்ணலக் ஷ்மி, புஸ்வவதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி , இரத்தின சபாபதி, மற்றும் பாக்கியநாதன், பரமேஸ்வரி,ஞானேஸ்வரி,கமலேஸ்வரி, அசோக் குமார் ஆகியோரின் மைத்துனியும் அதீனா, அதீனன், அக் ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
தே.ஜெயகுமார்
(மருமகன்)



## கண்ணீர் அஞ்சலி



**சுப்பிரமணியம் பரமநாதன்**

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் முன்னாள் தலைவரும், இந்து அமைப்புக்களின் ஒன்றியச்செயலாளரும், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான தூதுக்குழுவின் செயலாளரும், இன்னும் பல மக்கள் நலன்புரி அமைப்புக்களிலும் தனது ஓய்வுக்காலத்தில் ஓய்வின்றி உழைத்தவரும், வலிவடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்காக தொடர்ந்து குரல்கொடுத்து வந்தவருமான ஒரு பெருமகனை இழந்து விட்டோம். தமிழ் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இந்த இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

"அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக"

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் வணிகர் கழகம்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
**பேரம்பலம் பொன்னம்மா**

தோற்றம் 29.09.1934 மறைவு 14.11.2017



பாசமலரே! எம்மைப் பெற்றெடுத்த திருமகளே!
உங்கள் பிரிவையெண்ணி வாடி நிற்கின்றோம்
உங்கள் திருமுகத்தை இனி எப்போ காண்போம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

அன்னையின் மறைவையொட்டி நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் கவலை தெரிவித்தவர்களுக்கும் எம் நன்றிகள்.

இன்று (14.12.2017) வியாழக்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

# ஐ.தே.க. உறுப்பினர்கள் இருவர் பதவி துறப்பு!

## மாகாண சபையிலிருந்து வெளியேறி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டி

கொழும்பு, டிசெ. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் தமது பதவியிலிருந்து நேற்றுமுன்தினம் விலகியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தலைமை வேட்பாளர்களாகக் களமிறங்குவதற்காகவே அவர்கள், மாகாண சபை உறுப்பினர் பதவியைத் துறந்துள்ளனர்.

மேல்மாகாண சபையின் சபைத் தலைவராக இருந்த ரோஹிஸ் பெர்ணாந்து மற்றும் பிரியந்த சம்பத் ஆகியோரே இவ்வாறு பதவி விலகியுள்ளனர்.

நீர்கொழும்புப் பிரதேச சபையின் தலைமை வேட்பாளராக பெர்ணாந்து போட்டி யிடவுள்ளதுடன், பியகம பிரதேச சபையின் தலைமை வேட்பாளராகப் பிரியந்த சம்பத் போட்டியிடவுள்ளார்.

நேற்றுமுன்தினம் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு மேல்மாகாண சபையில் இடம்பெறுவதற்கு முன்னதாக இவர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை சபையில் வைத்து அவைத் தலைவரிடம் கையளித்தனர். (5)

# செக்ஸ் தேடும் பட்டியலில் இலங்கை மூன்றாம் இடத்தில்

இணையத்தில் செக்ஸ் என்ற சொல்லைத் தேடும் நாடுகளில் இலங்கை மூன்றாம் இடத்திலுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்தது.

இந்த ஆண்டு பங்களாதேஷ் முதலிடத்திலும், எத்தியோப்பியா இரண்டாம் இடத்திலும் உள்ளது. நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் முறையே நான்காம், ஐந்தாம் இடங்களில் உள்ளன.

இந்தப் பட்டியலில் முதல் நகரமாக இலங்கையின் ஹோமாகம விளங்குவதோடு அதற்கு அடுத்த இடங்களில் சென்னை, டாக்கா என்பன இடம்பிடித்துள்ளன.

முழு ஆண்டிலும் பாடசாலை விடுமுறை மாதங்களான ஓகஸ்ட் மற்றும் ஏப்ரலிலேயே அதிக முறை செக்ஸ் என்ற சொல் தேடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (5)

**பெயர் மாற்றம்**

இதுவரை காலமும் தயாளன் பிரசன்னா என அழைக்கப்பட்ட நான் இன்றிலிருந்து எனது பெயரை தயாளன் பிரசன்யா என மாற்றியமைக்கின்றேன்.

தயாளன் பிரசன்யா

**பெயர் மாற்றம்**

இது வரை காலமும் இராஜசெல்வன் ரஞ்சித் என அழைக்கப்பட்ட நான் இன்றிலிருந்து எனது அனைத்து ஆவணங்களிலும் இராசசெல்வன் ரஞ்ஜித் என மாற்றியமைக்கின்றேன்.

இராசசெல்வன் ரஞ்ஜித்
077 496 3125

**வாடகைக்கு**

இலக்கம் 01, பெந்தேக்கோஸ் வீதியில் (A9 வீதிக்கு அருகில்) வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 077 684 8446

**வாகனம் வாடகைக்கு விடப்படும்**

10 1/2 அடி நீளமுள்ள JMC லொறி மூடிய நிலையில் உள்ளது.

தொடர்பு :-077 844 8797

**பெயர்மாற்றம்**

வருசம்புலம் சுன்னாகத்தை வதிவிடமாகக் கொண்ட நடேசு சசீலா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை நடேசு சுசீலா என பெயர்மாற்றம் செய்வதோடு இப்பெயரை சகல ஆவணங்களிலும் உபயோகப்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

நடேசு சுசீலா

**பதவி வெற்றிடம்**

யாழ்.நகரில் இயங்கும் DSI மொத்த வியாபார நிலையத்துக்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் தங்களது சுயவிவரக் கோவையை எதிர்வரும் 25.12.2017 இற்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சுப்ப சூஸ்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

நல்ல இன தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, மாதுளை, கொய்யா, முந்திரிகை, கன்று, முருங்கை(P.K.M), ரெட்லேடி பப்பா, கயூ, தேக்கு, பாலை, மலை வேம்பு, வெற்றிலை மற்றும் பல இன மரக்கன்றுகளும் பூங்கன்றுகளும் பூஞ்சாடிகளும் விற்பனைக்குண்டு.

நியூலங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

கிளை: K.K.S வீதி, இணுவில்


**அறிவித்தல்**

**சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்**

2018 ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி பிரதேச சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 14.12.2017 ஆம் திகதி தொடக்கம் 22.12.2017 ஆம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
சாவகச்சேரி பிரதேசசபை
கொடிகாமம்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
நல்லதம்பி கணேசபிள்ளை

தோற்றம்
20.06.1928

மறைவு
25.12.2016

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இறைவனுடன் இரண்டறக் கலந்த
எம்குடும்ப சூரியனை எம் உள்ளங்களில்
எந்நாளும் வணங்குகின்றோம்

வேலணை மேற்கு,
வேலணை.

குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை**



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்து தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை 02.12.2017 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சிரோன்மணியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பரமகுரு, சின்னத்தம்பி, பொன்னம்மா, சோதிப்பிள்ளை, அல்லிமலர், சிவகுரு ஆகியோ ரின் சகோதரரும், ஞானகணேசன் (பிரதேச மின் பொறியியலாளர் - இ.மி.சபை, யாழ். பிரதேசம்), Dr. ஞானபாஸ்கரன் (கனடா), ஞானாம்பாள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தினி, அஜந்தா (கனடா), கணேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், ரஜீவன், ஷர்மி, அஸ்வின், சோபிதா, ஹம்சினி அபிஷேக், அகல்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2017 சனிக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 17.12.2017 ஞாயிற்றுக்கிழமை கனடா Highland Hills Crematorium, 12492 Woodbine Ave Gormley, Ontrio, LOH IGO இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ச.ஞானகணேசன் (மகன்- 077 737 6450)
Dr. ஞானபாஸ்கரன் (மகன்-கனடா- 00190 5534 2079)
544,William Bercy Blod,Markham, Ontario
L6C2P6

**கண்ணீர் காணிக்கை**



எமது சக உத்தியோகத்தர்
T. துஷ்யந்தன் அவர்களின்
அன்பு மகள்
**அபிஷா**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம்.

**விழிநீர் சொரிகின்றோம் !**



**சுப்பிரமணியம் பரமநாதன்**

தன்னலம் கருதாது மக்கள் பணி செய்யவென பல அமைப்புக்களில்
பொறுப்பான பதவிகளை ஏற்று வினைத்திறனுடன் பணியாற்றிய
வரியையிலே யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வளர்ச்சியிலும் அதீத அக்கறை
கொண்டு பல்வேறு உதவிகளைப் பெற்றுதந்த பெருமகனின்
இழப்பினால் நாம் மிகுந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்
யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம்.

**ஆறாத காயங்களுடன் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
15 . 03 . 1953

மறைவு
14 . 12 . 2010

அமரர்
**மயில்வாகனம் சுந்தரலிங்கம்**

பூமிக்கு ஓர் யாத்திரை வந்தீர்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டீர்
நித்திரை போவது நியதி என்றால்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்
இன்பங்கள் சேருமிடத்தில் இன்முகம் காட்டி நின்றீர்
துன்பங்கள் சேருமிடத்தில் துணிவு தந்து துணைநின்றீர்
பொதுச்சேவை எனும் போது பொக்கிசமாய் சேவை செய்தீர்
அத்தனையும் மறந்து விண்ணில் ஏழாண்டு வாழ்ந்து விட்டீர் !
இவ்வாண்டு மனைவியையும் துணைக்கு அழைத்தீர் !
ஆண்டேழு சென்றாலும் ஆறாது உம் நினைவு
உங்கள் நினைவுகளுடன் காலங்களைக் கடக்கின்றோம்
யாதுமறியா பிள்ளைகள் நாம் !!!

94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

**இராமுப்பிள்ளை தியாகராசா**



பிறப்பு 19.01.1948
இறப்பு 12.12.2017

ஞானிமடம் பூநகரியை சவிப்பிடமாகக் கொண்ட சோதிடரும் தொண்டருமாகிய காலஞ்சென்ற சின்னப்பு இராமுப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் புதல்வன் இராமுப்பிள்ளை தியாகராசா அகாலமரணமானார்.

ஞானிமடம் பூநகரியை பிறப்பிடமாகவும் மன்னார் வீதி, 5ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானிமடம் பாம்பு அணிந்தான் வைரவர் கோயில் பூசகரும், பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் காவலாளியும் ஆவார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் இரா.செல்வராசா)(ஓய்வு நிலை உத்தியோகத்தரும் சமாதான நீதிவானும், பிரதேச செயலகம், பூநகரி) இராமுப்பிள்ளை கந்தசாமி(ஓய்வு நிலை உத்தியோகத்தர் ,பிரதேசசபை, பூநகரி), சபாரத்தினம் அன்னலட்சுமி (ஞானிமடம், பூநகரி), சுப்பிரமணியம் தனலட்சுமி (சிவன்கோயிலடி - உருத்திரபுரம்) காலஞ்சென்ற விஜயலட்சுமி(தங்கம்), இராமுப்பிள்ளை மகாலிங்கம்(சந்திரன் வெடியரசன் மாவீரர்), இராமுப்பிள்ளை கருணாநிதி(கருணா சிவன்கோயிலடி, உருத்திரபுரம்) காலஞ்சென்ற விஷகடி வைத்தியர் கந்தசாமி அவர்களின் மனைவியும் மகேஸ்வரி (இராசமணி) காலஞ்சென்ற இராசையா சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் தியாகராசா சூரியகுமாரன்(சூரி விவசாயப் பணியாளர், கிளி/முக்கொம்பன், ம.வி), நந்தகுமாரி (நந்தினி ஞானிமடம்), விஜயகுமாரி(றதி ஜெயபுரம்), சிவகுமாரன்(விநாயகபுரம், கிளிநொச்சி), உமாகுமாரன்(முகுந்தன்), நளாயினி(ஞானிமடம்), சகுந்தலாதேவி (பாமா 5ஆம் கட்டை, பூநகரி), கலைவாணி(யானகி கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம்) ,சிவபாலன் (காண்டிபன்) ஆகியோர்களின் பாசமிகு தந்தையும் வசந்தகுமார்(ஞானிமடம்), ரவிச்சந்திரன் (அலுவலகப் பணியாளர், ஜெயபுரம்ம.வி), முகுந்தினி(அரசபுரம், பூநகரி), புனிதஜோதி(விநாயகபுரம், கிளிநொச்சி), கரிகரன்(ஆட்டோ உரிமையாளர் ஞானிமடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சூ.சனோபா, சூ.அக்ஷயா, வ.விந்தன், வ.விந்துசா, வ.இசைவிழி, வ.லக்சிகா, வ.கிருபனா, வ.லக்ஷாயினி, ர.இறைஔி, ர.கதிர்ஔி, ர.திகழ்ஔி, ர.சாம்பவி, சி.திசோக், சி.றாபின், க.சரணிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2017.12.14) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லமான 5ஆம் கட்டை பூநகரியில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக ஈநொச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் கட்டை, ஞானிமடம்,
பூநகரி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 043 0078

# தேர்தலில் தனிவழி

**லங்கா சமசமாசக் கட்சி மகிந்த அணிக்கு எச்சரிக்கை**

மகிந்த அணி தேர்தலில் எமக்குரிய தொகுதிகளை வழங்காவிட்டால் தனித்துப் போட்டியிடுவோம். இவ்வாறு லங்கா சமசமாசக் கட்சி தெரிவித்தது.

லங்கா சமசமாசக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கட்சியின் பிரதிச் செயலர் அனில்த சொய்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தலில் லங்கா சமசமாசக் கட்சி கூட்டு எதிரணியுடன் இணைந்து மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கே தீர்மானித்துள்ளோம். அதுதொடர்பாக இறுதித் தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்பட்வில்லை. தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

லங்கா சமசமாசக் கட்சி ஒரு கொள்கையில் கூட்டு எதிரணியில் தொடர்ந்து இருந்து வருகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து போட்டியிட வருமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை.

அரசை விமர்சித்துக் கொண்டு அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து எங்களால் தேர்தலுக்குச் செல்லமுடியாது.

அரசுக்கு விரோதமான கட்சிகள் அனைத்தும் கூட்டு எதிரணியில் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதன் மூலமே தேர்தலில் நல்லதொரு பாடத்தை அரசுக்குப் புகட்டமுடியும். அதற்காக நாங்கள் பல விட்டுக்கொடுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றோம். ஒரு சில தொகுதிகளில் நாங்கள் பல வருடங்களாக அந்தச் சபைகளில் பிரதிநிதியாக இருந்து வருகின்றோம். அவ்வாறான தொகுதிகளை எங்களுக்குத் தர மறுப்பு தெரிவிப்பதற்கு எந்த அருகதையும் இல்லை.

கூட்டு எதிர்க்கட்சி எங்களுக்கு உரித்தான தொகுதிகளைத் தர மறுத்தால் நாங்கள் தனித்துப் போட்டியிட்டாவது அந்தத் தொகுதிகளைக் கைப்பற்றுவோம். கடந்த காலத்தில் அவ்வாறு போட்டியிட்டு நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம் - என்றார். (5)


## பழைய மாணவர் சங்கம்

உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி திருகோணமலை

**விசேட பொதுக்கூட்டம்**

இடம் : கல்லூரி மண்டபம்
காலம்: 15.01.2018 மாலை 16.30 மணி

இவ் விசேட பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான அங்கத்துவ உறுதிப்படுத்துதல் இறுதித்தினம் : - 31.12.2017

மேற்படி விசேட பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடியவாறாக சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் சங்கத்திற்கு செலுத்தவேண்டிய சந்தாப்பணம் மற்றும் ஏனைய நிலுவைகளினை 31.12.2017 ற்கு முன்னதாக செலுத்தி தத்தமது அங்கத்துவத்தினையும் வாக்குரிமையினையும் உறுதி செய்து தவறாது சமூகமளிக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றீர்கள். பழையமாணவர் சங்க யாப்பினது அத்தியாயம் 03 இன் பிரிவு 103 இன்படி இவ்விடயத்தினை அனைவரும் நிறைவேற்றவேண்டிய தேவையுள்ளது என்பதனை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

மேற்படி கூட்டத்திற்கு வருகைதர உத்தேசிக்கும் புதிய உறுப்பினர்களும் 31.12.2017 இற்கு முன்னராக தத்தமது உறுப்பு நிலைமையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உறுப்புரிமையை பெற்றுக்கொண்ட சகல அங்கத்தவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தொடர்புகளுக்கு பொதுச் செயலாளர் 071 688 3940 பொருளாளர் 077 911 3011

தலைவர்     பொதுச் செயலாளர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவி



செல்வி **ரவீந்திரன் அக்ஷயா**

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். எங்கள் அன்புச் செல்வம் கல்வியில் மேலும் பலபெருமைகளைத் தேடி சாதனைகள் படைக் வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அன்புப் பெரியப்பா, பெரியம்மா,
ஆசை அண்ணா, அக்கா,
இராசவீதி,
நவற்கிரி மேற்கு, புத்தூர்.

## யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை பதவி வெற்றிடம்

**01. பதவி - கணினி பக்க உருவாக்குனர் தரம் 322/10**

சம்பளத்திட்டம் - 15305 - 170 X10 - 190 X 10 - 18905
(கூ.வே ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

◆ **கல்வித்தகைமை**

01. சிங்களம்/ தமிழ்மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதம் உட்பட 4 திறமைச் சித்தியுடன் 2 தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3 மாதங்களுக்குக் குறையாத முழு நேர (MS Office) அல்லது அதனையொத்த கணினி பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அல்லது**

02. அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனமொன்றில் 3 மாதங்களுக்குக் குறையாத முழுநேரக் கணினிப் பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த இப்பதவியில் அல்லது அதனையொத்த பதவியொன்றில் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு ஆண்டுக்குக் குறையாத காலம் கடமை புரிந்திருத்தல்.

**02. பதவி - விரிவுரையாளர் தரம் 212/05**

சம்பளத்திட்டம் - 17805 - 270 X10 - 300 X 10 - 23505
(கூ.வே ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

◆ **கல்வித்தகைமை**

01. கூட்டுறவு ஊழியர் 06 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

02. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தல் துறையில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு காலம் சேவையாற்றிய அனுபவம் .

**அல்லது**

03. கூட்டுறவு ஊழியர் உயர்தர தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தல் துறையில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

- கணினி அறிவுடையோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயதெல்லை - 21 -45 (கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

- **விண்ணப்ப முடிவுதிகதி: 29.12.2017**
- **விண்ணப்பிக்க வேண்டிய முகவரி - செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2 ஆம் மாடி. இல.12. கே.கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.**

**விண்ணப்பப் படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும் (சான்றிதழ்களின் பிரதிகள் யாவும் இணைக்கப்பட வேண்டும்)**

**செயலாளர்,**
14.12.2017     **யா.மா.கூ. சபை.**

04.12.2017 - 31.12.2017 வரை போத்தீஸ் இன் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு 10% - 20% விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படுகின்றன

New POTHYS

# New போத்தீஸ்




10%-20% வரை விசேட விலைக்கழிவு

திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்
Alayam Of Silks

இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.

021 222 5464

Pearson BTEC

# HND

COMPUTING

CIVIL ENGINEERING

BUSINESS MANAGEMENT

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 23.01.2018**

குறைந்த செலவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டக்கல்விகளை உயர்கல்விக்கே உரித்தான IIS வளாகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

எமது கற்கை நெறிகள் யாவும் TVEC ன் அங்கீகாரம் பெற்றமை

தொடர்புகளுக்கு : 071 777 5666

**IIS City Campus**

#200 Sivanpannai Road Jaffna
021 222 8060 | 021 4900 900
www.iis.edu.lk | info@iis.edu.lk

# தொடருந்து ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு,டிசெ.14

நாடளாவிய ரீதியில் தொடருந்து ஊழியர்களால் முன்னெடுக்கப் பட்டுவந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

பணிப் புறக்கணிப்புத் தொடர்பில் ஆராயவென அமர்த்தப்பட்ட அமைச்சர் குழுவினரோடு தொடருந்து ஊழியர்கள் நேற்று முன்னெடுத்த பேச்சுவார்த்தையில் சமரச முயற்சி எட்டப்பட்ட நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது எனத் தொடருந்து தொழிற்சங்கம் தெரிவித்தது.

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடருந்தின் பதின்மூன்று தொழிற்சங்கங்கள் தொடர்ந்து 7 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்றுடன் போராட்டம் கைவிடப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் தொடருந்தில் பணியாற்றும் ஊழியர்கள் பணிக்குத் திரும்பாதவிடத்து, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படவுள்ளனர் எனவும் தொடருந்துத் திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது. (ற-ரி5)



## அ.இ. த. காங்கிரஸ் நேற்று கட்டுப்பணம் செலுத்தியது

கிளிநொச்சி,டிசெ.14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நேற்று கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் செயலகத்தில் செலுத்தினர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் தலைமையில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கான கட்டுப் பணம் செலுத்தப்பட்டது. (ற-ரி5)

## கல்லூரிகளுக்கு வாகனம் வழங்கும் நிகழ்வு நேற்று

கொழும்பு,டிசெ.14

19 கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய வாகனங்கள் நேற்று கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்,கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

புதிய வாகனங்கள் கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த வாகனங்கள் 5 வருடகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## தொற்றா நோய் தொடர்பான பரிசோதனை முகாம் நேற்று

சாவகச்சேரி டிசெம். 14

மட்டுவில் தெற்குப் பிரதேச மக்களுக்கான தொற்றா நோய் தொடர்பான பரிசோதனை முகாம் நேற்று மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச் சுகாதார பரிசோதகர் க.கிருஷ்ணரட்சகனின் ஏற்பாட்டில் நடைபெற்ற முகாமில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

பரிசோதனை முகாமில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (ற.ரி5.9)

## விடுதலைப் புலி உறுப்பினர்கள் 7 பேருக்கு கடூழியச் சிறை

கொழும்பு,டிச.14

கொலைக் குற்[ற]த்தை ஒப்புக்கொண்ட விடுதலைப் புலிகளின் முன்னா[ள்] உறுப்பினர்கள் 7 பேருக்கு தலா 56 ஆண்டு க[டூ]ழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

அனுரா[த]புர[ம்] விசேட மேல் நீதிமன்றம் நேற்று இந்தத் தண்டனை[யை] வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்த [கு]ற்றவாளிகள் மன்னார், வவுனியா, சாவகச்சேரி மற்றும் புத்தளம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரி[வி]க்கப்பட்டது.

எட்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபர் குற்றவாளிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

தேடுதல் ஒன்றுக்காக மருத்துவர் உட்பட 7 தேசிய சுற்றுலாப் பயணிகள் கப் வண்டியில் சென்று கொண்டிருந்த போது கடந்த 2006ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி கிளைமோர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. (ற)

## மின்கம்பத்துடன் மோதி விபத்து: ஒருவர் சாவு



தலவாக்கலை,டிசெ.14

தலவாக்கலை பூண்டுலோய தொரண சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.





பூண்டுலோயா பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி உந்துருளியில் வந்த நபர் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மின் கம்பத்துடன் மோதுண்டமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் உந்துருளி சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## தசநாயக்க உள்ளிட்ட ஐவரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.14

விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி தசநாயக்க உள்ளிட்ட ஐவரினதும் விளக்கமறியல் எதிர் வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. கொழும்பு முதன்மை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 11 இளைஞர்களின் கடத்தல் மற்றும் காணாமற்போதலுடன் தொடர்புபட்டார். என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார். 2008 மற்றும் 2009 ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சி.ஐ.டி விசாரணைகளின்போது வெலிசரவில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இளைஞர்கள் 2008 மற்றும் 2009 ஆகிய காலப்பகுதியில் தெஹிவளை, பத்தரமுல்லை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைத்துக் கடத்தப்பட்டனர். (ற-ரி5)

## வாகனத் தரிப்பிடம் வவுனியாவில் திறப்பு

வவுனியா,டிசெ.14

வவுனியா நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் மழலைகள் மகிழ்வகம் மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பன நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா நீதிமன்றில் 'தாபரிப்பு' குடும்பப் பிணக்குகள் வழக்குகளுக்கு, வேறு வழக்குகளிலும் வருகைதரும் பொதுமக்கள் தமது பிள்ளைகளை நீதிமன்றத்தினுள் அமைதியாக வைத்துக் கொண்டிருப்பதில் நீதிமன்றமும், பிள்ளைகளின் பெற்றோரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டது. இந்தப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக, 'யுனிசெவ்' அமைப்பால் பன்னாட்டு சிறுவர் தினம் - 2017 எனும் செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தளபாடங்களைக் கொண்டு, நீதி அமைச்சின் அனுசரணையுடன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரனின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)








# கலிபோர்னியாவில் காட்டுத் தீ தீவிரம்

வொஷிங்டன், டிசெ. 14
அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கடந்த ஒரு வாரமாக பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கலிபோர்னியாவின் வடக்குப் பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்துக்கும் அதிகமாக தொடர்ந்து தீ பரவி வருகிறது. லட்சக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். வீடுகள், தொழில் நிறுவனங்கள், கடைகள் என்று சுமார் ஆயிரம் கட்டங்கள் தீக்கிரையாகியுள்ளன. சுமார் 50ஆயிரம் ஹெக்டயர் வனப்பகுதி தீக்கிரை யாகியுள்ளது.

உலங்கு வானூர்திகளிலும், தீயணைப்பு வாகனங்களிலும் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடுமையாகப் போராடுகின்ற போதிலும் எந்தவித பயனும் ஏற்படவில்லை. (ம)



# ஈரானில் நிலநடுக்கம்

ஈரானில் அதிகாலை நில நடுக்கம் ஏற்பட்டது. ஈரானின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள கெர்மன் மாகாணத்தில் இந்த நில அதிர்வு உணரப்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.2 என்ற அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியது. 57 கி.மீ. ஆழத்தில் இந்த நில அதிர்வு ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சுமார் 20 வீடுகள்சேதமடைந்துள்ளன. மேலும், 18 பேர் காயம் அடைந்துள்ளனர். நேற்றுமுன்தினமும் இதே பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)


## புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

### பதவிவெற்றிடம்

**எமது சங்கத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**1. பதவி :-களஞ்சியமேற்பார்வையாளர் (207/13)**
சம்பளஅளவுத்திட்டம் :- 14230-120X10-130X10-16730
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 14வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்க ளுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 15 வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04)வருடங்களுக்கு குறையாதஅனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழிஉட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு (02) குறையாத அனுபவம்.

**2.பதவி :-எழுதுனர் (302/16)**
சம்பளஅளவுத்திட்டம் :- 13160-105 X10-115X10-15360
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இருதடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

**3. பதவி :- களஞ்சியமுகாமையாளர் (208/15)**
சம்பளஅளவுத்திட்டம் :- 13515-110 X10-120X10-15815
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04)வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர்(சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**4. பதவி :-விற்பனை உதவியாளர் (308/17)**
சம்பளஅளவுத்திட்டம் :- 12800-100 X10-110X10-14900
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் கனிஸ்டதரச்சான்றிதழ்

அல்லது

08 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக (03) மூன்றுவருடங்களுக்கு குறையாத அனுபவம்

**5. பதவி :-தொழிலாளி (318/17)**
சம்பளஅளவுத்திட்டம் :- 12800-100 X10-110X10-14900
(13/2015 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. 05ஆம்வகுப்பு கல்விச்சான்றிதளும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

பொதுவானது

- வயது எல்லை 18-45 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.கூட்டுறவுச்சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயது எல்லை இல்லை .சங்கத்தினுடாகவே விண்ணப்பிக்க-வேண்டும்.
- விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
- சங்கத்தால் கோரப்படும் பிணையைச்செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத்தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ் ,கல்வித்தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், தொழிற்தகைமைச்சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 20.12.2017ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், குழந்தையேசு கோயில் வீதி, மந்துவில், புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தாபலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி விண்ணப்ப பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்.**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம் புதுக்குடியிருப்பு**
**021-2061696**


# அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீதான பாலியல் முறைப்பாட்டை விசாரிக்கத் தேவையில்லை என்கிறது வெள்ளை மாளிகை



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீதான பாலியல் முறைப்பாடுகளை விசாரிக்கத் தேவையில்லை என்று அறிவித்தது வெள்ளை மாளிகை.

அமெரிக்காவில் கடந்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ட்ரம்ப் போட்டியிட்டார். அவர்மீது பல்வேறு பெண்கள் பாலியல் குற்றச்சாட்டை சுமத்தினார்கள். தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு டொனால்ட் ட்ரம்ப் மறுப்புத் தெரித்தார். ட்ரம்ப் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பல தரப்புக்களிடம் இருந்தும் அழுத்தம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அவ்வாறான விசாரணை தேவையில்லை என்று அறிவித்தது வெள்ளை மாளிகை.

இந்தவிடயம்தொடர்பில்வெள்ளைமாளிகை வெளியிட்ட அறிக்கையில், 'ட்ரம்ப் மீதான இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை. அதிபருக்கானதேர்தல்பரப்புரையின்போது இதற்காக விரிவாக பதில் அளிக்கப்பட்டு விட்டது.

மக்களும் வெற்றியைக் கொடுத்து அவர்களுக்குப் பதிலளித்துள்ளனர். ஒருசிலரின் குற்றச்சாட்டுக்காக அவர் மீது விசாரணை நடத்த முடியாது' என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

> “ அதிபருக்கான தேர்தல் பரப்புரை யின்போது இதற்காக விரிவாக பதில் அளிக்கப்பட்டு விட்டது. மக்களும் வெற்றியைக் கொடுத்து அவர்களுக்குப் பதிலளித்துள்ளனர்.

எதிர்க் கட்சிகளுக்குத் தடை விவகாரம்

# நிக்கோலஸ் மதுரோவுக்கு அமெ. கடு

கரஸ்கஸ், டிசெ. 14
வெனிசுலா அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குத் தடை விதிக்கப்படும் என்ற அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் கருத்துக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெனிசுலாவில் அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் 3 முக்கிய எதிர்க்கட்சிகள் போட்டியிடாமல் புறக்கணித்தன.

இதையடுத்து இனிவரும் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் போட்டியிட தடை விதிக்கப்படும் என்று அதிபர் நிக்கோலஸ் மதுரோ அறிவித் தார்.

இந்த நிலையில் அங்கு அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் எதிர்க்கட்சிகள் போட்டியிட அதிபர் நிக்கோலஸ் மதுரோ வாய்ப்பு வழங்க மாட்டார் என்று தெரியவந்துள்ளது. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

இது குறித்
அமைச்ச
யில்,
"அனைத்
அளித்து,
துமான தே
ளது கருத்
மக்களுக்கு
ளது" என

# நீண்
# பல
# பதற்



ஜெருசலேம், டிசெ. 14
இஸ்ரேலின் தலைநகர
ஜெருசலேமை அமெரிக்
அங்கிகரித்தமையைக் க
டித்து பலஸ்தீனத்தி
தொடர்ந்து ஆர்ப்பாட்டங்
நடத்தப்பட்டு வருகின்றன
பலஸ்தீனத்தின் பல பகு
ளைக் கைப்பற்றி அவற்
தன்னுடன் இணைத்தி
தது இஸ்ரேல்.
கிழக்கு ஜெருசலே
இஸ்ரேலால் ஆக்கிரமி
கப்பட்டிருந்தது. மட்டு ம



சூரியக் குடும்பத்தில்
அளவில் இந்த விண்
ஹவாய் பல்கலைக்
எனப் பெயரிட்டுள்ள
கண்டறிந்தனர். தெ
மணிக்கு ஒரு லட்சத்
மேலும் தெரிவிக்கப்

# ண்டு செல்கிறது
# லஸ்தீனத்தில்
# ற்ற நிலமை



ச. 14

லைநகராக அமெரிக்கா லையைக்கண் தீனத்தில் பாட்டங்கள் நகின்றன.

பல பகுதிக ரி அவற்றை ணைத்திருந்

சலேமும் ஆக்கிரமிக் . மட்டு மல் லாமல் ஜெருசலேமை தனது தலைநகராகவும் இஸ்ரேல் அறிவித்திருந்தது. உலக நாடுகள் எவையும் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கிகரிக்கவில்லை.

எனினும் கடந்த வாரம் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை ஏற்றுக்கொண்டது அமெரிக்கா.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பலஸ்தீனத்தின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. யூதர்களும், பலஸ்தீனர்களும் செறிந்து வாழும் கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை, காசா ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் மேலும்வலுப் பெற்றுள்ளன. யூதர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே மோதல்களும் இடம்பெற்று வருகின்றன. பதற்றம் எல்லைமீறிச் செல்கிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



குளிர்கால ஒலிம்பிக் தொடர் தென்கொரியாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடரின் போது அசம்பாவிதம் எதுவும் ஏற்பட்டால் அதை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பில் தென்கொரியா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்டனர். (ம)



## சூரியக் குடும்பத்தில் மிகப்பெரிய விண்கல்


டும்பத்தில் புதிய விண்கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய இந்த விண்கல் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ல்கலைக்கழகம் இந்த விண்கல்லைக் கண்டுபிடித்துள்ளது. ஓயூமுயா ரிட்டுள்ளனர். இதை 'பன் ஸ்டார்ஸ்' 1 என்ற தொலைநோக்கியின் மூலம் தனர். தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த விண்கல் ஒரு லட்சத்து 96 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் சுற்றிவருகிறது என்றும் தரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கடும் கண்டனம்

இது குறித்து அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில்,

"அனைத்து மக்களும் போட்டியிட வாய்ப்பு அளித்து, நேர்மையானதும், சுதந்திர மான துமான தேர்தல் நடைமுறை மூலம் தங்களது கருத்துக்களை தெரிவிக்க வெனிசுலா மக்களுக்குத் தகுதியும், உரிமையும் உள்ளது" என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



நிக்கோலஸ் மதுரோ




உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காரணங்கள் சொல்வது தலைமைக்கு அழகல்ல

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடுத்த ஆண்டுக்கானநிதி நிலை அறிக்கையை (வரவு செலவுத் திட்டம்) நேற்றுமுன்தினம் சபையில் முன்வைத்தார். இதுவே அவர் முன்வைக்கும் இறுதி நிதி நிலை அறிக்கை. அதனை முன்வைத்து ஒரு நீண்ட உரையை ஆற்றினார். அந்த உரை பெரும்பாலும் வடக்கு மாகாண சபை ஆற்றத்தவறிய விடயங்களுக்கானதன்னிலைவிளக்கமாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தி எதிலும் சபை அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதாகவே இருந்தது.

கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாண சபை என்ன சாதித்ததுஎன்றமிகப்பெரியகேள்விகடந்தஓரிருவருடங்களாகவே பரவலாகஎழுப்பப்பட்டுவருகின்றது.அதிலும்பொருளாதார அபிவிருத்திக்கு இந்த ஆட்சிஎன்னசெய்தது என்கிறகேள்வி பூதாகரமானது. அதற்கும் மேலே பொருளாதார அபிவிருத்தியைமேற்கொள்ளாததுமட்டுமல்லஅதற்குத்தடையாகவும் மாகாணசபை இருக்கின்றது என்கிறகடுமையானவிமர்சனமும் உண்டு.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் எதிரிகள் மட்டும் இந்த விமர்சனத்தை முன்வைக்கவில்லை, அவரை நேர்மையானஅரசியல்வாதிகள்என்று வரவேற்கும்அவரது ஆதரவாளர்களேகூட முதலமைச்சரும் அவரது சபையும் தீர்மானங்களை மட்டுமே சகட்டு மேனிக்கு நிறைவேற்றித் தள்ளக்கூடிய ஒரு வினைத்திறனற்ற ஆட்சி என்பதை ஒத்துக் கொள்கிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தின் பொருளாதார விருத்திக்காக வடக்கு மாகாண சபை எதனையும் செய்யவில்லை என்று அவர்களுமேகூட குத்திக் காட்டுகிறார்கள்.

இந்தவிமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள்,விசனங்களுக்குஎல்லாம்தன்னிலைவிளக்கம் சொல்லும்கடைசிவாய்ப்பாகவே முதலமைச்சர் இந்த நிதி நிலை அறிக்கை உரையைப் பயன்படுத்திக்கொண்டுள்ளார் போலத் தெரிகிறது.

எப்படியிருந்தாலும்வடக்கில்பொருளாதாரஅபிவிருத்திக்குத் தனதுசபைஎதனையும்செய்யவில்லைஎன்பதைஅவர்மறைமுகமாக ஒத்துக்கொண்டுள்ளார். அதனால்தான் அப்படிச் செய்யமுடியாமல் போனமைக்கான காரணங்களைத் தனது உரையில் அடுக்கியுள்ளார். ஆனால் அவற்றில் புதிதாக ஏதுமில்லை.

தங்களுடைய செயல் திறனின்மைகள் எல்லாவற்றுக்கும் கொழும்புஅரசின்மீதேஅவர்முழுமையானகுற்றச்சாட்டை சுமத்துகின்றார். கொழும்பு அரசு வடக்கு மாகாண அரசை கவனத்தில்எடுக்காமல்அதிகாரமமதையுடன்தூக்கிஎறிந்து நடக்கிறது, தனது நலன்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களையேசெயற்படுத்தப்பார்க்கின்றது, அதனால்தான்அத்தகையதிட்டங்கள்மீதுநாம்அவதானமாகஇருந்தோம், ஒத்துழைக்கவில்லைஎன்பதாகஅவரது விளக்கம் இருக்கின்றது.


ஒரு பக்கத்தில் முதலமைச்சர் சொல்லும் காரணம் சரியானதும்கூடத்தான். இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. ஆனால், அந்தக் காரணத்துக்குள் ஒளிந்துகொண்டு தனதும் தனதுஆட்சியினதும்தவறுகளைஎல்லாம்சரிசெய்துவிடலாம் என்று முதலமைச்சர் கருதுவது தவறு. அது ஏற்புடையதும் அல்ல.

மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து முடிப்பதற்கு வழியைத் தேடிச் செயற்படுத்துவதுதான் தலைமையின் அழகேதவிர செய்ய முடியாமல் போனவற்றுக்குக்காரணங்களைத் தேடிக்கொண்டிருப்பது தலைமையின் செயற்பாடல்ல. அதற்கு அதிகாரிகளே போதும்.

4 வருடங்களின் முன்னர் முதலமைச்சரிடம் மக்கள் ஒப்படைத்தபணிஏன்முடியாமல்போனதுஎன்பதற்கானகாரணங்களை ஆய்ந்தறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதல்ல, போரால் நலிந்து சிதைந்து போய்க் கிடந்த தமிழ் மக்களைத் தூக்கி நிறுத்தி அவர்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதே.அந்தப்பணியில்முதலமைச்சர்தோற்றிருக்கிறார்என்பதைத்தான் அவரது இந்த உரை வெளிப்படுத்தி நிற்கின்றது. அடுத்துவரும்ஓராண்டில்அவர்அறிவித்திருக்கும்திட்டங்கள் மூலம் அது சரிப்படுத்திவிடக் கூடியதொன்றல்ல.

# வடக்கு மாகாண சபையின் ஐந்தாவதும் இறுதியுமான வரவு- செலவு திட்டத்தின் சாராம்சம்

(வடக்குமாகாணசபையின்2018ஆம்ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்டத்தை முன்வைத்துநேற்றுமுன்தினம்12ஆம்திகதிவடக்குமாகாணசபையின்112ஆவது அமர்வின்போது முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய அறிமுக உரையின்சாராம்சத்தின்முதற்பகுதிநேற்றையஉதயனில்பிரசுரமாகியிருந்தது. இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது)



வடமாகாணத்திற்கு தேவைப்படும் ஆளணிகள் தொடர்பாக சேவைப்பிரமாணக்குறிப்புக்களைத் தயாரித்து மாகாண சபைக்குட்பட்ட வெற்றிடங்களை முறையே நிரப்புவது இன்றியமையாததாகும். அந்த வகையில் அடையாளப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் பல்வேறு பதவிநிலைகளிலும் நிரப்பப்பட்டுள்ளன. இதே வேளை மத்திய அரசின் கீழ்வரும் வெற்றிடங்களைநிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே 2018ஆம் ஆண்டு மத்திய மாகாண அரசுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதுஇன்றியமையாததாகும்.

**விவசாயத்துறை**

2018ஆம் ஆண்டு தேசிய உணவு உற்பத்தி வருடமாக அறிவிக்கப்பட்டமைக்குஅமைவாகப்பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் உள்வாங்கி உற்பத்தி அதிகரிப்பினூடாக விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கூடுதலான பங்களிப்பை வடமாகாணத்தின் விவசாயத்துறை செலுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

**கால்நடை அபிவிருத்தித் துறை**

வடக்கு மாகாணத்தில் கால்நடைஅபிவிருத்தியைபொறுத்தளவில் 2017 ஆம் ஆண்டு மிகவும் அதிக வளர்ச்சியை அடைந்துள்ளமைஅவதானிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான வடக்குமாகாண இலக்குகளாக நாளொன்றுக்கு பால் உற்பத்தியை ஒருலட்சத்து 30 ஆயிரம் லீற்றர்களாகவும், முட்டை உற்பத்தியை ஒருலட்சம்முட்டைகளாகவும்,இறைச்சி உற்பத்தியை 35 ஆயிரம் கி.கி ஆகவும் உயர்த்தும் முகமாக பல்வேறுஅபிவிருத்திநடவடிக்கைகள்திட்டமிடப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு கால்நடை உற்பத்திகள் மூலமான பண்ணையாளர்களின்வருவாயை மேலும்15 சதவிகிதம்அதிகரிப்பதற்கு ஏதுவாக கால்நடை உற்பத்திகளை இறக்குமதி செய்வதை இயன்றளவுக்கு குறைத்துக்கொள்ளும் வகையிலும், அதிகளவில் வர்த்தக ரீதியிலான கால்நடைப் பண்ணைகளை உருவாக்கும் வகையிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகின்றது.

**நீர்ப்பாசனத் துறை**

விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தரமற்றும்சிறியநீர்ப்பாசனத்திட்டங்களின்அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை இவ்விடத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது. வடமாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 45 நடுத்தர நீர்ப்பாசன குளங்களும், 09 பெரிய நீர்ப்பாசனக் குளங்களுமாக 70 ஆயிரத்து81ஏக்கர்கள்கொண்ட 54நீர்ப்பாசனகுளங்களும்20 ஆயிரம் ஏக்கர் கொண்ட உப்பாறு, ஆனையிறவு, மற்றும் வடமராட்சி ஆகிய 3 நன்னீர் ஏரித் திட்டங்களும் 34 உவர் நீர்த்தடுப்பு அணைகளும் (மொத்தமாக7ஆயிரத்து220 ஏக்கீர்கள் கொண்டவை) மற்றும் 2 ஆயிரம் ஏக்கர்கள் கொண்ட வழுக்கையாறுத் திட்டமுமாக அனைத்துத் திட்டங்களும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றன. வடமாகாணத்தில்பெரியநீர்ப்பாசனத் திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திட்டம், வடமராட்சி நீரேரரியை நன்னீர் ஏரியாக மாற்றும் திட்டம், தொண்டைமானாறுதடுப்பணைபோன்றவையும் விவசாய மற்றும் கால்நடைத்துறைகளைமேம்படுத்துவதற்கான சிறப்பான திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**கல்வித் துறை**

வடமாகாணத்தின் கல்வித் துறையை நோக்கும்போது பல்வேறு நிதிமூலங்களுடாக உட்கட்டுமானவசதிகள்,நவீன தொழிநுட்ப வசதிகளை உட்புகுத்தல், தளபாடங்கள் மற்றும் கற்றல்உபகரணங்கள்வழங்கல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கல்வித் துறைசார் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், குறிப்பிடத்தக்க அளவில் ஆசிரியர் பற்றாக்குறையும்வருடாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. எனினும்வடமாகாணத்தின்கல்வி நிலையை ஏனைய மாகாணங்களுடன்ஒப்பிடும்போது அதிககவனம்செலுத்தவேண்டிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது.

**சுகாதாரத் துறை**

சுகாதாரத்துறையும்வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. 2017ஆம் ஆண்டுவரவுசெலவுத்திட்டத்தினூடாக மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கானவசதிகள்ஏற்படுத்தப்பட்டு இந்தமாகாணத்தின்சுகாதாரக்

குறிகாட்டிகள்முன்னேற்றம்அடைந்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தின்சுகாதாரத்துறைமேம்பாட்டைத் தொடர்ச்சியாகப்பேணும்வகையில் செயற்றிட்டங்கள்நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. எனினும் டெங்கு நோய்த்தடுப்புமிகமுக்கியமானஒரு விடயமாகப் பரிணமித்துள்ளது. அதன் பரவலைக் கட்டுப்படுத்த சகலரும் சேர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

**வீதி அபிவிருத்தித் துறை**

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்களுக்கூடாக வட மாகாணத்தின் வீதி அபிவிருத்திச்செயற்பாடுகளும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் வடமாகாணத்தில் காணப்படும் C மற்றும் D தரத்திலான ஆயிரத்து 500 கிலோ மீற்றர் வரையான வீதிகள் புனரமைக்க வேண்டியிருப்பதுடன், 8ஆயிரத்து கிலோ மீற்றர் வரையான கிராமிய வீதிகளும் புனரமைக்கப்படவேண்டியுள்ளன. 2018ஆம்ஆண்டுவீதிஅபிவிருத்திப் பணிகள், கிராமியப் பாலங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கான முதலீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

**சுற்றுலாத்துறை, வீடமைப்புத் துறை**

சுற்றுலாத்துறை, வீடமைப்புபோன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள்காணப்படினும், எமக்குஒதுக்கப்படுகின்ற நிதிமூலம் சிறிய அளவிலதான தேவைப்பாட்டினையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றுக்காக இனங்காட்டப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

எனினும்எமதுஅமைச்சுக்கள்அண்மையில்தேசியரீதியாகப்பெற்றசில விருதுகள் பற்றி சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

**நிதி முகாமைத்துவத்தின் செயலாற்றுகை மதிப்பீடு**

எமது வடமாகாண சபையின் கீழ் செயற்படுகின்றஇரண்டுஅமைச்சுக்கள், மற்றும்05திணைக்களங்கள், மற்றும் 05 உள்ளூராட்சி சபைகள் அண்மையில்நாடாளுமன்றபொது கணக்குகள் குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய மயப்படுத்தப்பட்ட கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயர் நிதி முகாமைத்துவத்தில் அதிஉயர் செயற்திறனை வெளிப்படுத்தியமைக்காக அரசதலைவரால் தங்கவிருதுகளும்பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கி மதிப்புறுத்தப்பட்டன.

நாடளாவிய ரீதியில் 831நிறுவனங்களது 2015ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் அதியுயர் செயலாற்றுகையைவெளிப்படுத்திய81நிறுவனங்களுள்எமதுவடமாகாணசபையின் கீழ்தங்க விருதுகளைப்பெற்ற அமைச்சுக்கள் திணைக்களங்கள் விவரம் முறையே பின்வருமாறு.

1. முதலமைச்சரின் அமைச்சு
2. சுகாதார அமைச்சு
3. பிரதிப்பிரதமசெயலாளர் அலுவலகம் (நிதி)
4. சுகாதார சேவைகள் நிறுவனம்
5. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
6. நீர்ப்பாசனத் திணைக்களம்
7. வீதிஅபிவிருத்தித்திணைக்களம்

**பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பிரதேச சபைகள்**

1. நல்லூர்ப் பிரதேச சபை,
2. பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை
3. கரைதுறைப்பற்று பிரதேசசபை
4. மன்னார் பிரதேசசபை
5. வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள்,திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் புணிபுரிந்த அலுவலர்களின் அர்ப்பணிப்புள்ளசேவைகாரணமாகவே இது சாத்தியமானது.

2018 ஆம் நிதியாண்டுக்கான எமது மாகாணசபை செலவினங்களுக்காக நிதி ஆணைக்குழுவால் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சிபார்சு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைஉள்ளடங்கலாக2018ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் ஒதுக்கீட்டு தொகைகள் பின்வருமாறு:

**01.மீண்டுவரும் செலவினங்கள் (ரூபா.22ஆயிரத்து 910.93மில்லியன்கள்)**

அ) மீண்டுவரும்செலவினங்களுக்கான தொகை ரூபா. இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று எழுபது தசம் ஒன்பது மூன்று மில்லியன்கள்(ரூபா.22,770.93மில்லியன்கள்) ஆகும். இதில்மத்திய அரசால்

- தொகுதிக் கொடையாக ரூபா பதினெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது தசம் ஒன்பது மூன்று மில்லியன்களும் (ரூபா.18,650.93 மில்லியனும்)
- மத்தியஅரசுவருமானமாகரூபா இரண்டாயிரத்துஎழுநூற்றுஐம்பது மில்லியன்களும் (ரூபா. 2,750 மில்லியன்களும்)
- மாகாணசபை வருமானமாக ரூபா எழுநூற்று ஐம்பது மில்லியனும்(ரூபா.750மில்லியன்கள்) கிடைக்குமெனஎதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கான

- முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா நாநூற்று எண்பது மில்லியன் (ரூபா.480மில்லியன்கள்)
- நீதிமன்ற தண்டப்பணம் ரூபா நூற்று நாற்பது மில்லியன்கள் (ரூபா.140 மில்லியன்கள்)

ஆ) உள்ளூராட்சி மன்றங்களுக்கான முத்திரைத்தீர்வைக் கட்டணமீளளிப்பு(ரூபா.140மில்லியன்கள்)

மேலும் 2017 ஆம் ஆண்டு வரை உள்ளூராட்சி மன்றங்களின் பொருட்டுசேகரிக்கப்பட்டமுத்திரைத் தீர்வைக் கட்டணத்தினை உரிய உள்ளூராட்சிமன்றங்களுக்கு2018 ஆம்ஆண்டில்மாற்றல்செய்வதற்கு நிதிஆணைக்குழுவின்சிபார்சுரூபா 480மில்லியன்களும்மேலதிகமாக ரூபா140 மில்லியன்கள் 2018 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**02. மூலதனச் செலவினங்கள் (ரூபா.3,843.12மில்லியன்கள்)**

அ. மூலதனச் செலவினங்களுக்கான தொகை ரூபா மூவாயிரத்து எண்நூற்று இருபத்து மூன்று தசம் ஒன்றுஇரண்டுமில்லியன்கள்ஆகும். (ரூபா.3,823.12மில்லியன்கள்)இதில்

- பிரமாண்அடைப்படையிலான கொடை ரூபா ஐநூற்று ஐம்பத்தொன்று தசம் இரண்டு மில்லியன்கள் (ரூபா. 551.2 மில்லியன்கள்)
- மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை ரூபா இரண்டாயிரத்து எண்நூற்று இருபத்தொன்பது தசம் எட்டுஏழுமில்லியன்கள்(ரூபா. 2ஆயிரத்து 829.87 மில்லியன்கள்)
- பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாகமாற்றும்செயற்றிட்டம்(TSEP) ரூபா ஐம்பத்து ஐந்து மில்லியன்கள்(ரூபா.55மில்லியன்கள்)
- சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் ரூபா முந்நூற்று இருபத்துநான்குதசம்எட்டுமில்லியன்கள்(ரூபா.324.80மில்லியன்கள்)

ஆ. வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்கானஒதுக்கீடுரூபாஅறுபத்திரண்டு தசம் இரண்டு ஐந்து மில்லியன்கள் (ரூபா. 62.25 மில்லியன்கள்) ஆகும். இதில்

- வடக்கு வீதி இணைப்புத்திட்டம் (மேலதிகநிதியிடல்)ரூபாபதினேழு தசம்இரண்டுஐந்துமில்லியன்கள்(ரூபா.17.25மில்லியன்கள்)
- பொதுக் கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம் ரூபா நாற்பத்தைந்துமில்லியன்கள் (ரூபா. 45 மில்லியன்கள்)

இ. காற்றாலைத் திட்டத்தின் படிவிவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்கூட்டிணைந்த சமூகப்பொறுப்புக்கொடைரூபா.20 மில்லியன்கள்(ரூபா.20மில்லியன்கள்), 2018 ஆம் ஆண்டு செயற்திட்டங்களைநிறைவேற்றுவதற்காகநிதிக்கூற்று2018ஆம் ஆண்டில்உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், கிடைக்கப்பெற்ற மேற்படி ஒதுக்கீட்டுத்தொகைகளுக்குஅமைவாக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ரீதியாக அவற்றின் முன்னுரிமைத் தேவைகளைப் பொறுத்து வருடாந்த நிதிக்கூற்று வரைவு தயாரிக்கப்பட்டு இந்தச் சபை முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள் காணப்படினும், எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மூலம் சிறிய அளவிலதான தேவைப்பாட்டினையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றுக்காக இனங்காட்டப் பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

2018 ஆம் ஆண்டுக்கான வடக்குமாகாண இலக்குகளாக நாளொன்றுக்கு பால் உற்பத்தி 1லட்சத்து 30 ஆயிரம் லீற்றர்களாகவும், முட்டை உற்பத்தியை 1லட்சம் முட்டைகளாகவும் இறைச்சி உற்பத்தியை 35 ஆயிரம் கி.கி ஆகவும் உயர்த்தும் முகமாக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.




## மேம்படுத்தல் அவசியம்

இற்றைக்கு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில், யாழ்.மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் ஆயுள்வேத வைத்தியசாலை இயங்கி வந்தது. இந்தக் கட்டடத்திலேயே தற்போது மின்சார சபையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது.

தற்போது ஆயுள்வேத வைத்தியசாலை யாழ்.நகரின் மையப் பகுதியில் இல்லாததால் அதன் முக்கியத்துவத்தை மக்கள் அறியப் பின்னிற்கின்றனர்.

வெறுமனே ஆங்கில மருத்துவத்தால் சகல நோய்களையும் குணப்படுத்த முடியாது. அடுத்து தற்போது கட்டுப்படுத்த முடியாது உள்ள சிறுநீரகச் செயலிழப்புக்கு கட்டுப்பாடற்ற ஆங்கில மருந்துகளின் பாவனையும் ஒரு காரணம். அதாவது சில மாத்திரைகளின் பாவனை கட்டுப்பாடற்ற விதத்தில் உள்ளது. இவை நோவுக்கும் காய்ச்சலுக்கும் மருந்தாகக் கொடுக்கப்படுகின்றன.

காய்ச்சலுக்கு போதிய நீராகாரம் உள்ள குடிதண்ணீரைப் பருகுவதாலும் நோவுக்கு நோவைக் குறைக்கும் ஆயுள்வேத எண்ணெய்களை உபயோகிப்பதாலும், சிறுநீரக செயலிழப்புக்கு ஏதுவான வலுவான நோ மருந்துகளைத் தவிக்கலாம்.


இலங்கையின் சுகாதார சேவையில் சுதேச மருத்துவும்ம் மேலைத்தேய மருத்துவமும் மருத்துவ சேவை என்ற ஓரலகின் கீழேயே உள்ளன. ஆனால் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதில் இவ்விரு துறைகளும் வெவ்வேறாக உள்ளன. எனவே நோயாளிகளை மையப்படுத்திய இணைந்த சேவை பற்றிய புதிய நோக்கு எமக்குத் தேவை.

மேலும் நீரிழிவு, குருதியமுக்கம் எக்சிமா போன்ற நோய்களுக்கும் ஆயுள்வேதத்துடன் இணைந்து மருத்துவமே சிறந்தது.

மருத்துவர் சி.யமுனாநந்தா.

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

## ஒக்ரோபர் மாத உற்பத்தியில் 3.7 வீதமாகப் பதிவு




2016 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஒக்ரோபர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 3.7 வீதத்தால் அதிகரித்துள்ளது என்ற தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஒக்ரோபர் மாத உற்பத்திகளில் 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருள்கள்' 26.2 வீதமாகவும், 'இயந்திர உபகரணங்கள்' 14.2 வீதமாகவும் மற்றும் 'அடிப்படை உலோக உற்பத்தி பொருள்கள்' 8.7 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஒக்ரோபர் மாத உணவு உற்பத்தியானது 4.5 வீத அதிகரிப்பை காட்டுகிறது.

2016 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, கைத்தொழில் உற்பத்தியில் 'பானவகைகள் உற்பத்தி', 'வீட்டுத் தளபாடங்கள்' மற்றும் 'வேறு உற்பத்திகள்' ஆகியன முறையே 15.1 வீதம், 12.2 வீதம் மற்றும் 5.5 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

உற்பத்திக் கைத்தொழில்களில் 2016 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டு உற்பத்தி 1.4 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது நடப்பாண்டின் ஒக்ரோபர் மற்றும் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத காலப் பகுதியில் முறையே 108.6 மற்றும் 104.7 ஆக பதிவாகியுள்ளது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன், அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

COMMERCIAL BANK

# சிறந்த வருடாந்த அறிக்கைக்கான விருதை கொமர்ஷல் வங்கி பெற்றுக்கொண்டது

"நிதிச் செயற்பாடுகளில் கொமர்ஷல் வங்கி தனது சிறப்பு மேலாதிக்க முத்திரையைப் பதித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இலங்கை கம்பனி ஒன்றுக்கான ஒட்டுமொத்த சிறந்த வருடாந்த அறிக்கையிடல் விருதினை இவ்வாரம் இடம்பெற்ற 'சி.ஏ' ஸ்ரீலங்கா வருடாந்த அறிக்கை விருதுவழங்கல் நிகழ்வின் போது கொமர்ஷல் வங்கி பெற்றுக்கொண்டுள்ளது.

தவிர, 2016 வருடாந்த அறிக்கையில் வங்கித் துறைக்கான தங்க விருது உட்பட மேலும் மூன்று விருதுகளையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்த மதிப்புறுத்தல் தொடர்பில் கருத்துரைத்த வங்கியின் தலைவர் தர்மாதீரசிங்க,

"வருடாந்த அறிக்கை என்பது எந்த ஒருநிலையிலும் வங்கி அதன் பங்குதாரர்களோடு தொடர்பாடலைப் பேணுவதற்கான தனித்துவமான,மிக முக்கியமான ஒரு ஆவணமாக விளங்குகிறது. வங்கியைப் பொறுத்தமட்டில் பங்குதாரர்கள், வைப்பாளர்கள், கடன்பெறுபவர்கள், ஊழியர்கள் ஏனைய நிதிநிறுவனங்கள், ஒழுங்கமைப்பவர்கள், அரச முகவராண்மைகள் மற்றும் விநியோகஸ்தர்கள் என சம்பந்தப்பட்ட விரிவான பலதரப்பினர் உள்ளனர். இவர்கள் அனைவரிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான பாரிய விரிவான ஒருபிரிவினரோடு நாம் தொடர்பாடல்களை மேற்கொள்கின்ற போது கணக்கியல் தரங்கள் முறையாகப் பேணப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ள அதிக முயற்சிகளை எடுத்துக் கொள்கிறோம். அதேபோல் வெளிப்படைத் தன்மை,சிறந்த நிர்வாகம், நிலையான வர்த்தகச் செயற்பாடுகள், சம்பந்தப்பட்ட வெளிப்பாடுகள், உரியகாலத்தில் அறிக்கையிடல் போன்றவற்றை உறுதிசெய்வதிலும் அதிக அக்கறையோடு பணியாற்றுகிறோம்.இலங்கையில் சிறந்த வருடாந்த அறிக்கைக்கான ஒட்டுமொத்த விருதை கொமர்ஷல் வங்கிவென்றுள்ளமை இது ஒன்பதாவது தடவையாகும். இலங்கையின் கணக்கியல்ப் பிரிவில் தனிச்சிறப்புமிக்க அமைப்பால் ஏற்பாடு செய்யப்படும் இந்த கீர்த்திமிக்க விழாவில் வங்கிப் பிரிவில் கொமர்ஷல் வங்கி தங்கவிருதை வென்றுள்ளமை 13 ஆவது தடவையாகும்.

உள்ளூரிலும் உலகளாவிய மட்டத்திலும் வங்கியின் வருடாந்த அறிக்கை ஒரு அடையாளச் சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து அதன் தரத்தை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வங்கியோடு தற்போது சம்பந்தப்பட்டுள்ளவர்கள் வெறுமனே கடந்த காலத்தில் மட்டும் அக்கறை கொண்டவர்களாக இல்லை. எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் தகவல்கள் தேவை உடையவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர். வங்கி இந்த விடயத்தை நன்கு கவனத்தில் எடுத்துள்ளது. நவீன நடைமுறைகள், தேவைகள் மற்றும் எதிர்காலத் தகவல்கள் என்பனவும் இவர்களுக்குத் தேவைப்படுகின்றன. " - என்றார். (ஓ)

# மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடமாகாணம் 4.2 வீத பங்களிப்பு

## வட மாகாண முதலமைச்சர் கருத்து




2016 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வட மாகாணம் 4.2 வீத பங்களிப்பை வழங்கியுள்ளது என்ற கருத்தை வட மாகாண முதலமைச்சர்சி.வி. விக்னேஷ்வரன் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட அறிமுக உரையின் போதே அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கும் போது,

"வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள மத்திய அரசு மேலும் கரிசனை செலுத்த வேண்டும். நாட்டில் வேலையற்றோர் தொகை 4.4 வீதமாகக் காணப்படும் போது, வட மாகாணத்தில் வேலையற்றோர் தொகை 6.3 வீதமாக அமைந்துள்ளது. நாட்டில் தலைக்குரிய வறுமைச்சுட்டி 4.1 வீதமாகக் காணப்படுகின்ற போது, வட மாகாணத்தில் தலைக்குரிய வறுமைச்சுட்டி 7.7 வீதமாகக் காணப்படுகிறது." - என்றார். (ஓ)




# இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது

## உலக வர்த்தக அமைப்பு கணிப்பு

164 நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி குறித்து உலக வர்த்தக அமைப்பு மேற்கொண்ட கணிப்பின் அடிப்படையிலே இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது என்ற தகவலை அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் பணக் கொடுக்கல் வாங்கல் செயன்முறைகள் திருப்திகரமாக அமைந்துள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2016 ஆம் ஆண்டில் தெளிவான வளர்ச்சி நிலை தென்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

13/12/2017 | www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -7.59 | 6,352.77 | 6,360.36 |
| S&P SL20 | -22.19 | 3,687.80 | 3,709.99 |
| வியாபாரப்புரள்வு | | 682,809,220 | 999,838,080 |
| உள்நாடு:- கொள்வனவு | | 282,333,312 | 400,031,840 |
| விற்பனை | | 218,464,416 | 564,490,940 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 400,475,904 | 599,806,270 |
| விற்பனை | | 464,344,800 | 435,347,136 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 148.5 | 1,041,338 | 155,128,052.40 |
| டோக்கியோ | TKYO.X | 55 | 1,445,775 | 79,517,675.00 |
| றிச்சட் பிறீஸ் | RICH.N | 13.5 | 3,955,118 | 53,394,093.20 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 23.9 | 1,972,771 | 47,135,263.70 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 36 | 1,302,659 | 46,896,149.00 |
| டோக்கியோ | TKYO.N | 63.1 | 653,320 | 40,557,211.10 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 112.5 | 285,267 | 32,109,374.20 |
| ஏசியன் ஹோட்டல் புறப்பட்டி | AHPL.N | 51 | 508,359 | 25,926,805.00 |
| ஆர் ஐ எஸ் புறப்பட்டி | RIL.N | 7.1 | 3,003,525 | 21,325,027.50 |
| ஹாகில் சிலோன் | CARG.N | 200 | 105,000 | 21,000,000.00 |




அறிவித்தல்கள் - பங்குலாபம்

ஹற்றன் நஷனல் வங்கி ரூபா. 1.50 HNB
அக்சஸ் எஞ்யினியறிங் ரூபா. 0.50 AEL
பீப்புள் லீசிங் & பைனான்ஸ் ரூபா. 0.75 PLC

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 216 |
| விலை உழைப்பு | 10.08 |
| புத்தகப்பெறுமதி | 1.3 |
| பங்குலாப விளைவு | 3.2 |



# பொறுமை எனும் செயலாயுதம்

## வாழ்வில் வெற்றியின் சித்தி தரும் வித்தை

அன்ரனி பீற்றர்

மனித வாழ்வியல் பயணத்தில் விழுமியங்கள் முதன்மை இடம் பெறுகின்றன. இனம் சார்ந்து அவர்களுக்குரித்தான தனித்துவ மொழி, பண்பாடு, கலை கலாசாரம் என்ற விதமாக அவை சிறப்பிக்கப்படுகின்றன. இவற்றோடு மனிதர்கள் கொண்டுள்ள தனித்துவ இயல்பாளுமைகளும் முக்கியக் கூறுகளாக மேன்மையுறுகின்றன.

**பொறுமை எனும் பெருமை**

அந்தவகையில் பொறுமை என்பது எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய அல்லது எல்லோரிடமும் இருக்க வேண்டிய பண்பியல்பாக விளங்குகிறது. கால ஓட்டத்தில் அருகிவரும் அருமைத் தன்மையுடைய செயலுறுதியாகவும் இது கணிப்பிடப்படுகிறது. "பொறுத்தார் அரசாள்வார், பொங்கினார் கடாழ்வர்" என்ற சான்றோர் மொழி பொறுமையின் சிறப்பை எடுத்தியம்புகின்றமை இங்கு நோக்குதற்குரியது.

அதேபோன்று வள்ளுவப் பெருந்தகை பொறுமையின் மேன்மையை 'பொறையுடைமை' என்ற அதிகாரத்தில் தன் பாக்களுள் ஒன்றுகூட்டி இவ்வாறு எடுத்துரைக்கின்றார்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்"

அதாவது, "பிறரின் குற்றங்களைத் தண்டித்தவர்களுக்கு ஒருநாள்தான் இன்பம். ஆனால் பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரை புகழ் நீடித்திருக்கும்" என்கிறார் வள்ளுவர். இவ்வாறு பொறுமை பற்றிய கருத்தூட்டங்களை நிறைவாக கதைகள் மூலம் நாம் கேட்டறிந்திருக்கிறோம்.

**நவீனத்தில் இருந்து மீள்வோம்**

அவசரமும் விரைவுச் செயற்பாடுகளும் துரத்திக் கொண்டிருக்கும் இயந்திரத்தனமான கடுகதி வாழ்விலே, நின்று நிதானித்துச் சரியான முடிவுகளை எடுத்திருக்க வேண்டும். ஆனாலும் மனித வாழ்வியல் முறைகள் உலக மயமாதலுக்கு அடிமைப்பட்டுள்ளன. எடுக்கப்படுகின்ற அலோசனையற்ற அவசர முடிவுகள் துர்ப்பாக்கிய நிலை களாகவே பரிணாமம் கொண்டுள்ளன. குடும்பங்க ளின் உருவாக்கத்தில் இருந்து இறுதிப் பயணம் வரையான வாழ்வியல் கோலங்கள் அனைத்திலும் சிந்தனை பூர்வமாக எடுக்கப்படாத பொறுமையற்ற அவசர முடிவுகளையே காணக்கூடியதாக இருக்கிறது.


> பொறுமை என்ற அணை எம்மிடையே உறுதியாகக் கட்டமைக்கப்பட வேண்டும். இளையோர் என்ற துடிப்புடைய காட்டாற்று வெள்ளங்கள் தீமையுள் சிக்குண்டு கரைபுரண்டு சமூக அழிவைத் தராதிருக்க வேண்டும். அதில் இருந்து மீண்டு நற்சிந்தனை கொண்டு பயனுடைய வாழ்வைக் கண்டுகொள்ளத் தலைப்பட வேண்டும். 'பொறுமை' என்ற வித்தை பண்படுத்தி பயிரிட்டுப் பக்குவமாகப் பராமரித்தால் மனிதாபிமானம் என்ற விளைச்சல் கிட்டும். அதனூடு அன்பு, அமைதி, புரிந்துணர்வு, நல்லுறவு, நற்சமுதாயம் என்ற செல்வங்கள் கிடைக்கப்பெறும்.

**முன்னோரிடம் இருந்த அனுபவத்தைக் கற்போம்**

எமது முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வியலை பின்பற்றி யிருந்தனர். இறைவனை இயற்கை வடிவங்களில் கண்டுகொண்டனர். கால நேரங்களையும், செயல்களையும் அவதானித்துச் சிந்தித்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்த னர். அதன் காரணம் கொண்டே அவர்களின் வாழ்வில் அதீத பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கவில்லை. தேவைகள் குறைவாக இருந்தமையால் செயற்பாடுகளைச் சிந்தித்து மேற்கொள்ள முடிந்தது. அங்கலாய்ப்புகளைத் தவிர்த்துச் சரியான முடிவுகளை எடுக்க முடிந்துள்ளது. இதனாலேயே எமது முன்னோர்களின் வாழ்வில் மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம், சேமிப்பு, நல்லுறவு, சமூகப் பற்று, அபிவிருத்தி, களஞ்சியங்கள், ஏற்றுமதிகள், தொழில்வாய்ப்புகள் என இன்னோரன்ன செயற்காரியங்களில் தன்னிறைவு கண்டு வாழ்ந்தார்கள். இவை அனைத்துக்குமான அடிநாதமாக விளங்குவது, அவர்கள் கடைப்பிடித்த பொறுமை எனும் பெரும்பண்பாகும்.

**திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்ளல்**

எல்லோரைப் போலவும் நானும் வாழ வேண்டுமென்ற தகுதியை நோக்காத வேணவா, திட்டமில்லாத அவசரச் செயற்பாடுகள், மற்றவர்களின் அனுபவங்களை ஆலோசனைகளைக் கண்டுகொள்ளாத நிலைகள், பரம்பரைத் தொழில்களை மறந்து போன தன்மை, போலிக் கௌரவ வாழ்வு நிலைகள், வரவுக்கு மிஞ்சிய செலவுகளை ஈடு செய்ய முடியாமை, ஈடுபாடின்றிச் செய்யும் தொழில் முயற்சிகள், பிள்ளை வளர்ப்பு, கல்வி, தொழில்வாய்ப்பு, வருமான மீட்டல், சுயமுயற்சிகளின்றி நுகர்வுக் கலாசார வாழ்க்கை முறை, இவற்றினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமை என அனைத்துச் செயல் நடவடிக்கைகளும் மக்கள் கொண்டிராத பொறுமையின் வெளிப்படு தன்மைகளே. இது குறித்து ஆழ்ந்து சிந்திக்காமையே பொருளாதார நெருக்கடிகள் ஏற்படக் காரணமாக அமைந்துவிடுகின்றன. தவிர உளவியல் சார் பிரச்சினைகளையும், நோயையும், மகிழ்ச்சியின்மையையும், அமைதியற்ற சூழ்நிலைகளையும் மற்றும் வன்முறைச் செயற்பாடுகளையும் எம்மிடையே வரையறையின்றி அனுமதித்துள்ளன. இதற்கு நாம் ஒவ்வெருவருமே காரணமாக இருக்கிறோம். இது குறித்து நாம் கரிசனை கொள்வதுடன் திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு உண்டு என்பதை நாம் கருத்திலெடுக்க வேண்டும்.



**புரிந்துணர்வின்மை தரும் பாதிப்புகள்**

குடும்ப உறவுகளுக்கிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் புரிந்து கொள்ளாமை, மனக்கசப்பு, தகுதியற்ற வார்த்தைப் பிரயோகங்கள், சண்டை சச்சரவுகள் மற்றும் உறவுகளிடையேயான பிரிவினைகளை ஏற்படுத்தி விடுகின்றன. நீண்ட காலம் காதலித்துத் திருமண வாழ்வில் இணைந்துகொண்டவர்கள், ஒருசில வருடங்களில் கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் புரிந்துகொள்ளல் இன்றி இடைவிலகலோடு சண்டையிட்டுப் பிரிந்து கொள்கின்றனர். விவாகரத்துப் பெற்றுக் குடும்ப உறவுகளிடையே சுமூகமான நிலையின்றி தனித்துவிடப்படுகின்றனர். செய்வதறியாது அந்தரிக்கின்றனர்.

இதேபோன்று தோல்விகளைத் தாங்கிக் கொள்ள முடியாத் தன்மையாலும், ஆலோசனைகளுக்கு கீழ்படிந்து நடக்காமையாலும் மாணவர்கள் மற்றும் இளையோர் அதிகளவில் பாதிப்புறுகின்றனர். பொறுமையோடு அமைதியுற தங்கள் வாழ்வியல் படிநிலைகள் குறித்து சிந்திக்காமல், தவறான முடிவுகளை எடுத்து உயிர்களையே மாய்த்துக் கொள்கின்றனர். தற்காலத்தில் இந்தப் போக்கினை எம் சமூகத்திடையே அதிகளவில் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

சாலைப் பயணங்களை எடுத்து நோக்கினும் அங்கு அதிகளவில் விபத்துச் சம்பவங்கள் ஏற்படவும், உயிரிழப்புக்கள் ஏற்படவும் பொறுமை என்கின்ற பண்பியல்பு எம்மிடையே குவைடைந்து போயுள்ள தன்மையே காரணமாக அமைந்து விடுகிறது.

நீண்ட கால நட்பு, கொடுக்கல் வாங்கல்கள், ஒப்புக்கொண்ட வாக்குறுதிகள் 'ஏமாற்றம்' என்கின்ற படிநிலையில் பயணிக்கின்ற போது அல்லது அதில் உள்ள வரையறைகள் மீறப்படும் போது மனக்கசப்புகள் ஏற்படுகின்றன. உறவு நிலையில் உடைவு ஏற்படுகிறது. சமூக வாழ்விலும், அரசியல் வாழ்விலும் கூட பொறுமை கடைபிடிக்கப்படாத நிலமைகளை அதிகம் அவதானம் கொள்ள முடிகிறது. ஒரு அணியில் இருந்து பிரிந்து செல்லும் நிலைகளும், கட்சிகளின் பலம் பலவீனமாக்கப்படும் கைங்கரியங்களும் இயல்பாகவே இடம்பெறுகின்றன.

**நல்லுறவுகளை அரவணைப்போம்**

ஆக, பொறுமை என்ற அணை எம்மிடையே உற்றுதியாகக் கட்டமைக்கப்பட வேண்டும். இளையோர் என்ற துடிப்புடைய காட்டாற்று வெள்ளங்கள் தீமையுள் சிக்குண்டு கரைபுரண்டு சமூக அழிவைத் தராதிருக்க வேண்டும். அதிலிருந்து மீண்டு நற்சிந்தனை கொண்டு பயனுடைய வாழ்வைக் கண்டுகொள்ளத் தலைப்பட வேண்டும். 'பொறுமை' என்ற வித்தைப் பண்படுத்தி பயிரிட்டுப் பக்குவமாகப் பராமரித்தால் மனிதாபிமானம் என்ற விளைச்சல் கிட்டும். அதனூடு அன்பு, அமைதி, புரிந்துணர்வு, நல்லுறவு, நற்சமுதாயம் என்ற செல்வங்கள் கிடைக்கப்பெறும். வாழ்வில் சீரும் சிறப்பும் கிட்டும். முன்னேற்றமும் விருத்தியும் எம் மண்ணிலே மீண்டும் மலர்ந்திட, நாம் எல்லோரும் பொறுமையோடு சிந்தித்து நல்ல முடிவுகளை எடுத்து வாழ்வைப் பயனுறுதியுடையதாக்கிக் கொள்வோம்.




# அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் உள்ளூராட்சித் தேர்தல்

உள்ளூராட்சித் தேர்தலில் ஆசனப் பங்கீடு தொடர்பாக கூட்டமைப்பினுள் ஏற்பட்ட முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒன்றாக இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் மகிழ்ச்சியானதொரு செய்தி கிடைத்துள்ளது.

கூட்டமைப்பினுள் மீண்டும் ஐக்கியம் ஏற்பட்டுள்ளமை அதன் ஆதரவாளர்களை உற்சாகத்தினுள் ஆழ்த்தியுள்ளது. எவர் எதைக் கூறினாலும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பினரே என்பதை எவருமே மறுதலித்துக் கூற முடியாது. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் இன்று வெவ்வேறு திசைகளில் சிதறிக் காணப்படுகின்றனர். முதிர்ந்த மூத்த அரசியல்வாதியான ஆனந்தசங்கரி தலைமையில் சில கட்சிகள் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடப் போகின்றன. கஜேந்திரகுமார் தலைமையில் சில கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.

பெரும் பரபரப்புடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையால் தனது ஒற்றுமையைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. அதில் அங்கம் வகிப்பவர்கள் வெவ்வேறு அணிகளுடன் சங்கமமாகிய நிலையில் தேர்தலை எதிர்கொள்கின்றனர். தமிழ் மக்கள் பேரவை அரசியலில் ஈடுபடாது என்ற அறிவிப்பு பொய்த்துப் போயுள்ளது. பேரவையின் உண்மையான நோக்கம் என்னவென்பது தெரியவில்லை.

அரசியல்வாதிகள் குழம்பினாலும் தமிழ் வாக்காளர் உறுதியாக உள்ளனர். தெளிவாகவும் இருக்கின்றனர். சந்தர்ப்பவாதிகளை அவர்கள் இனம்கண்டு கொண்டதால் தேர்தலில் சரியான தீர்ப்பை வழங்கக் காத்திருக்கிறார்கள். மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு நேர்மையும் அர்ப்பணிப்பும் முக்கியமானவை. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது இவையிரண்டும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கறை படிந்தவர்களை மக்கள் நிராகரிக்கவே செய்வார்கள்.

இடம்பெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தல் ஒரு கருத்துக் கணிப்பாகவே அமையப் போகின்றது. தமிழர்களின் தலைமை தொடர்பான ஐயங்களுக்கு முற்றுப்புள்ளி இடப்போகின்றது. மாற்றுத் தலைமை தேவையா? இல்லையா? என்ற கேள்விக்கு விடையைத் தரப் போகின்றது. ஆகவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். சந்தர்ப்பவாதிகளை இனம்கண்டு அவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும். முற்றாகப் புறக்கணிக்க வேண்டும். இடம்பெறப் போவது உள்ளூராட்சித் தேர்தலாக இருந்தபோதிலும் முழுநாடும் இதில் அக்கறை கொண்டுள்ளது. இதன் முடிவுகளைக் கொண்டே நாட்டின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படப் போகின்றது.




இதுவரை உங்களது தொழில் ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி இலாப ஸ்தானத்திற்குச் செல்கிறார்.
மூன்றாம் பார்வையால் ராசியையும், ஏழாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:**
தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். அதிகமான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக கல்வியோ, கலையோ பயில வாய்ப்புண்டாகும்.
சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய்யும் தொழிலில் வளர்ச்சி உண்டாகும். பழைய வாகனங்களை விற்றுவிட்டு புதிய வாகனங்களை வாங்குவீர்கள். அதேநேரம் உடல் நலத்தில் கவனமாக இருக்கவும். சரியான நேரத்தில் ஆகாரம் உட்கொண்டு, ஒவ்வாத உணவுகளைத் தவிர்த்தாலே போதும்; நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நண்பர்களிடம் கோபப்படாமல் நடந்துகொண்டு அவர்களின் உறவைத் தக்க வைத்துக் கொள்ளவும்; அது தக்க சமயத்தில் உதவும்.
குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செயற்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது.
சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயற்படுவீர்கள். புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள். சிலர் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள். அதேநேரம் எவரிடமும் உங்கள் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். அனைத்து விஷயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் இலாபம் குவியும். அந்த இலாபத்தை எதிர்காலத்திற்காகச் சேமிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வீர்கள். தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள்.
தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களிலிருந்து பண வரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள். உடல் உபாதைகள் முழுமையாகத் தீர்ந்துவிடும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். ஆன்மிகச் சிந்தனையுடன் வாழ்க்கையை நடத்துவீர்கள்.




**உத்தியோகத்தர்களுக்கு:**
விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்புப் பாராட்டுவார்கள்.
அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.
வியாபாரிகள், போட்டியாளர்களின் தடைக்கற் களைக் கடக்கச் சற்று போராட வேண்டியிருக்கும். கூட்டாளிகளை நம்பாமல் நீங்களே முன்னின்று செயல்பட்டால் வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்கலாம். பண விஷயத்திலும் உஷாராக இருக்கவும். மற்றபடி சுகத்தை மறந்து கடினமாக உழைப்பீர்கள்.
**அரசியல்வாதிகளுக்கு:** கட்சியின் மேலிடத்தில், கணிசமான ஆதரவைப் பெறுவீர்கள். அதேசமயம் தொண்டர்கள் உங்களிடம் சற்றுப் பாராமுகமாகவே நடந்து கொள்வார்கள்.
அதனால் கோபப்படாமல் விவேகத்துடன் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மனங்களை வெல்லவும். மற்றபடி சமுதாயத்திற்குப் பயன்படும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிரிகளின் ரகசியத் திட்டங்களை அம்பலப்படுத்திப் புகழடைவீர்கள்.
**கலைத்துறையினருக்கு:** அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும். பொருளாதார வசதிகளில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.
**பெண்களுக்கு:** குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துச் சேமிப்புகளில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும்.
**மாணவர்களுக்கு:** படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். தெளிவான மனதுடன் படித்து நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். நண்பர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேசமயம் விளையாட்டுக்களில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற முடியாமல் போகும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 14.12.2017



1542- இளவரசி மேரிஸ்ருவாட், ஸ்கொட்லாந்தின் அரசியானார்.

1903 - றைட் சகோதரர்களால் வட கலிபோர்னியாவில் அவர்களது முதலாவது வானூர்திப் பறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2003 - பாகிஸ்தான் அரசதலைவர் பெர்வேஷ் முஷரப் படுகொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.

2016- நல்லிணக்கத்துக்காக 1.7 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதாக அமெரிக்கா தெரிவிப்பு.

2016 - கூட்டாட்சி அரசும் எமக்குக் கிள்ளித்தான் தெளிப்பதாக முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு.

2016 - மலேசியாவின் புதிய மன்னராக சுல்தான் மொகமட் முடி சூடப்பட்டார்.




1988 - ஜெனிவா ஐ.நா. பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார் பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் அராபத்.

## நாளை

**15.12.2017**
வெள்ளிக்கிழமை

**கார்த்திகை 29**

திதி: சதுர்த்தி மு.இ.08.02 வரை
நட்சத்திரம்: திருவோணம் மா. 05.31 வரை
சுபநேரம்: 06.25–07.55 வரை
ராகுகாலம்: 10.55–12.25 வரை



சினிமா

# இந்தமாத இறுதியில் தனது ரசிகர்களை சந்திக்கிறார் ரஜினி

நடிகர் ரஜினிகாந்த் இந்த மாதம் இறுதிப்பகுதியில் ரசிகர்களைச் சந்திக்க உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ரஜினி அண்மையில் சென்னையில்உரையாற்றுகையில், "சில அரசியல்வாதிகள் எனது பெயரைப் பயன்படுத்தி ஆதாயம் பெற்றனர். எனது ரசிகர்களையும் அவர்கள் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக்கொண்டனர். அமைச்சராக ஆசைப்படலாம். ஆனால் பணம் சம்பாதிக்க ஆசைப்படக்கூடாது. நான் அரசியலுக்கு வந்தால் பணம் சம்பாதிக்க நினைப்பவர்களை பக்கத்தில் சேர்க்க மாட்டேன். போருக்குத் தயாராக இருங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

ரஜினி அரசியலுக்கு வரப்போவதையே இவ்வாறு குறிப்பிடுகிறார் என்று கருதப்பட்ட நிலையில் அவர் இந்த மாதத்தின் இறுதிப்பகுதியில் தனது ரசிகர்களையும் சந்திக்கவுள்ளார் என்று தற்போது தெரிவிக்கப்பட்டது.

**நிகழ்காலத்தில் நாம்**
**நேசிப்பவர்களோடு இருந்தால்,**
**எதிர்காலத்தில் அவர்களின்**
**நினைவுகளோடு இருப்பதே**
**#காலமாற்றம்**

எவ்வளவு நேரமானாலும்..
அப்பாவுக்காக
சாப்பிடாமல் காத்திருக்கும்
அம்மாவும்,

அத்தனை பசியிலும்..
அம்மாவிற்காக
சாப்பிடாமல் வீட்டிற்கு
வரும் அப்பாவும்..

எமது தலைமுறையின் வரங்கள்..!!

## ருவீற்றர்



twitter.com/SKtwtz
உன் கஷ்டம் எனக்குப் புரிகிறது என்பதை விட எனக்கும் கஷ்டமாக இருக்கிறது என்பவர்கள் கிடைக்கும் வரம் வேண்டும்..



twitter.com/abuthahir707
10 நிமிடம் பழகி எதிரி ஆனாலும்
பரவாயில்லை
10 வருடம் பழகி துரோகம் செய்யாமல்
இருந்தாலே போதும்



witter.com/mujib989898
இப்போதெல்லாம் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ மட்டும் எடுப்பதற்காகவே ஸ்டுடியோ திறந்து வைத்திருக்கிறார்கள்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வெகுநாள் கனவு நிறைவேறும். தொழில், வியாபார அணுகுமுறை சிறந்து நல்ல பலன் தரும். மேலதிக பணவருமானம் உண்டு. விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்:** பணியில் கூடுதல் உழைப்பு அவசியம். தொழிலில் உருவாகின்ற இடையூறை உடனே சரிசெய்வது நல்லது. பணவரவு சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** வேலைப்பளு அதிகமாகலாம். வீண் பேச்சுப் பேசுபவரிடம் விலகுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை சீராகும். பணவரவு சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இனியவார்த்தை பேசி நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி திருப்திகரமாக நிறைவேறும்.

**சிங்கம்:** சூழ்ச்சியுடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. திட்டமிட்ட பணி நிறைவேத் தாமதமாகலாம். தொழி லில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** சமயோசிதமாகச் செயற்படுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து தாராளப் பண வரவு இருக்கும்.

**துலாம்:** செயல்களில் சீர்திருத்தம் அவசியம். கடின உழைப்பினால் தொழில் வியாபாரம் சராசரி நிலையை அடையும். நிலுவை பணம் வசூலிப்பதில் நிதானம் வேண்டும்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பெறுவீர்கள். முக்கியமான விவகாரத்தில் நல்லபயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**தனுசு:** சுதந்திரமாக செயற்படுவீர்கள். புதியவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு உருவாகும். வழக்கு விவகாரத்தில் அனுகூலத் தீர்வு வரும்.

**மகரம்:** பொது விஷயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். முக்கியச் செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரும். தொழில், வியாபாரம் வளரக் கூடுதல் உழைப்பு அவசியம். புதிய வழிகளில் பணச்செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** நினைத்த காரியம் இனிதாக நிறைவேறும். உறவினர், நண்பர் கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 1 | | 9 | | | | |
| 9 | | | | | | 3 | 8 | |
| | 4 | | | 8 | | | | 9 |
| | | 5 | 2 | | | | | 8 |
| | 9 | | 7 | 5 | 4 | | 2 | |
| 1 | | | | | 8 | 4 | | |
| 6 | | | | 3 | | | 5 | |
| | | 9 | | | | | | |
| | | | | 7 | | 8 | 3 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 7 | 3 | 4 | 5 | 8 | 1 | 2 |
| 5 | 1 | 4 | 2 | 8 | 9 | 6 | 7 | 3 |
| 3 | 2 | 8 | 6 | 7 | 1 | 9 | 4 | 5 |
| 7 | 3 | 6 | 4 | 9 | 2 | 1 | 5 | 8 |
| 2 | 5 | 1 | 8 | 6 | 3 | 7 | 9 | 4 |
| 4 | 8 | 9 | 1 | 5 | 7 | 2 | 3 | 6 |
| 6 | 7 | 3 | 5 | 1 | 8 | 4 | 2 | 9 |
| 8 | 9 | 2 | 7 | 3 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 4 | 5 | 9 | 2 | 6 | 3 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**பள்ளிக்கூடம் போறப்ப வெள்ளிக்கிழமை வந்தா சந்தோசம்**



**வேலைக்குப் போறப்ப சனிக்கிழமை வந்தா சந்தோசம்**

**வீட்டில டிவி ஓடும்போது டிவியை பாக்கிறவங்களை விட**




**டிவியை ஓடவிட்டு செல்போன் பார்க்கிறவங்கதான் அதிகம்**

## படித்ததில் பிடித்தது

- சாவியை நான் தொலைத்துவிட்டு, தண்டனையை பூட்டுக்குக் கொடுத்தேன்…
- வாசிக்காமல் வைத்திருப்பது, ஒரு புத்தகத்துக்கு எதிராக செய்யப்படும் மிகப் பெரிய வன்முறை!!
- எல்லாரையும் நம்புங்க, துரோகம் பழகிடும்.
  யாரையுமே கண்டுக்காதீங்க, தன்னம்பிக்கை தானா வந்துடும் !!
- விசா இல்லாம வியட்நாம் வரைக்கும் கூடப் போயிடலாம்.
  ஆனா, வேலை இல்லாம சொந்தக்காரன் வீட்டுக்கு மட்டும் போக முடியாது !!!!
- உயர உயரத்தான் எமக்கு மேல் எத்தனை பேர் உள்ளனர் என்று புரிகிறது!!
- பொருத்தமில்லாத ஜோடிகள் செருப்பாகக்கூட இருக்க முடியாது !!
- ஒவ்வொரு அலைபேசியிலும் இருக்கின்றன, தொடர்புகொள்ள முடியாத ,ஆனாலும் அழித்துவிட மனமில்லாத எண்கள்!
- சதுரங்கத்தில் கூட 'மந்திரிகள்' நேர் வழியில் பயணிப்பதில்லை!!
- 'சரியாக் கேட்க மாட்டேங்குது, அப்புறமாப் பேசுறேன்' என்பது மட்டும் சரியாக் கேட்டுவிடுகிறது!
- சிறு வயதில் ஆம்லெட் ஆக முடியாமல் தப்பித்த முட்டைகள்தான் வளர்ந்தவுடன் தந்தூரி சிக்கன் ஆகின்றன!

# நேர்மையின் பரிசு





ஓர் ஊரில் இராமன், சோமன் என்று இரு நண்பர்கள் இருந்தார்கள். இருவரும் ஓரளவு படித்திருந்தனர். தமது ஊரில் ஏதேதோ வேலைகளைச் செய்து பிழைத்து வந்தனர். ஒருநாள் இராமன் தன் நண்பனிடம் "சோமா நமக்குத் திடீரென ஒரு புதையல் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்று கேட்டான். "இராமா! இப்படியெல்லாம் நினைக்காமல் பாடுபட்டு நேர்மையாக இருந்து பணம் சேர்ப்பதே நல்லது" என்றான் சோமன். சில நாள்களின் பின்னர் இருவரும் ஒருவேலையாக அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு பையை இராமன் கண்டெடுத்தான். அதைத் திறந்து பார்த்ததில் அதற்குள் ஐம்பது ஆயிரம் ரூபா பணம் இருப்பதைக் கண்டு மிக மகிழ்ந்து "ஆகா என் அதிஷ்டமே அதிஷ்டம். கடவுளே என் நிலையைப் பார்த்து இதை எனக்குக் கொடுத்திருக்கிறார். இதை இருவரும் சமமாகப் பங்கிட்டு எடுப்போம்" என்றான்.

'சோமனோ "வேண்டாம் இது யாரோ தவறவிட்ட பணம். நாம் இதை உரிமை கொள்வது சரியல்ல. நாம் இந்தப் பையைக் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து விடுவோம். அவர் தறவிட்டவரைக் கண்டுபிடித்து அவரிடம் பணத்தைச் சேர்த்து விடுவார். மற்றவர் பணத்துக்கு நாம் ஆசைப்படக் கூடாது. நாமே உழைத்துப் பணம் சம்பாதித்துக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதுதான் நல்லது" என்றான். இராமனோ "முடியாது. இது வழியில் நான் கண்டெடுத்த பணம். இது கிடைத்தபோது நீயும் பக்கத்தில் இருந்தமையால்தான் உனக்கும் பங்கு தர நினைத்தேன். நீ பங்குவேண்டாம் என்கிறாய்" என்று கூறி சோமன் கைக்குள் வலுக் கட்டாயமாக ரூபா இருப்பத்தைந்தாயிரத்தைத் திணித்து விட்டான் இராமன். வேறு வழியில்லாமல் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டான் சோமன். இராமனோ உடனடியாகப் பட்டணம் சென்று அந்தப் பணத்துக்கு தன் மனைவி பிள்ளைகளுக்குத் துணிகளை வாங்கினான். ஆனால் சோமனோ அந்தப் பணத்தைச் செலவு செய்யாது தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாத காலத்தின் பின் சோமன் இராமனிடம் சென்று "இராமா எனக்குப் பட்டணத்தில் உத்தியோகம் கிடைத்து விட்டது. அதை நான் ஏற்கப்போகிறேன்" என்றான். அதைக்கேட்டு இராமன் ஆச்சரியப்பட்டு "உனக்கு எப்படி இந்த வேலை கிடைத்தது? என்று கேட்டான் சேமானும் " நீ கண்டெடுத்த பணத்தில் எனக்குப் பாதிப் பணத்தைக் கொடுத்தாய். நினைவிருக்கிறதா? அந்தப் பணத்தை நான் செலவு செய்யவில்லை. அந்தப் பணத்தை நான் உனக்கு முன்பு கூறியபடி கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்து நடந்ததைக் கூறி மீதிப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பாதித்து அவரிடம் கொடுத்து விடுவதாகவும் கூறினேன். நான் கூறியதைக் கேட்ட உத்தியோகத்தர் என்னைப் பாராட்டி விட்டுப் பணப் பைக்குரிய 'நல்ல சாமி' என்ற காய்கறி வியாபாரியைச் சந்தித்து அந்தப் பணத்தைக் கையளித்தோடு என்னைப் பற்றியும் அவரிடம் கூறியுள்ளார்.

அந்த வியாபாரியின் மைத்துனர் ஒருவர் அரச நிதிப் பிரிவில் வேலை பார்க்கிறார். அவரிடம் என்னைப் பற்றிக் கூறி அந்த வியாபாரி பரிந்துரை செய்திருக்கிறார். அவரின் பரிந்துரைப் படி அரச நிதிப் பிரிவில் எனக்கு நாணயமாக கணக்கெழுதும் கணக்காளர் வேலை கிடைத்துள்ளது" என்றான் சோமன்.

"அப்படியானால் என்னை விட்டு விட்டு நீ மட்டும் பட்டணம் போகிறாயா? என்றான் பெருமூச்சு விட்டபடி இராமன்.

"நண்பா கவலைப்படாதே! நான் அந்த வியாபாரியிடம் உன்னைப் பற்றி கூறினேன். உனது ஏழ்மை நிலைதான் கண்டெடுத்த பணத்தில் உன்னை ஆசைகொள்ள வைத்ததென்றும் கூறி உன்னையும் அவர் வியாபாரத்தில் கூட்டுச் சேர்த்துக் கொள்ளும் படியும் கூறியுள்ளேன். அவரும் சம்மதித்து விட்டார். நீயும் என் கூடப் புறப்படு" என்றான் சோமன்.


நண்பா நீ நேர்மையாக நடந்ததால் கிடைத்த நல்ல பலன்பற்றி உணர்ந்தேன். இனி உன் போலவே நானும் நேர்மையாக வாழ்வேன்" என்றான் இராமன். நண்பர்கள் இருவரும் பட்டணம் நோக்கிப் புறப்பட்டனர்.





# அம்புலி மாமா

- ★ சந்திரனை அம்புலிமாமா, நிலா திங்கள் வெண்ணிலா என்றும் அழைப்போம்.
- ★ சந்திரன் இரவில் வான வீதியில் பவனி வரும்.
- ★ அது நட்சத்திரக் கூட்டங்கள் நடுவில் ஒளி வீசும்.
- ★ சந்திரனுக்குத் தனியே ஒளியில்லை.
- ★ அது சூரியனிலிருந்தே ஒளியைப்பெற்று மின்னுகிறது.
- ★ சந்திரன் பூமியின் உப கோளாகும்.
- ★ இது பூமிக்கு மிக அருகில் இருக்கிறது.
- ★ இது தன்னைத்தானே சுற்றுகிறது.
- ★ இது பூமியைச் சுற்றி வரும் காலம் ஒரு மாதமாகும்.
- ★ சந்திரன் ஆரம்பத்தில் பிறை வடிவில் தெரியும்.
- ★ பின்னர் ஒவ்வொரு நாளும் வளரும்.
- ★ ஒரு நாள் முழுநிலாவாகக் காட்சி தரும்.
- ★ அன்றைய நாள் பூரணை, பௌர்ணமி என்றும் அழைக்கப்படும்.
- ★ பின்னர் அது ஒவ்வொரு நாளும் தேய்ந்து வரும்.
- ★ இறுதியில் ஒரு நாள் அது முற்றாக மறையும்.
- ★ அன்றைய தினம் அமாவாசை எனப்படும்.
- ★ சந்திரனில் பூமியை விடக் குறைந்த ஈர்ப்புவிசை உண்டு.
- ★ இந்த ஈர்ப்பு விசையால் பூமியில் கடல் பரப்பில் வற்றுப்பெருக்கு ஏற்படும்.
- ★ சந்திரனில் வளிமண்டலம் இல்லை.
- ★ சந்திரத்தரையில் அமெரிக்க விண்கலத்தில் நீல ஆம்ஸ்ரோங், அல்ரின் என்பவர்கள் கால் பதித்தார்கள்.
- ★ சந்திரனில் பகலில் வெப்பமும் இரவில் அதிக குளிரும் நிலவுகிறது.
- ★ சந்திரனின் ஒளியை வர்ணித்து பண்டைய காலம் முதல் இக்காலம் வரை பல கவிஞர்கள் கவிதைகளைப்பாடி வருகின்றார்கள்.
- ★ குழந்தைகளின் தாய்மார் சந்திரனைக் காட்டி அவர்களுக்கு உணவூட்டுவது முற்காலத்தில் வழக்கமாக இருந்தது.
- ★ சந்திரனைக் கடவுளாக வழிபடும் வழக்கமும் இருந்து வந்திருக்கிறது.



# வழிகாட்டுவோம்





# வாழ்ந்து காட்டுவோம்

- பெற்றோர், புதிய முயற்சிகளில் சிறுவர்கள் ஈடுபடும் போது உன்னால் முடியும், செய்துபார் முயன்றுபார் என்று நம்பிக்கையளித்து அதனைச் செய்து முடிக்கச் சரியான பாதையைக் காட்ட வேண்டும்.
- பெற்றோர் கூறும் சில அறிவுரைகள் பெரும்பாலும் குழந்தைகளுக்குப் புரியாது. அவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பெற்றோருக்கும் சொல்லத் தெரியாது. அதனால் குழந்தைகளுக்கு அறிவுரைகள் வழங்குவதை விடுத்து அந்த அறிவுரைகளுக்கு ஏற்ப பெற்றோர் வாழ்ந்து காட்ட வேண்டும். உதாரணமாக வாழைப் பழத்தைச் சாப்பிட்டு விட்டு தோலைக் குப்பைக் கூடைகளில் போட வேண்டும் என்பதை எப்போதும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதில்லை. முன்னோடியாக பெற்றோர்கள் அப்படிச் செய்து வந்தால் குழந்தைகள் தாமாகவே அதனைப் பின்பற்றத் தொடங்குவர்.
- பெற்றோர் தங்களிடமிருக்கும். மூட நம்பிக்கைகளைச் சிறுவர்கள் மீது திணிக்கக் கூடாது. உதாரணமாகப் பேய், பிசாசு, மாந்திரீகம் போன்றவற்றை விளையாட்டுக்காகவோ பயமுறுத்தலுக்காகவோ கூடச் சொல்லக் கூடாது. சொன்னால் அவர்கள் விபரீதமாக யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள்.
- நீதியைச் சொல்லும் கதைகளில் கூட பொய் புரட்டு, மூட நம்பிக்கை இருக்குமானால் அதிலிருக்கும் நீதி குழந்தைகளுக்குப் புரியாது. மாறாகப் பொய்யான விடயங்கள் ஆழமாகப் பதிந்துவிடும். சிறுவர்களின் கற்பனை உள்ளம் மூட நம்பிக்கைகளை எளிதாகக் கிரகித்துக்கொள்ளும்.
- பெற்றோர், மற்றவர்கள் மீதுள்ள தங்கள் கோபத்தை வீட்டில் குழந்தைகளிடம் காட்டக் கூடாது. அப்படி அடிக்கடி நடந்தால் பிள்ளைகள் முரட்டுச் சுபாவம் கொண்டவர்களாகிவிடுவர். எப்போதும் சிடுசிடுப்பு, எரிச்சல் இவையெல்லாம் குழந்தைகள் விடயத்தில் ஆகாது.
- குழந்தைகள் கோபஉணர்வு அற்றவர்களாகவும் பொறுமை உணர்வு மிக்கவர்களாகவும் வளரவேண்டும் என்றால் அத்தகைய குணாதிசயங்களைப் பெற்றோரும் பிள்ளைகளிடத்தில் வெளிப்படுத்த வேண்டும்.
- குழந்தைகளைத் திட்டுவது அடிப்பது எல்லாம் பெற்றோர் மீது அவர்களுக்கு அவ நம்பிக்கையை உருவாக்கிவிடும். அது அவர்களிடம் வன்முறை எண்ணத்தை உருவாக்கிவிடும். தங்கள் வீட்டில் இருந்து வன்முறை எண்ணம் கொண்ட ஒருவர் உருவாகப் பெற்றோர் ஒருபோதும் காரணமாகி விடக்கூடாது.

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com,
021 493 1111

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பத்மநாதன் நேற்று (13.12.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோசேப் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பத்மநாதன் (ஞானக்கிளி)யின் அன்பு மனைவியும் சகாயராணி, சந்திரன், யோகராணி (ஆசிரியர்), யசீந்திரன் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), கரன் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஆரணி ஆகியோரின் அன்புத் தாயும் கோவிந்தராசா, ராகினி, விஜேந்திரன்(ஆசிரியர்), ஜஸ்மின்(ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும் அபில்ராஜ் , அபிஷா, ஹரிகரன், காலஞ்சென்ற டயாணி யதுர்சனா, யஸ்மினா, வியோர்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, A.P. Lane,
நாவலர் வீதி, நாவாந்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 218 9929

## மரண அறிவித்தல்




### ஸ்ரீமதி சாரதாம்மா சிவசாமிக்குருக்கள்

காரைநகரை பிறப்பிடமாகவும் மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொழும்பு-13, கொட்டாஞ்சேனையில் வாழ்ந்தவருமாகிய ஸ்ரீமதி சாரதாம்மா சிவசாமிகுருக்கள் அவர்கள் 13.12.2017 செவ்வாய்க்கிழமை பின்னிரவு இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற சிவசாமிக்குருக்கள் (பிரதமகுரு மட்டுவில் கல்வம் சிவன்கோயில்) அவர்களின் பாரியாரும் காலஞ்சென்ற ஸ்ரீமதி இந்திராதேவி (ஹற்றன்), சபாநாதகுருக்கள் (மட்டுவில் - கனடா) நீலாயதாட்ஷி (கொழும்பு), ஜெயந்தி நாதக்குருக்கள் (ஜேர்மனி) காயத்ரி (யாழ்ப்பாணம்), கமலநாத சர்மா (யாழ்ப்பாணம்), பத்மநாபக்குருக்கள் (பம்பலப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாவித்திரி சிவராமலிங்க குருக்கள் (அளவெட்டி)யின் சிறிய தாயாரும், சண்முகரட்ணகுருக்கள் (ஹட்டன்), விமலாம்பிகை - சோமசுந்தரகுருக்கள், மோஹனா நகுலேஸ்வர சர்மா, கல்யாணி ஆகியோரின் அன்பு மாமியாரும் நதீசன்- ரஜிதா, சங்கீதா ஸ்ரீகுமார், காலஞ்சென்ற கோபாலகுமார், அனுஷா- கண்ணன், சிவசுதன், சௌம்யா, சங்கர்ஷண் - சிவதனுஜன், சிந்தூரா, ரம்யாசினி, சுபாங்கி - சிவபாலினி- பாலசிவம் சுபலஷ்மி ஆகியோரின் அன்புப்பேத்தியும் தராகினி, ஹெமசியான், பக்தரக்ஷி, ஜினோச்சனா, மிருதுளா, பிரனுஷா, சௌக்யா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 14.12.2017 இன்று வியாழக்கிழமை அஞ்சலிக்காக பொறளை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பொறளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
இல.109 1/3, கல்லூரி வீதி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

077 6193356 ஸ்ரீ குமார்
077 0406805 பத்மநாம சர்மா
011 2338646 சபாநாத சர்மா
077 9924422

எங்கள் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளுடன்....

## வனிக்கா சேஜிக்கல்ஸ்

தலைநகரில் தனித்துவமான எல்லாவித சத்திரசிகிச்சை உபகரணங்கள் உடல் நலம் பேணும் உபகரணங்கள் மற்றும் எல்லாவித ஆய்வு கூட உபகரணங்களுடன் இரசாயனங்களினதும் காட்சிக்கூடம்

குழந்தைகளுக்கான Cute Baby - Sensitive Wipes மற்றும் Mum & Me Diapers இற்கும் ஏக விநியோகஸ்தர்கள்

203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 0077
Hotline 077 442 2367
E-mail -vanisurgi@sltnet.lk

## உடனடி வேலைவாய்ப்பு

உல்லாச பயண சபையின் அனுமதியுடன் யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டலுக்கு கீழ் வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**1) கணக்காளர் (Accountant)**
கணக்காளர் பதவியில் முன் அனுபவமும் ஆங்கில அறிவும் கணினி அறிவும் இருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**2) காசாளர் (Cashier)**
A/L கல்வி தகைமையுடன் காசாளர் பதவியில் குறைந்தது ஒரு வருட அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3) வரவேற்பாளர்(Receptionist)**
O/L or A/L தகைமையுடன் சரளமாக தமிழ் மொழியுடன் ஆங்கிலம் (சிங்களம் விரும்பத்தக்கது) பேசக்கூடியவர்களும் (30) வயதுக் குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு :-மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆண்.பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
உணவு, தங்குமிட வசதிகளும் உண்டு.

தொடர்பு :-
077 798 3933
076 359 9739

# பிரமோன்ஸ் செயல்நிலை தரும் தனித்துவ ஊக்கி

பிரமோன்ஸ் பற்றிய தகவல்களை எம்முள் சிலர் அறிந்திருக்கலாம். ஆனாலும் பலருக்கு இவை புதிய தகவல் தரலாகவே அமைந்திருக்கும். எறும்புகள் ஊர்ந்து செல்லும்போது சாரை சாரையாக ஒரு கோட்டின் மீதாய் வரிசை கலையாமல் ஊர்ந்து செல்வது போலவும், ஒரு தேனீயை துன்புறுத்தினால் தேனீக்கள் கூட்டமே துரத்தி வந்து கொட்டுவதற்கும், ஒரு பசுவின் பருவ காலத்தை அறிந்துகொண்டு களைகள் அவற்றைப் பின்தொடர்ந்து செல்வதற்கும் என அனைத்துக்குமான காரணகாரிய மூலக்கூறாக அமைந்திருப்பவை இந்தப் பிரமோன்களே என்கின்றனர் ஆய்வாளர்கள். பிரமோன்கள் என்பவை ஒரு விதமான ஓமோன்களே. இந்த ஓமோன்கள் பொதுவாக உடலின் உள்ளாய் உற்பத்திசெய்யப்பட்டு அந்த உடலின் உள்ளயே பயனுறுகிறது. ஆனாலும் பிரமோன்கள் ஒரு உயிரியால் அதாவது ஒரு கல உயிரி தொடக்கம் பல கலங்களை உடைய உயிரிகள் வரை உற்பத்தி செய்யப்படுவதுடன் காற்றில் வெளியேற்றப்பட்டு அந்த உயிரின் கூட்டிற்கோ அல்லது அந்த இனதிற்கோ தகவல்களாக பரிமாறப்படுகின்றன. இந்தத் தகவல் என்பது எந்தவிதமான தகவல்களாகவும் இருக்கலாம். எச்சரிக்கை விடுப்பது, உதவிக்கு அழைப்பது, இனபெருக்கதிற்குத் தயார் என அறிவிப்பது, தாயையும் பிள்ளைகளையும் இணைப்பது, வழிநடத்திச் செல்வது என பல்வேறுபட்டதான தகவல்கள் பல்வேறு விதமான பிரமோன்களால் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன.

பூச்சி இனங்களில் இந்தப் பிரமோன்களை கண்டுபிடிப்பது எளிதாகக் காணப்படுவதால் அங்கு பல ஆய்வுகள் நடந்துள்ளன. சிலமனிதர்கள் தேனீக்களை தங்கள் உடல் முழுவதும் பரப்பிக்கொண்டு எந்தவித ஆபத்தும் இன்றி பலமணிநேரம் கூட இருக்கின்றனர். இந்த விடயங்கள் அனைவருக்கும் ஆச்சரியங்களைத் தரும். ஆனாலும் இதற்குபின்னான அறிவியலைத் தெரிந்து கொண்டால் நாமும் மேற்போந்த செயற்பாட்டை ஓர் தரம் முயற்சித்துப் பார்க்கலாம். தேன் கூட்டில் ஒரு ராணித் தேனியை சுற்றிஏனைய அனைத்து தேனீக்களும் மொய்த்துக்கொள்கின்றன. அந்த ராணித் தேனீக்கள் இல்லாவிடின் தேனீக்கள் ஒருபோதுமே கூட்டில் இருக்காது. இதற்குக் காரணம் அந்த ராணி தேனீக்கள் வெளியிடுவதான பிரமோன்களே அனைத்துத் தேனீகளையும் ஈர்க்கின்றன. அந்த ராணித் தேனீயின் பிரமோனை செயற்கையாக உற்பத்தி செய்து கொண்டு அதனை உடல் மீது தடவிக் கொள்ளும் போது தேனீக்கள் உங்களை ராணி தேனீக்கள் என்றே கருதிக் கொள்ளும். உங்கள் மீது ஈர்ப்புடன் மொய்க்கத்தொடங்கும். அவை ஒருபோதும் கொட்டாது. இந்தப் பிரமோன்களைப் பற்றியதான பல ஆராய்ச்சிச் செயன்முறைகள் இடம்பெற்றுவருகின்றன.

## மாபெரும் மலிவு விற்பனை 2017

| | | |
|---|---|---|
| I. Table Mat | ~~2400/=~~ | 1400/= |
| II. Dressing Table | ~~7500/=~~ | 4680/= |
| III. Cane Set | ~~16900/=~~ | 14900/= |
| IV. 6 Chair With Tipo (WISDOM) | ~~6000/=~~ | 5450/= |
| V. SOFA Set with Glass Coffee Table | ~~43000/=~~ | 36500/= |
| VI. Wood Cupboard (Import) | ~~29000/=~~ | 18240/= |
| V. Mattress | ~~3600/=~~ | 2920/= |



"வெளிநாட்டில்" இருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

- அரசடி வீதி -
தட்டாதெரு சந்திக்கும் பிறவுண் வீதி சந்திக்கும் இடையில்
076 821 9418, 076 821 9413

## இன்று முதல் ஆரம்பம்

இளையோர்களே சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

Aaruthal's CITE
BELIEVE TO ACHIEVE
CENTRE FOR IT EDUCATION

December 14 | 4 .00pm
Aaruthal's CITE – Job Skills Development & Training.
No. 125 Main Street, Jaffna. (near to Courts Complex)

"நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஆறுதல் நிறுவனத்தின் கணனிக்கற்கை மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் திறன் விருத்திக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்க இருக்கிறது"

- Computer Literacy & English Language Skills Development & Training Programme
- IT Job Skills Development & Training Programme.

(Covers ICT and Communicative English Syllabus of TVEC- NVQ Level 3,4)

ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உங்கள் பதிவினை உறுதி செய்யுமாறும் இதுவரை பதிவு செய்யாதவர்கள் விரைவில் பதிவினை மேற்கொள்ளுமாறும் கேட்கப்படுகிறீர்கள்

"தகவல் தொழில்நுட்பம் சார் வேலைவாய்ப்பு மற்றும் தேர்ச்சி பெறுவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"

குறிக்கப்பட்ட இருக்கைளே இருப்பதனால் காலதாமதமின்றி பதிவினை மேற்கொள்ளவும் எமது நிறுவனத்தில் கற்கைநெறிக்கான பதிவினை மேற்கொண்டோருக்கு முன்னுரிமை

அனுமதி இலவசம்!

தொடர்புகளுக்கு 021 221 7029 | 077 292 8353

சிறார்களே உங்கள் விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்.

Computer Wise Kids
Introducing technology to young minds

## மரண அறிவித்தல்

உதிப்பு
22 . 12 . 1957



மறைவு
13 . 12 . 2017

# Grace PremalathaSenthinathan
# கிறேஸ் பிறேமலதா செந்திநாதன்

யாழ் புலோலியை பிறப்பிடமாகவும் பூங்காவனம் டச்சுவீதி , சண்டிலிப்பாய், கல்கிசை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிறேஸ் பிறேமலதா செந்திநாதன் நேற்று (13.12.2017) புதன்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஐசாக் இராஜசூரியர் சுந்தரராணி தம்பதிகளின் மகளும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும் பொ.செந்திநாதனின் அன்பு மனைவியும் ரெபேக்கா பிருந்தினி, அன்ட்றூ கிருபனின் அருமைத்தாயாரும் வின்ஸ்ரன் , வினோஜனின் அருமை மாமியாரும் கெத்தூரா, கேரனின் அருமைபேர்த்தியும் பிரேமரூபினி, பிரேமமாலினி, அனிற்றாபிரேம்நிசா, பிரேமீளா, சாமுவேல், பிரேம்குமார் ஆகியோரின் அன்புசகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.12.2017 வியாழக்கிழமை காலை 9.30 முதல் மாலை 9.00 மணிவரையும் 15.12.2017 வெள்ளிக்கிழமை காலை 9.30 முதல் மாலை 3.30 மணி வரையும் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்குவைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெற்று கல்கிசைமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: செந்திநாதன் (கணவர்)**

## முதலாம் ஆண்டு நினைவலைகள் .....

தோற்றம்
19
01
1937



மறைவு
26
11
2016

# அமரர் கிட்டிணன் பொன்னையா

ஆண்டு ஒன்றென்ன ஆயிரம்தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்!!
எம் குடும்பத்து குலவிளக்கே
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
எங்கள் குடும்பமே இருளாகி விட்டதய்யா!!

அன்பும் அறிவும் கொண்ட அழகான எங்கள் குடும்ப விருட்சமே!
கேட்டவர்க்கெல்லாம் வாரிவழங்கும் கொடை வள்ளலே!
உம் இன்முகத்திற்கு இவ்வுலகில் ஈடிணை இல்லையையா!!

நாமெல்லாம் வேண்டும் வரம் ஒன்றே ஐயா
எம் வம்சத்தில் வாரிசாக மீண்டும் வந்திடுங்கள் ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்.

சுவில், புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்
021 226 3482

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 01 . 1949



மறைவு
13 . 12 . 2017

# திருமதி நவரத்தினசோதி சுப்பையா

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தின்சோதி சுப்பையா நேற்று(13.12.2017) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சுப்பையா அவர்களின் அன்பு மனைவியும் கதிர்காமநாதன் (ஓய்வு நிலை சாரதி .சுகாதாரத்திணைக்களம் ,யாழ்ப்பாணம்,கிளிநொச்சி), பத்மலோஜினி (ஆசிரியை, கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), மகிழ்நாதன்(சாரதி சுகாதாரத்திணைக்களம்,யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகவதனா (ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை), கோ.தேவராசா(ஆதார வைத்தியசாலை,தெல்லிப்பழை), உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனுஷன், லக் ஷிகன், பிரியங்கா , லவனியா, மகிபரன், பாணுஜா, கரணிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஞானேஸ்வரி, இராஜகுலசிங்கம் (UK), தர்மகுலசிங்கம் (வவுனியா), சிவநேசசிங்கம்(நோர்வே), சதானந்தவதனா, குகானந்தவதனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தலிங்கம் , வலசலோஜினி(UK), விஜயலதா, பிறேமசாந்தி, புவனயோகேஸ்வரன் (சீமேந்துக் கூட்டுத் தாபனம்), சிறீகரன் (ஆசிரியர்,சாவ இந்து) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0779218613**

## மரண அறிவித்தல்

# செல்லையா சரவணமுத்து

***( இளைப்பாறிய பொலிஸ் சார்யன் J.P)***



கச்சாய்வீதி , கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சரவணமுத்து (இளைப்பாறிய பொலிஸ் சார்யன் J.P) நேற்று ( 13.12.2017 ) புதன்கிழமை காலமாகிவிட்டார்:

அன்னார் காலஞ்சென்ற செல்லையாசின்னத்தங்கம்தம்பதியினரின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமை மரும கனும் காலஞ்சென்ற சரவணமுத்து சிவபாக்கியம் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும் பத்மினி, காலஞ்சென்ற பிரபாகரன் B.S.C மற்றும் தயாகரன் (ஜேர்மனி) , றஞ்சினி, சாந்தினி (வலயக்கல்வி அலுவலகம் , தென்மராட்சி), நிரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற யோகேந்திரராசா மற்றும் யோகறஞ்சிதம் (ஆசிரியர்,கொழும்பு), பரிமளாதேவி (ஜேர்மனி). இரவி (இளைப்பாறியதொலைத்தொடர்புஉத்தியோகத்தர்)பாலசுப்பிரமணியம்(இளைப்பாறிய அஞ்சல் உத்தியோகத்தர் .பளை), தவரூபரதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவனுயன் (பொறியியலாளர், கொழும்பு), சஜீவன் (ஆசிரியர்,ஒட்டிசுட்டான்), கயேந்திரா (ஆசிரியர்,கொழும்பு), பிரசாந் (பொறியியலாளர்), பார்த்தீபன், சத்தியா(ஜேர்மனி), காலஞ்சென்ற பிரசாத் மற்றும் பிரதீபன் - பிரவீனா (தாதிய உத்தியோகத்தர் . யாழ்ப்பாணம்), கோகிலன் - பிரபாகினி , பகீரதன் (யாழ் இந்துக்கல்லூரி), அபிநயா (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி). மிர்னா, மிதுசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் திஷானுகா (கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை),கோபிஷன் ,டறூன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.12.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**து. பாலசுப்பிரமணியம்**

## பாலியல்...

தாவது:
ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் தவறுகள் குற்றங்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்க மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மீது 11 தடவைகள் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையிலேயே எமது கல்விச் சூழல் இருக்கின்றது. மாணவ, மாணவிகளின் பாதுகாப்பு இந்த விடயத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு ஆசிரியர் பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானால் அவர் மீது தற்போது எடுக்கப்படும் நடவடிக்கை இடமாற்றம் மட்டுமே. இதன் ஊடாக மட்டும் இந்தக் குற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் மீது சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைக்கும் அவரை உட்படுத்த வேண்டும் - என்றார்.

உறுப்பினர் அரியரட்ணம் தனது உரையில்,"நாம் எமது அமைச்சரையோ செயலரையோ அதிகாரிகளையோ குறைகூறிக் கொண்டு இருப்பது சரியல்ல. அவர்களுக்குக் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களும் நேர்மையாகச் செயற்படவேண்டும். ஏனெனில் அதிக விமர்சனத்துக்கு ஆளாகின்றதுறை கல்வி. பளை மத்திய கல்லூரியில் 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்கள் இருக்கின்றபோதும் பாடசாலைக்கு மதியம் 1.30 மணிக்கு சென்றால் அங்கு ஒரு ஆசிரியர்களையும் சந்திக்க முடியாது. இந்த நிலையில்தான். பாடசாலை காணப்படுகின்றது. சில பாடசாலைகளின் அதிபர்கள் மாகாணக் கல்வி திணைக்களத்துக்குத் தவறான தகவல்களை வழங்குகின்றனர்" என்றார்.

"இராணுவத்தின் முன்பள்ளியில் 600க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களும் படையினர்தான். இராணுவத்தின் நடைமுறையின்படி போர் ஏற்பட்டால் அந்த முன்பள்ளி ஆசிரியர்களும் துப்பாக்கி ஏந்திப் போருக்குப் போகவேண்டியவர்கள்தான். அவர்கள்ள நாம் அதிலிருந்து மீட்டெடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை" என்று முன்னாள் கல்வி அமைச்சரும் தற்போதைய உறுப்பினருமான த.குருகுலராஜா தெரிவித்தார்.

"பாடசாலை நேரம் காலை 7.30 ஆக இருப்பதால் மாணவர்கள் பலர் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். காலையில் சாப்பிடாமல் செல்கின்றனர். இதனால் பாடசாலை சென்று சில மணித்தியாலயத்திலேயே சோர்வடைகின்றனர். இதனால் அவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே பாடசாலை நேரத்தை மாற்றம் செய்வது தொடர்பில் பரீசீலனை செய்ய வேண்டும். பெற்றோருக்கு அடுத்த படியாக ஆசிரியர்கள்தான் பிள்ளைகளுக்கு துணையாக இருக்கின்றனர். ஆனால் சில சம்பவங்கள் ஊடாக வேலியே பயிரை மேய்வதுபோலக் காணப்படுகின்றது. மாணவிகள் மீது ஆசிரியர்கள் குற்றமிழைத்தால் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். (உ-4,8)

## ஜெருசலேம்...

களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித இது தொர்டர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக மாற்ற எடுக்கப்படும் நகர்வுகளுக்காகப் பன்னாடுகளின் தூதரகங்களை ஜெருசலேமிற்கு மாற்றும் திட்டத்தை இலங்கை அரசாக நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். இலங்கை இந்தச் செயற்பாடுகளை விரும்பவில்லை, இஸ்ரேலில் இலங்கை தூதரகம் தொடர்ந்தும் டெல் அவி நகரிலேயே செயற்படும்.

மேலும் ஐரோப்பிய நாடுகளும்கூட ஜெருசலேம் விவகாரத்தில் மிகவும் காட்டமான நிலைப்பாட்டில் உள்ளார்கள். எனினும் அமெரிக்கா மாத்திரமே ஜெருசலேம் தலைநகராக மாற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்,இருந்து கருத்துக்களை முன்வைத்து வருகின்றது.

ஜெருசலேம் தலைநகராக அங்கீகரிக்கப்படுவது குறித்தும் அமெரிக்காவின் செயற்பாடுகள் குறித்தும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கட்சி பேதமின்றி, சகல கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஆதரவாளர்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பலஸ்தீன விடுதலை மற்றும் அவர்களின் உரிமைக்காக குரலெழுப்ப வேண்டும் - என்றார். (உ-5,31)

## அரச...

பிடித்துறை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க அரச தலைவருக்கு ஆதரவளிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். அவருக்கு விரைவில் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

வீரகுமார திஸாநாயக்கவின் கோரிக்கையின் பிரகாரமே சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலர் பதவியில் மாற்றம் இடம்பெறவுள்ளது என்று தெரியவருகின்றது.

மேற்படி பிரதியமைச்சுப் பதவியை ஏற்பதற்கு ஆரம்பத்தில் அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார். செயலர் பதவியில் மாற்றம் நிகழுமாயின் பதவியை ஏற்பதற்கு அவர் பச்சைக்கொடி காட்டியிருந்தார். இதற்கமையவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் தற்போதைய செயலர் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு மாற்றப்படலாம் எனத் தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்காக அரச நிர்வாக கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால நடவடிக்கை எடுத்துள்ளமையானது ஐக்கிய தேசியக் கட்சியை அதிருப்தியடைய வைத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (உ-5)

## 40 சதவீத...

செலவுத்திட்ட விவாதத்தில் நேற்றுக் கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் கல்வி அமைச்சுக்கு 40 வீதமான நிதி ஒதுக்கப்படுகின்றது. அவ்வாறு நிதி ஒதுக்கினாலும் எமது கல்வி வளர்ச்சியில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளோமா? இதனை அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தற்போதைய கல்வி அமைச்சர் ஆசிரியர் நியமனம், இடமாற்றம் தொடர்பாகச் சில விதிமுறைகளைக் கொண்டுவந்துள்ளார். இது ஓரளவு வரவேற்கத்தக்கது. இனியாவது எமது கல்வி நிலையை முன்னேற்ற ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை எடுங்கள்" - என்றார்.

"கிளிநொச்சிக்கு கல்வி வலயம் இருக்கின்றபோதிலும் அதற்கெனத் தனியான கட்டடம் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிங்களப் பாடசாலை ஒன்றிலேயே வலயம் இயங்கி வருகின்றது. கிளிநொச்சி வலயப் பணிமன்யில் பணிப்பாளர் மட்டுமே இருக்கின்றார். மிகுதி ஆள்களைக் காணவில்லை. முதலாவதாக தீவகம் பின்னர் கிளிநொச்சி வலயம் என்பன மோசமாக இருக்கின்றன.

கிளிநொச்சியில் தார் வீதியில் கால் படக்கூடிய பாடசாலைகளில் மட்டுமே போதிய ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர்களைக் காணமுடியவில்லை. முதலில் அமைச்சரும் செயலரும் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் செயற்படவேண்டும்.

அதிகார முறைகேடு என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கல்வி அமைச்சரைப் பதவி நீக்கிவிட்டுப் புதிதாக வந்த அமைச்சர் பதவியேற்ற மறு நாளே அதிகாரிகள் ஊடாக அமைச்சரின் ஆலோசனைப்படி அதிபரை நியமிக்கின்றேன் என்று பாடசாலை ஒன்றுக்குத் தனக்கு ஏற்ற அதிபரை நியமித்துள்ளார்" என்றார் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தனது உரையில்.

"வடக்கு மாகாணத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டம் இந்தமுறை கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இது பாராட்டத்தக்க விடயம். முல்லைத்தீவு மாவட்டம் வறுமையில் இருக்கின்றபோதிலும் இந்த அடைவைப் பெற்றிருப்பதைப் பாராட்ட வேண்டும்" என்று உறுப்பினர் ரவிகரன் தனது உரையில் சுட்டிக்காட்டினார். (உ-4,8)

## இலங்கை...

நேற்றுக் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உலகளவில் இர்ண்டு சாதனைகளைப் படைத்துள்ளார். 1996ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை கைப்பற்றினார். கிரிக்கெட்டின் ஊடாக நாம் உலகளவில் பிரசித்தம் பெற்றோம். எம்மை உலகம் இனங்கண்டது. அதுபோலவே தற்போது உலகின் பெரிய நத்தார் மரத்தின் ஊடாக கின்னஸ் சாதனை படைத்து இரண்டாவது சாதனை படைத்துள்ளார்.

இந்த நத்தார் மரம் காலி முகத்திடலில் கட்டமைக்கப்பட்டது. எனினும் இந்த இடம் ஆரம்ப காலப்பகுதியில் போர் முகாமாக இருந்தது. அந்த இடத்தில் நாம் சமாதானத்திற்கான நினைவுச் சின்னமாக நத்தார் மரம் அமைத்துள்ளோம். இந்த மரத்தை தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்களும் இணைந்தே உருவாக்கினர். நத்தார் பண்டிகை இயேசு நாதரின் பிறந்த தின நிகழ்வாகும். கிறிஸ்தவர்கள் மாத்திரம் கொண்டாடாமல் அனைவரும் ஒன்றிணைந்தே இதனைக் கொண்டாடினர்.

இது இலங்கையின் சிறப்பு அம்சமாகும். நான்கு மதங்களின் பண்டிகையை அனைத்து மதத்தவர்களும் கொண்டாடுகின்றனர். இந்த நாட்டில் போர் இருந்தது. நாம் வெளிநாடுகளுடன் போர் செய்யவில்லை. எமது நாட்டின் இனத்தவர்களுடன் பிளவுப்பட்டு உள்நாட்டவர்களுடனே போர் செய்தோம்.

இன ஐக்கியம் எமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை துறைமுக ஊழியர்கள் புரிந்து கொண்டு நத்தார் மரம் அமைத்து உலகில் சாதனை படைத்துள்ளனர். இது சமாதானத்திற்கான சாதனையாகும். அனைத்து மத நிகழ்வுகளையும் கலந்து கொண்டாடுகின்றோம். பௌத்த நாடாக இலங்கை இருந்தபோதிலும் ஏனைய மதத்தவர்களுக்கும் அவர்களது காரியங்களை செய்வதற்கு இடமளிக்கவேண்டும் - என்றார். (உ-5,31)

## மருத்துவக்...

'எஸ்' சித்தி ஒன்றினையும் ஒரே தடவையில் பெற்றிருக்க வேண்டும் என்பதே ஆகக் குறைந்த தகைமை என்று அமைச்சரவை அங்கீகரித்தது.

இலங்கை மருத்துவக் கல்விக்கான ஆகக்குறைந்த தரத்தினை மருத்துவக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் அமைகின்ற ஒழுங்கு விதிகளாக இதனை அரசிதழில் வெளியிடுவது தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (உ-5,31)

## யாழ்...

லயதுக்காக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றக் கட்டுவதற்கும், அதற்காக 97.7 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கிக் கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (உ-5)

## சாவகச்சேரியில்...

செலுத்தும் நடவடிக்கை நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்தது. இன்று நண்பகலுடன் வேட்புமனுத் தாக்கல் நிறைவுக்கு வருகின்றது. இந்த நிலையில் நேற்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்தன. அத்துடன், தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய சபைகளுக்கான கட்டுப் பணத்தை நேற்றுச் செலுத்தியது.

கிளிநொச்சியிலுள்ள மூன்று சபைகளுக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தியது. வவுனியா மாவட்டத்தில், வவுனியா நகர சபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு ஈ.பி.டி.பி. கட்டுப் பணம் செலுத்தியுள்ளது. (உ-5,101)

## இறுதிவரையிலும்...

பேர் மட்டுமே சபையில் காணப்பட்டனர். ஏனைய உறுப்பினர்கள் எழுந்து சென்றுவிட்டமையை அவதானிக்க முடிந்தது.

வடக்கு மாகாண சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சு மீதான விவாதம் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது. மதிய உணவுக்குப் பின்னர் சுமார் 3 மணியளவில் கல்வி மீதான விவாதம் ஆரம்பமானது.

அதன் இறுதிவரை 15 பேர் மட்டுமே இருந்தனர். சபையில் மொத்தம் 38 உறுப்பினர்கள் உள்ளனர்.

"வடக்கின் மிகமுக்கிய பேசுபொருள் கல்வி. அத்தகைய முக்கியமான கல்வி பற்றிய விவாதம் இடம்பெறும்போது உறுப்பினர்கள் பலரைச் சபையில் காணமுடியவில்லை. உடல்நிலை பாதிக்கப்பட்ட முதலமைச்சர்கூட முற்பகலிலிருந்து மாலைவரை சபையில் பங்குகொண்டிருக்கிறார். ஆனால் உறுப்பினர்களில் பலர் சபையிலிருந்து சென்றுவிட்டனர். இதுதான் நிலை" என்று சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

சபையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அமைச்சர்களான குணசீலன், சர்வேஸ்வரன், அனந்தி, மற்றும் உறுப்பினர்களான அரியரத்தினம், சிவாஜிலிங்கம், கஜதீபன், புவனேஸ்வரன், சிவயோகன், இந்திரராசா, தர்மலிங்கம், ஜெயசேகரம், அகிலதாஸ் ஆகியோரே இறுதிவரை இருந்தனர். (உ-4,8)

## தேங்காய் அதிகரித்த விலையில் விற்பனை

### 119பேருக்கு எதிராக இதுவரை சட்டநடவடிக்கை

கொழும்பு.டிசெ.14

கட்டுப்பாட்டு விலையை விட அதிகமான விலையில் தேங்காய் விற்பனை செய்த 119 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது.

நாட்டில் நிலவும் தேங்காய் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு ,நுகர்வோருக்கு ஏற்ற வகையில் தேங்காய் ஒன்றினை 75 ரூபாவுக்கு விற்பனை செய்யமாறு பணிக்கப்பட்டது. ஆனால் அதிக விலையில் தேங்காயினை விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது வரையில் 119 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தைகளிலும் தேங்காயின் தரம் மற்றும் விலை தொடர்பிலான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை 1977 என்ற நுகர்வோர் விவகார அதிகார சபையின் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## இரு...

தேச சபைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவுள்ளது.

முன்னதாக வேட்பாளர் இட ஒதுக்கீடு குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான மலிக் சமரவிக்ரம ஆகியோருடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அதன் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (உ-5)

## சிமெந்து...

வுகளை இலங்கை துறைமுக அதிகார சபை முன்வைத்துள்ளது. இந்தத் துறைமுகத்திலிருந்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உகந்த வகையில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பக் கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு தேவையான 50 ஏக்கர் காணியினை இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்திடம் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பெற்றுக் கொள்வது என்று முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (உ-5)

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன்.யூட்கசன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். போதனா வைத்தியசாலை அணி மோதவுள்ளது.

**சென். றொக்ஸ் தாச்சித் தொடர்**
நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆனந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துர்க்கா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தென்றல் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# றேஞ்சர்ஸ் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நியூட்டன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதியது. சிவானந்தா அணியின் சார்பாக முதல் பாதியில் ஒரு கோல் பதிவானது. இரண்டாவது பாதியில் பதிலடி கொடுக்க பலமுறை முயன்றது றேஞ்சர்ஸ் அணி.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வீரர்கள் கைலாஷ், மதுசாந் ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-422)

## ஏபிசி வென்றது

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஏபிசி அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏபிசி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்சைன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஏபிசி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கேட்டது கிடைத்தது

தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை, இந்தியாவுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் விளையாடவுள்ளது. இந்தியாவுக்கு எதிராகவே தமது டெஸ்ட் வாழ்க்கை ஆரம்பமாக வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை வெளிப்படுத்தியிருந்த நிலையில் அது தற்போது நிறைவேறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை அதிகாரி, ஆப்கானிஸ்தானுக்கெதிராக இந்தியாவில் வைத்து இந்தியா விளையாடும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். எனினும் எந்த மைதானத்தில் ஆட்டம் நடைபெறும் என்றோ அல்லது மேலதிக தகவல்களோ வெளியாகவில்லை. (ம)

## சிம்பாப்வே அறிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான பகலிரவு டெஸ்ட் ஆட்டத்துக்கான சிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 26ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் வேகப்பந்து வீச்சாளர் பிளஸிங் முஸர்பனி, துடுப்பாட்ட வீரர் றயான் பேர்ள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் டெஸ்ட் குழாமில் இடம்பெறுவது இதுவே முதல்தடவையாகும்.

குழாம்: கிறேமி கிறீமர் (அணித்தலைவர்), ஹமில்டன் மசகட்ஸா, கிரேய்க் எர்வின், பிரெண்டன் ரெய்லர், சிபாபா, றெஜிஸ் சக்கப்பவா, ரசா, றயான் பேர்ள், சட்டாரா, முஸர்பனி, சிஸோரே, பீற்றர் மூர், சொலமன், ஜார்விஸ், மொபு. (ம)

## ஓய்வு என்பது தற்போதில்லை
### என்கிறார் குக்

"ஓய்வுபெறும் எண்ணம் தற்போதில்லை" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலிஸ்டர் குக். ஆஷஸ் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் அலிஸ்டர் குக்கின் 150ஆவது ஆட்டமாகும். அலிஸ்டர் குக்கிற்கு தற்போது 32 வயது. விரைவில் அவரது பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



''எதிர்காலம் குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. எப்போது ஓய்வு பெறுவேன் என்பது எனக்குத் தெரியாது. தற்போது முழுக் கவனமும் இந்த டெஸ்ட் மீதுதான் (இன்று ஆரம்ப மாகும் டெஸ்ட்) இருக்கிறது. எனது வாழ்க்கையில் மிகப்பெரிய ஆட்டம் இதுவாகும். என்னைப்பற்றி விமர்சித்தவர்களிடம் பேசுவதற்கு தற்போது நேரம் இல்லை. வலைப்பயிற்சியில் நான் இன்னும் கடினமாக உழைப்பது அவர்களுக்குத் தெரியாது. துடுப்பாட்டப் பயிற்சியாளருடனும் நிறைய நேரம் செலவிடுகிறேன். இன்னும் சாதிக்கும் உத்வேகத்தில் இருக்கிறேன். காயமின்றி தொடர்ந்து விளையாடிவருவது அதிர்ஷ்டமே" என குக் மேலும் தெரிவித்தார். (ம)



# வாழ்வா சாவா நிலையில் இங்கிலாந்து

ஆஷஸ் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்தில் வாழ்வா, சாவா நிலையில் இங்கிலாந்து அணி களமிறங்குகிறது. தொடரில் ஐந்து ஆட்டங்கள் முதலிரு ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் அல்லது குறைந்த பட்சம் ஆட்டத்தை சமநிலையில் முடித்தால் மட்டுமே இங்கிலாந்தால் தொடரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த முடியும். மொத்தத்தில் வாழ்வா சாவா நிலையில் இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது இங்கிலாந்து அணி. இலங்கை நேரப்படி காலை 8 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது. (ம)







# ரோகித் தாண்டவம் முறையான பதிலடி

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தனது மூன்றாவது இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்தார் ரோகித் சர்மா. இந்திய அணி 141 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் தவான். இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. தவானின் அரைச்சதம் 47 பந்துகளிலும், ரோகித்தின் அரைச்சதம் 65 பந்துகளிலும் பதிவாகின. அணி 115 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான்.

ரோகித்துடன் இணைந்தார் ஸ்ரோர்ஸ். மற்றுமொரு நீண்ட இணைப்பாட்டம் அரங்கேறியது. மற்றொரு இலக்கை இழக்காமல் 200 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. நிதானத்தில் இருந்து படிப்படியாக அதிரடியைக் கையிலெடுத்தார் ரோகித். மறுமுறையின் ஸ்ரோர்ஸும் அடித்தாடிக் கொண்டிருந்தார். 50 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பதிவு செய்தார் ஸ்ரோர்ஸ். 115 பந்துகளில் சதத்தை நிறைவுசெய்தார் ரோகித் சர்மா. ரோகித்தின் தாண்டவம் ஆரம்பமானது. அடிக்கொருதடவை பந்து பவிலியனுக்குச்சென்றுவந்தது. சிக்சர்களும் பவுண்டரிகளும் சீறிப் பாய்ந்தன. இலங்கை என்றால் ரோகித்துக்கு அவ்வளவு பிடிக்குமோ என்னமோ இலங்கைக்கு எதிராக தனது இரண்டாவது இரட்டைச்சதத்தையும் ஒட்டுமொத்தமாக தனது மூன்றாவது இரட்டைச் சதத்தையும் பதிவுசெய்தார். சதத்தின் பின்னர் இரட்டைச்சதத்தை எட்டுவதற்கு ரோகித்துக்கு வெறும் 36 பந்துகளே தேவைப்பட்டன. 88 ஓட்டங்களுடன் ஸ்ரோர்ஸ் ஆட்டமிழந்தார். முடிவில் 4 இலக்குகளை இழந்து 392 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.


பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்ப வீரர்களாக குணதிலக, தரங்க. வெறும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தரங்க. குணதிலக 16 ஓட்டங்களுடனும், திரிமன்னே 21 ஓட்டங்களுடனும் பவிலியனுக்குப் புறப்பட்டனர். ஒரு முனையில் மத்தியூஸ்-நிலைத்து நின்றாலும் மறுமுனையில் இலக்குகள் சரிந்துகொண்டிருந்தன. தனிநபராகப் போராடி சதம் கடந்தார் மத்தியூஸ். எனினும் ஆட்டத்தின் போக்கில் அவரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. மத்தியூஸ் 111 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 251ஓட்டங்களில் கட்டுப்படுத்தப்பட்டது.

141 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்தியா. ரோகித் ஆட்டநாயகனானார். (ம)

## ரோகித் சர்மாவுக்கு குவிகிறது வாழ்த்து

பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் நேற்று தனது மூன்றாவது இரட்டைச் சதத்தை நிறைவு செய்தார் ரோகித் சர்மா. அவருக்கு சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

நேற்றைய ஆட்டத்தில் 153 பந்துகளில் 208 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார் ரோகித். இந்த இரட்டைச் சதம் பன்னாட்டு ஒருநாள் அரங்கில் அவர் பதிவு செய்த மூன்றாவது இரட்டைச் சதமாகப் பதிவானது. இதற்கு முன்னர் கடந்த 2013ஆம் ஆண்டு அஸ்திரேலியாவுக்கு எதிராக 208 ஓட்டங்களும், 2014ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக 264 ஓட்டங்களையும் விளாசியிருந்தார். மூன்றாவது இரட்டைச் சதம் பதிவுசெய்ததை அடுத்து ரோகித்துக்கு சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. 'கிரிக்கெட்டின் கடவுள்' என்று அழைக்கப்படும் இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் 'ரோகித் விளையாடுவதைப் பார்ப்பது எப்போதும் சிறந்த தொரு வேலை' என்று குறிப்பிட்டுள்ளார். (ம)





## திருமண நாளாம்

இந்திய அணியின் பொறுப்புத் தலைவராகக் களமிறங்கி நேற்று இரட்டைச் சதம் விளாசியிருந்தார் ரோகித் சர்மா. நேற்றைய நாள் ரோகித் சர்மாவின் திருமண நாள் என்பது குறிப்பிடத்தக்கது. இரட்டைச் சதம் விளாசிய பின்னர் தனது திருமண மோதிரத்தை முத்தமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் ரோகித். ரோகித்தின் மனைவியும் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக நின்றார். (ம)



## தடைபெற்றார் நசீர் ஜம்செட்

பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின்போது ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று தெரிவித்து பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் ஜம்செட்டுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் ஒரு வருடகாலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரியில் இந்தத் தொடர் இடம்பெற்றது. பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர்பில் தண்டனைக்குள்ளாகும் ஐந்தாவது வீரர் நஸீர் ஜம்செட் ஆவார். சர்ஜீல் கான், காலிட் லத்தீவ், மொகமட் இர்பான், மொகமட் நவாஸ் ஆகியோருக்கு தண்டப் பணம் விதிக்கப்பட்டிருந்ததோடு, தடைகளும் விதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றுவோம் என்கிறார் திசர பெரேரா

“இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை நிச்சயம் கைப்பற்றுவோம்” என்று நம்பிக்கை தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் திசர பெரேரா.

நேற்றைய ஆட்டத்துக்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே திசர பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.



"ஒருநாள் தொடரை வெல்வதற்கு சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. பல அணிகள் இந்தியாவில் தொடரை வென்றது கிடையாது. தர்மசாலாவில் செயற்பட்டதை போன்று நாங்கள் ஏதாவது சிறப்பாகச் செய்ய வேண்டும். எங்களுக்கு எந்தவித அழுத்தமும் இல்லை. எங்களை பொறுத்தவரையில் மற்றுமொரு ஆட்டத்தில் விளையாடுகிறோம், அவ்வளவுதான். இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் தொடரை கைப்பற்றலாம் என்பது அனைவருக்குமே தெரியும். நாங்கள் 200 சதவீத உழைப்பைக் கொடுப்போம். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய அணி கடைசி இரு ஆட்டங்களிலும் வென்று தொடரை கைப்பற்றியிருந்தது. அவர்களால் அது சாத்தியமாகியிருந்தது. ஆனால் நாங்கள் எங்களது பணியிலேயே கவனம் செலுத்துவோம். 12 தோல்விகளுக்குப் பிறகு தர்மசாலாவில் வெற்றி பெற்றது சிறப்பான விஷயம். அதேபோன்றதிறனை நாங்கள் மீண்டும் வெளிப்படுத்தினால் தொடரைக் கைப்பற்றலாம்"என பெரேரா மேலும் தெரிவித்தார்.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைந்ததை அடுத்து இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் உள்ளன. மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே சம்பியன் என்ற நிலையே தற்போது காணப்படுகிறது. (ம)

## வென்றது செல்சி

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செல்சி வெற்றிபெற்றது.

நடப்புச் சம்பியனான செல்சியை எதிர்த்து ஹட்டெர்ஸ்பீல்ட் மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் செல்சி வெற்றிபெற்றது. செல்சி சார்பாக, டிமோ பக்காயோ, வில்லியான், பெட்ரோ ஆகியோர் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தனர். (ம)



## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 105
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2017.12.13

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,123,720/-

வெற்றி இலக்கங்கள்

09 21 68 74 P

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKotee டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
0114 824 824, 0112 33? 778

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2968 திகதி 13.12.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 47 48 67 71 M
போனஸ் இல.: 27
சனிக்கிழமை ஜக்பொட்: 33, 470,530/=

2017.12.16 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும் பச்சை நிற டிக்கட்டுக்கள்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## விற்பனைக்குண்டு

எம்மிடம் 40 Kg நிறையுடைய
கோதுமை தவிடு
விற்பனைக்குண்டு.
மொத்த விற்பனை விலை
40 kg 1300/=
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
**077 362 8944**

### வலிகாமம் வடக்கு பிரதேசசபை
### காங்கேசன்துறை (மல்லாகம்)
### வரவு செலவுத்திட்டம் - 2018

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கான வரைபு 14.12.2017 முதல் 26.12.2017 வரை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை எமது சபையின் தலைமை அலுவலகம் மற்றும் பொதுநூலகங்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்.**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை ,**
**காங்கேசன்துறை (மல்லாகம்) 14.12.2017**

### நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
### ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
### கட்டட புனரமைப்பிற்கான கூறுவிலை கோரல்

சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கடைத்தொகுதி திருத்தம் செய்வதற்காக கட்டட ஒப்பந்தகாரரிடம் இருந்துகூறுவிலைகள்கோரப்படுகின்றன. இவ்வேலையினை மேற்கொள்ள விரும்புவோர் இதற்கான கூறுவிலைப் பத்திரத்தைஆடியபாதம்வீதி, திருநெல்வேலியில்அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 50000/= ஐயும் . விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 1000/= ஐயும்செலுத்திய பின் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரத்தை 22.12.2017 இற்கு முன்னர் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்ட கேள்வி கோரல் பெட்டியிலிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பொது முகாமையாளர்,**
**நல்லூர் ப.நோ.கூ. சங்கம், ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

## வாகன சந்தை



பிரபல்யமான வாகனங்களின் தெரிவு மற்றும் கவர்ச்சிகரமான நிதி அல்லது குத்தகை வசதியினை எளிதாகவும் உச்ச வாய்ப்பை அளிக்கும் நிபந்தனைகளுடன் பெற்றுக்கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்.

இந்த மதிப்பு மிக்க வாய்ப்பை தவறவிடாதீர்கள்

உட்செல்லல் இலவசம்

**2017 டிசம்பர்**
**14 ஆம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில்**
**யாழ்ப்பாணம் சென்றல் பினான்ஸ் வளாகத்தில்**

**சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி**
கிளை - 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 077 210 6324,
077 210 8780, 077 739 3881, 077 252 0282

## தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா
## கொழும்பு பல்கலைக்கழகம்

க.பொ.த சா/த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்கமுடியும்.
உ/த 2017 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர்
பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.
விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என மூன்று பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு
Type DIT<Name> & send to 772395895

**MCS** யாழ். பல்கலைக்கழகம் அருகில்
Winner of Best Performances Award

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

**www.ambafrance-lk.org**

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## ஐரோப்பிய நாடுகளில்
## பெண்களுக்கான வேலை வாய்ப்புகள்

**வண்ணத்துப்பூச்சி சர்வதேச**
**பாடசாலையில் ஆசிரியர் பயிற்சி நெறியுடன்**
**ஐரோப்பிய நாடுகளில் இயங்குகின்ற**
**தமிழ்மொழி மூலமான**
**பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவை.**

பயிற்சிநெறிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:** G.C.E O/L 5 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.
G.C.E A/L 3 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்

100% விசா உத்தரவாதம்

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் அனுமதிகளை 16 ஆம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்

(நிபந்தனைக்குட்பட்டது)

071 603 9208
BUTTERFLY INTERNATIONAL SCHOOL, CHANKANAI.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் கடமையாற்றும் **செல்வி. இராசா காயத்திரி** அவர்களின் அன்புத் தாயார்.

**அமரர் இராசா அன்னபூரணம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**

## மரண அறிவித்தல்

## திருமதி அன்னபூரணம் இராசா




தம்பாலை. அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் இராசா நேற்று (13.12.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையர் - பொன்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற இராசாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் கேதீஸ்வரன் (வலி. கிழக்கு, வடபகுதி ப.நோ.கூட்டுறவு சங்கம்), ரமேஸ்குமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் நிறோஜாவின் அன்பு மாமியும் லலிதாதேவியின் பாசமிகு சகோதரியும் மார்க்கண்டு, நல்லையா (இந்தியா), அரியராசா ஆகியோரின் மைத்துனியும் சரஸ்வதி, சரோஜா (இந்தியா) ஆகியோரின் சகலியும் சுதர்சினி (ஜேர்மனி), சுதர்சன் (சுவிஸ்), நிசாந்தன் (பிரான்ஸ்), சோபனா, கீர்த்தனா, சங்கீதா, டினோயன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தம்பாலை, அச்சுவேலி.**



## சிற்றி - யுனைற்றெட் வீரர்கள் கைகலப்பு

மன்செஸ்டர் சிற்றி, மன்செஸ்டர் யுனைட்டெட் அணிகளுக்கிடையிலான ஆட்டம் முடிந்த பின்னர் இரண்டு அணிகளின் வீரர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. மன்செஸ்டர் சிற்றியின் வீரர்கள் வெற்றியைக் கொண்டாடிய விதம் மரியாதைக் குறைவாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு யுனைற்றெட்டின் ஓய்வறைக்கு கேட்குமளவுக்கு சத்தமாக இருந்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்தே இரண்டு அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்களுக்கிடையே சிற்றியின் அறைக்கு வெளியே கைகலப்பு ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## தெ.ஆபிரிக்காவில் வெற்றி தொடரும்

### சொல்கிறார் யாதவ்

"தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் இந்திய அணியின் வெற்றி தொடரும்" என்று தெரிவித்தார் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் யாதவ்.

இலங்கைக்கு எதிரான தொடரை முடித்துக் கொண்டு தென்னாபிரிக்கா புறப்படுகிறது இந்திய அணி. தென்னாபிரிக்காவில் வைத்து தென்னாபிரிக்காவுக்கு இந்திய அணி கடும் சவாலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்க ஆடுகளங்களுக்கு ஏற்ற வேகப்பந்துவீச்சுப் பலத்துடனேயே இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே யாதவ் இவ்வாறு தெரிவித்தார்.

"தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் எங்கள் மீது (இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் மீது) அதிகமான எதிர்பார்ப்பு உள்ளது. தென்னாபிரிக்காவில் சாதிப்பதற்கான திறமை எங்களிடம் இருக்கிறது. கடந்த 14 மாதங்களாக இந்திய அணி சொந்த மண்ணில் சிறப்பாக விளையாடி வெற்றிகளைப் பெற்றுள்ளது. தற்போது வெளிநாட்டில் வெற்றிபெற வேண்டிய நேரம் இதுவாகும்" என யாதவ் மேலும் தெரிவித்தார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.